KALKI 18.5.97 ரூ. 4.00

கல்கி

தி.மு.க.வின் ஓராண்டு: சோதனைகள்; சாதனைகள்!



நிலாவுக்கு ஒரு தங்கப் பதக்கம்!

— பாலகுமாரன்

கரும்பு சுவைக்க சன்மானமும் உண்டு!

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் டிர்ஸ்ட் வழங்கும் மகத்தான முதலீட்டுத் திட்டம்!

**ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ. 10,000 முதலீடு செய்யுங்கள்.
5 ஆண்டுகளில் ரூ. 20,000 (இரு மடங்கு)
பெற்றுக் கொள்ளுங்கள்.**

அத்துடன்

● 4 இலக்கியப் பொக்கிஷங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள் ●



1. 'கல்கி' வார இதழ் 5 ஆண்டுகளுக்கு (260 வாரங்களுக்கு) உங்கள் இல்லம் தேடி வரும்.
2. 'கல்கி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்கு பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.
3. பொன்விழாக் காணும் 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.
4. 'அமுதசுரபி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.



ரூ. 10,000 [ரூ. பத்தாயிரம்] 'ஸ்ரீராம் டிரஸ்ட்' பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

'ஸ்ரீராம் டிரஸ்ட்', ஏ-7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102.

---

1. முழுப்பெயர் : திரு/திருமதி/செல்வி..
முகவரி : ....
....
....

2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் :
முழுப்பெயர் :..

3. வாரிசுதாரர் : ....

4. கல்கி, அமுதசுரபி இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி :..
....
....

CHEQUE/ D.D. No. DT. ON

இடம்.. அன்புள்ள

தேதி.. முதலீட்டாளர் கையொப்பம்



தி.மு.க. ஆட்சியின் ஓராண்டு:

சோதனைகள்... சாதனைகள்!

கலைஞர் மு. கருணாநிதி (முதல்வர்– உள்துறை, நிதி, தொழில்):

இந்த முறை ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்னர் கலைஞர் "எங்களைத் தட்டிக் கொடுக்காதீர்கள்; தட்டிக் கேளுங்கள் என்றார். அதிர்ஷ்டவசமாக, இந்த ஒரு வருட காலத்தில் தட்டிக் கேட்பதற்கான வாய்ப்பை ஓரிரு முறைதான் கொடுத்திருக்கிறார் கலைஞர்.

பதவியேற்றவுடன் போட்ட முதல் உத்தரவே ஒன்றே கால் கோடி மக்களுக்குப் பயன்தரும் விதமாக, தலவரி, மனை வரி ஆகியவற்றை ரத்து செய்ததுதான். தொடர்ந்து தரமணி சினிமா நகரத்துக்கு எம்.ஜி.ஆர் பெயரையும், போக்குவரத்து நிறுவனத்துக்கு ராஜீவ் பெயரையும் வைத்து கூட்டணி கட்சிக்காரர்களை குஷிப்படுத்தினார் கலைஞர். சட்டமன்றத்தில் ஜனநாயகக் காற்று வீசத் துவங்கியது. இந்த ஒரு வருட காலத்தில் எல்லை மீறிய தாமரைக்கனி மட்டும் தான் வெளியேற்றப்பட்டார். எந்தவித குறுக்கீடும் இல்லாமல் த.மா.கா. உறுப்பினர்கள் குற்றச் சாட்டுக்களை வீச முடிகிறது. உள்ளாட்சி தேர்தல்களைச் சொன்ன படி நடத்தி முடித்தது பெரிய சாதனை.

சென்னை நகரைப் பொறுத்தவரை ஆசைத்தம்பி, கபிலன் போன்றோரை ஒழித்துக் கட்டி, ரவுடி ராஜ்யத்தை நசுக்கியது எல்லோராலும் பாராட்டப்பட்டது. அதே சமயம், ஆட்சி துவங்கியதிலிருந்து இன்றுவரை, தென் மாவட்டங்களில் தொடர்ந்து சமூக அமைதியின்மை நிலவி வருவது கசப்பான விஷயம் தான். ஆட்சிப் பொறுப்பேற்ற நான்காவது நாளே மீனாட்சி அம்மன்

கோயிலில் குண்டு வெடித்தது. தொடர்ந்து இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் குண்டு வெடித்திருக்கிறது. கொடுங்கையூர் உட்பட பல இடங்களில் வெடிகுண்டுகள், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. 19 முறை துப்பாக்கிச் சூடு நடந்து 19 பேர் இறந்து போயிருக்கிறார்கள். 13 பேர் லாக்-அப்பில் மரணம் அடைந்திருக்கிறார்கள். கடைசியாக நடந்த கவுன்சிலர் லீலாவதி கொலை உட்பட பல்வேறு கட்சிகளைச் சார்ந்த 21 பேர் வன் முறைக்கு பலியாக இருக்கிறார்கள். எனினும் ஆறுதலான விஷயம், ஆளும் கட்சிக்காரர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதுதான்!

ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை மற்றும் பி அண்ட் சி மில் தொழிலாளர் பிரச்னைகள் தீர்ந்தபாடில்லை என்றாலும் தொழில் வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் சென்னைக்கு இரண்டு பக்கமும் பெரிய கார் தொழிற்சாலைகளைக் கொண்டு வந்ததைச் சொல்லலாம். 1989ல் அறிவித்தபடி இப்போதுதான் திருப்பூரை ஏற்றுமதி நகரமாக்க 1300 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அண்ணா மறுமலர்ச்சி திட்டப்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, 'மாதிரி' கிராமமாக்கும் திட்டம் துவக்க நிலையில் இருக்கிறது. ஒரு வருடத்திற்கு 25,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. சென்னை எண்ணூரில் பெட்ரோ பார்க் உட்பட பல தொழில் அபிவிருத்தித் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

இந்த ஒரு வருடத்தை பிரமாதம் என்று பாராட்ட முடியாவிட்டாலும் பெரிதாகக் குறை ஏதும் சொல்ல முடியாது என்பதால், சபாஷ்!

அன்பழகன் *(கல்வி):*

சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் எந்தவித 'சொர்ண புஷ்ப'மும் கொடுக்காமல் வேலை வாய்ப்பு அலுவலக சீனியாரிட்டிபடி நியமனம் ஆகி இருக்கிறார்கள் என்பது இவரது துறையில் அமைதியாக நடத்தப்பட்ட ஒரு புரட்சி.



ஆர்க்காடு வீராசாமி *(மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரம்):*

ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் 'மிஸ்டர் சசிகலா' என்று வர்ணிக்கும் அளவுக்கு எப்போதும் முதல்வருடனேயே காட்சியளித்துக் கொண்டிருப்பவர். பொதுவாகவே ஆர்க்காடு மீது எல்லோருக்கும் சந்தேகப் பார்வை உண்டு. ஆனா ஆச்சர்யப்படும்படியான ஒ தகவல் என்னவென்றால் 'இவர் எதிலும் தலையிடுவது கிடையாது' என்று அதிகாரிகள் சொல்வதுதான். சென்னை புறநகர்ப் பகுதிகளில் சரிவரக் குடிநீர் கிடைப்பதில்லை. சம்பந்தப்பட்ட நகராட்சித் தலைவர்களிடம் முறையிட்டால், "குடிநீர்த்தொட்டிகளுக்குத் தண்ணீரை அனுப்பும் பம்பிங் ஸ்டேஷனுக்குச் சரிவர மின்சாரம் கிடைப்பதில்லை சார். ஆர்க்காட்டார் மனம் வைத்தால்தான் உண்டு!" என்று இவரைத்தான் கைகாட்டுகிறார்கள். கிராமப் புறங்களில் எப்படியோ!



நாஞ்சில் கி. மனோகரன் *(வருவாய்):*

பெரிய அளவு சாதனைகள் செய்ய வாய்ப்பில்லாத துறை. ஆனாலும் குறைந்த பட்சம், தமக்கென்று எதுவும் வருவாய் தேடிக் கொள்ளாத வகையில் செயல்பட்டு கண்ணியத்தை காப்பாற்றிக் கொண்டிருப்பவர்.



கோ.சி.மணி *(உள்ளாட்சி):*

விரல்விட்டு எண்ணக் கூடிய சில அமைச்சர்களைக் கண்டால் தான் அதிகாரிகளுக்கு பயம். அதில் ஒருவர் கோ.சி.மணி. தமது உடல் நிலையைப் பற்றி அதிகம் கவலைப்படாமல், கட்சிப் பணி, அமைச்சகப் பணி என்று ஓடியாடி உழைப்பவர். உள்ளாட்சித் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தியதில் இவருக்குப் பங்கு உண்டு.





வீரபாண்டி ஆறுமுகம் *(விவசாயம்):*

இவரைப் போன்ற ஸ்ட்ராங்கான கட்சிக்காரர்களுக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்காவிட்டால் பிரச்னை வரும் என்பதை

உணர்ந்ததால் அமைச்சராக்கப்பட்டவர். உள்ளாட்சித் தேர்தல்களில் நின்ற இவரது உறவினர்கள் தோல்வியுற்றது இவருக்குப் பெரிய அதிர்ச்சி. 'கருணா' நெல் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும்' என்று இவர் அறிவித்த போதுதான் அடடா, இவர்தான் விவசாயத்துறை அமைச்சரா என்று பலரும் ஆச்சரியப்பட்டார்கள்.

துரைமுருகன் *(பொதுப்பணி):*




அதிகாரிகள் டபாய்க்க முடியாத அளவுக்கு விவரங்களை விரல் நுனியில் வைத்திருப்பவர். அரசியல் காரணங்களுக்காக 'கிருஷ்ணா' விஷயத்தில் அவசரப்பட்டாலும், சாதனை, சாதனை தானே! காவிரி கடைமடைப் பகுதியில், கால்வாய்களைச் சீரமைத்தது மற்றொரு சாதனை.

பொன்முடி *(போக்குவரத்து துறை):*



சென்ற ஆட்சி. போக்குவரத்துத் துறையில் செய்த அலங்கோலங்களை சீர் செய்து, இப்போது தான் நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறார். கோயம்பேடு வணிக வளாகத்தைச் செயல்பட வைத்ததற்கு, நிறைய மார்க் கொடுக்கலாம். அப்பாவுக்கும் மகனுக்கும் சரிசமமான நெருக்கத்தில் இருப்பவர்.

வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் சாலை சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டபோது, நியமன முறையில் டெண்டர்கள் கொடுக்கப்பட்டதை உயர்நீதி மன்றம் கண்டித்துள்ளது. செய்தித்தாளில் இது குறித்துச் சில தவறான விவரங்கள் வந்துள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறார். எனினும் நீதிபதி, நியமன முறை அபாயகரமானது, ஊழலுக்கு வழி வகுக்கும் என்று கண்டித்திருப்பதை மறுப்பதற்கில்லை.




தமிழ்க்குடிமகன் *(தமிழ் வளர்ச்சி):*

'சாதனை என்ன?' என்று இவரது துறையில் விசாரித்தால், தமிழில் தட்டச்சு இயந்திரங்கள் வாங்கியதைப் பெருமையுடன் சொல்கிறார்கள். 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று செயல்படுவதால் வணிகர்களுக்கு இவர் தமிழ்க் 'கடி'மகன்!

கே.என். நேரு *(உணவு, பொது விநியோகம்):*

கலைஞர் மிகவும் நம்பிக்கை வைத்திருக்கும் அமைச்சர். சர்ச்சைக்குரிய துறையில் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் கொஞ்சம் அடக்கி வாசிப்பவர். வருமானத்துக்கு ஏற்றபடி ரேஷன் கார்டுகளைக் கொடுப்பது துணிச்சலான நல்ல விஷயம். நேருவின் பிளஸ் பாயிண்ட் அவருக்கு நம்பிக்கையாக இருக்கும் சில அதிகாரிகள்.



சுந்தரம் *(பால்வளம் மற்றும் குடிசை மாற்று வாரியம்):*

பால் விலையை ஏற்றி நடுத்தர மக்களிடம் வாங்கிக் கட்டிக் கொண்டவர். திமுக தேர்தல் அறிக்கையில் 'வாரிய வீடுகள் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கப்படும்' என்று சொல்லப்பட்டது. அமைச்சருக்கு அது ஞாபகம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள் குடியிருப்பவர்கள்.



ரகுமான்கான் *(தொழிலாளர் நலன்):*



எதிர்க்கட்சியாக இருந்தபோது பளிச்சிட்ட ரகுமான்கான், இப்போது தேட வேண்டிய நிலையில் இருக்கிறார்.


ஆலடி அருணா *(சட்டம்):*

மதுரையில் உயர்நீதி மன்றத்தின் கிளை வருகிறது, வருகிறது என்று ஒரு வருடமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளின் காலியிடங்களை நிரப்புவதில் அதிக ஆர்வமாகச் செயல்படுபவர். அச்சு மீடியாவில் ஒரு பகுதியை கலைஞருக்கு




ஆதரவான நிலை எடுக்கச்செய்ய பாடுபடுபவர். ஜெ. ஊழல் வழக்குகளை விசாரிக்க போடப்பட்ட விசேஷ கோர்ட்டுகள் விரைவாகச் செயல்பட முதல்வர் முக்கியக் காரணம் என்றால், இவர் அணில்.

தங்கபாண்டியன் *(கூட்டுறவு):*



கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் தி.மு.க.வினருக்கு அதிக வாய்ப்புக் கிடைக்க கொஞ்சம் 'துணிந்து' செயல்பட்டவர். இதன் காரணமாக, பல ஊர்களில் கூட்டுறவுத் தேர்தல்கள், அந்தரத்தில் நிற்கின்றன.

என்.கே.கே. பெரியசாமி *(கைத்தறி மற்றும் சுற்றுச் சூழல்):*



இந்திரகுமாரி செய்த ஊழல்களைக் கண்டுபிடிப்பதற்கே காலம் செலவாகிவிட்டது. தூத்துக்குடி ஸ்டெரிலைட் தொழிற்சாலைக்கு ஆதரவாக குடுகுடுவென்று இவர் அறிக்கை விட்டது விமர்சிக்கப்படுகிறது.



எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் *(பிற்பட்டோர் நலத்துறை):*

சிதம்பரம் பகுதியில் தி.மு.க.வை வளர்த்தவர்களில் ஒருவர் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி. அவரது மகன்தான் இவர்.

பொங்கலூர் பழனிச்சாமி *(வனத்துறை):*




சந்தன மரங்களை நியாயமாக ஏலம்விட ஏற்பாடு செய்து அரசு கஜானாவுக்கு வரும்படி கூடச் செய்தவர் என்ற பாராட்டு இருந்தாலும், திருப்பத்தூர் சந்தனக் கிடங்கு எரிந்து போனது ஒரு கரும் புள்ளி.

கே. பிச்சாண்டி *(வீட்டு வசதி):*

மக்களுடைய வீட்டு வசதியைக் கவனிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். வி.ஐ.பி.க்களுக்கும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களுக்கும் ஹவுஸிங் போர்டு வீடுகளையும், நிலங்களையும் ஒதுக்குவதில் (முறையாகத்தான்) பிஸியாக இருப்பவர்.





இ. பெரியசாமி *(ஊரகத் தொழில்துறை):*

திண்டுக்கல்காரர். 'யாருக்குத் தெரியாத காட்டில்' இருப்பது போன்று செயல்பட்டுக் கொண்டிருப்பதாகக் கோட்டை வட்டாரம் சொல்கிறது.

முல்லை வேந்தன் *(செய்தி-விளம்பரம்):*



அமைச்சரவையில் மாறுதல் என்று செய்தி வரும்போதெல்லாம் 'திக் திக்'குடன் இருப்பவர்.

புலவர் செங்குட்டுவன் *(அறநிலையத்துறை):*



இவரை சரியாகச் செயல்பட விடாதபடி பார்த்துக் கொண்டவர் ஓர் அதிகாரி. மிகவும் போராடி, சமீபத்தில் தான் அவரை மாற்றியிருக்கிறார் அமைச்சர். தற்சமயம் 350 பேர் கோவில் பணிகளில் நியமிக்கப்பட்டதில் சர்ச்சை எழுந்துள்ளது. அதனால் அடுத்து 300 பேர் நியமிக்கப்பட இருந்ததை முதல்வர் தலையிட்டு நிறுத்தி வைத்துள்ளார். இது இவருக்கு ஒரு கரும்புள்ளிதான்.

எஸ்.பி. சற்குணம் *(சமூக நலம்):*

சென்ற ஆட்சியில் இந்தத் துறையில் நடந்த ஏகப்பட்ட ஊழல்களால் ஸ்தம்பித்து நின்றபடியே இருக்கிறது துறை. மற்றபடி மாறுதல் என்றால், அமைச்சர் பெயரில்தான். முன்பு எஸ்.பி.சற்குணம் என்று




அழைக்கப்பட்ட இவர் அமைச்சரான பிறகு சற்குண பாண்டியன் என்றுதான் அழைக்கப் படுகிறார்.

சமயநல்லூர் செல்வராஜ் (ஆதிதிராவிட நலத்துறை):



மீனாட்சி கோயில் அறங்காவலர் என்பதாலோ என்னவோ எப்போதும் சட்டைப் பையில் குங்குமத்துடன் இருப்பவர். டாக்டர் கிருஷ்ண சாமி, ஆதிதிராவிட மக்களிடையே செல்வாக்குப் பெற்று வரும் நிலையில் இந்தத் துறையில் ...ர் சிறப்பாகச் செயல்பட்டால், ஆதிதிராவிடர்களிடையே டாக்டர் கிருஷ்ணசாமி இத்தனை செல்வாக்குப் பெற்றுவர முடியுமா என்பது உ...சிறப்புகளின் வாதம்!



சுரேஷ்ராஜன் (சுற்றுலா):


ஸ்டாலினுக்கு விசுவாசமானவர் இந்த கன்னியாகுமரிக்காரர்.

ஜெனிபர் சந்திரன் (மீன் வளம்):



ஆந்திராவில் அடித்த புயலில் தமிழ் நாட்டு மீனவர்கள் காணாமல் போக, அமைச்சருக்கு கடுமையான சோதனை. 'பேஷ்' என்று சொல்ல முடியாவிட்டாலும், தமது முயற்சிகளின் மூலம், தமது அக்கறையைக் காட்டியவர்.

அந்தியூர் செல்வராஜ் (கதர்):



'தீ மிதித்து' சர்ச்சையை உண்டாக்கியதன் மூலம், அமைச்சரவையில் தாமும் இருக்கிறார் என்பதைச் சகலமானவருக்கும் தெரிவித்துக் கொண்டவர். தொகுதியில் இவருக்கு செல்லப் பெயர் 'லோன்' செல்வராஜ். கடன் வேண்டுபவர்களுக்கு அதைப் பெற்றுக் கொடுப்பதில் சிறப்பாகச் செயல்படுபவர்.

தொகுப்பு : **ப்ரியன்**
படங்கள்: **சாய்வர்ஷா**

வாங்கிவிட்டீர்களா?

ஆசிரியர் சாவியின் நூல்கள்
திருமணப் பரிசுக்கு ஏற்ற புத்தகம்

1) **வாஷிங்டனில் திருமணம்** - ரூ.65
2) **என்னுரை**
கலைஞரின் முன்னுரையுடன் - ரூ.60
3) **விசிறி வாழை** - ரூ.65
4) **வேத வித்து**
கவியரசு வைரமுத்துவின் முன்னுரையுடன்-ரூ.40
5) **கேரக்டர்** - ரூ.30
6) **வழிப்போக்கன்** - ரூ.35
7) **நவகாளி யாத்திரை** - ரூ.25
8) **சிவகாமியின் செல்வன்**
பெருந்தலைவர் காமராஜ் பற்றிய வரலாறு- ரூ.35
9) **வடம் பிடிக்க வாங்க, ஜப்பானுக்கு** - ரூ.25
10) **தாய்லாந்து** - ரூ.35
11) **ஊரார்** - ரூ.30

இந்த 11 புத்தகங்களையும்
வாங்குபவர்களுக்கு
ரூபாய் 45/- தள்ளுபடி உண்டு.
தபால் செலவு தனி.

சாவி பப்ளிகேஷன்ஸ்
8A, ஏழாவது மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028.
போன்: 455912.

நிலவுக்கு ஒரு தங்கப் பதக்கம்!

சினிமாவில் டெக்னீஷியன்களுக்கு மரியாதை, டைரக்டர் ஸ்ரீதர் காலத்திற்குப் பிறகு வந்து விட்டது. அவர்களைத் தனியே அடையாளங்கண்டு, பாராட்டுகிற பாங்கு ஏற்பட்டு விட்டது. சினிமாவைப் பற்றி இடைவிடாது எழுதிக் கொண்டிருக்கும் பத்திரிகைகள் இதற்குக் காரணம்.

சினிமாவின் எல்லா அந்தரங்கங்களையும் வெட்டவெளிச்சமாக்கியதும் காரணம்.

நடிகர்களுடைய பலம், நல்ல டெக்னீஷியன்களின் அணிவகுப்பில் இருக்கிறது என்று தெரிந்து போய் விட்ட காலம்.

இந்த மாறுதலைப் புரிந்து கொண்டு நடிகர்களே டெக்னீஷியன்களானார்கள். அப்படி டெக்னீஷியனாக மாறிய இரண்டாவது நடிகர் கமலஹாசன். முதல் நடிகர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.

புரட்சி நடிகரோடு நான் பழகியதில்லை. ஆனால், கமலஹாசனை மிக நுணுக்கமாகப் பார்த்திருக்கிறேன்.

முதன் முதலாய் படம் தயாரிக்க கம்பெனி திறந்து, சொந்தமாய் கேமிராவும், விளக்குகளும் வாங்கின சந்தோஷத்தை கவனித்திருக்கிறேன்.

அந்த நேரம் அவர் வருமானம் மிக அதிகமில்லை. அப்படியே ஏதும் வருமானம் இருந்தாலும், அந்த வருமானம் வீடாகவோ, நிலமாகவோ, வீட்டிற்கு அத்தியாவசியமான பொருள்களாகவோ மாறாமல், கேமிராவாகவோ, லைட்டாகவோ மாறியது.

ஏனெனில், நடிகர் கமலஹாசன் ஒரு நல்ல டெக்னீஷியன்.

ஸ்டண்ட் நடிகர்கள் மட்டுமே வைத்திருக்கிற ஆயுதங்களை அவரும் வைத்திருப்பார். தூக்குக் கயிற்றிலோ, மலையுச்சியிலோ, மரக்கிளையிலோ தொங்குவதற்கான தோல் பெல்ட்டை சொந்த செலவிலே வாங்கி வைத்திருப்பார்.

நெருப்புப் பிடிக்கிற காட்சியா... ஒரு தீயணைப்புக் கருவி அவர் காரில் இருக்கும். அதுவும் அவர் காசில் வாங்கியதாகத்தான் இருக்கும். வேறு யாரோ அக்காட்சியில் நடித்தாலும் அவர் வீட்டிலிருந்து அது வந்துவிடும்.

ஏனெனில், நடிகர் கமலஹாசன் ஒரு நல்ல டெக்னீஷியன்.

புன்னகை மன்னனில், அருவியிலிருந்து காதலியோடு குதித்து, அவர் மட்டும் மரக் கிளையில் மாட்டி, தப்பித்து விடுகிற சீன். அவருடைய பெல்ட்டை அவர் இடுப்பில் அணிவித்து, மேலே சட்டைமாட்டி, சட்டையில் ஓட்டை போட்டு மெல்லிய கம்பியை பெல்ட்டில் பிணைத்து, இழுத்து மேலே தூக்க... இருபது இருபத்தைந்து அடி தூரத்தில் கமல் தொங்க வேண்டியிருந்தது.

அந்தக் காட்சிக்காக கமலஹாசன் கிட்டத்தட்ட அரைநாள் தொங்கினார்.

கீழே இறந்து போய்க் கிடக்கும் காதலியைப் பார்த்து, அவளைக் காப்பாற்ற முடியாத வேதனையோடு, தாம் மட்டும் பிழைத்துக் கொண்டோமே என்கிற சோகத்தோடு அவர் கதற வேண்டும்.

பெருங்குரலில் பிளிறலாய், மாட்டிக் கொண்ட கிளையிலிருந்து தப்பிக்கும் வண்ணமாய்க் கதற வேண்டும்.

கமலஹாசன் கதறினார்.

எல்லா கோணங்களிலும், எல்லாவித கதறல்களோடும் அந்தக் காட்சி எடுக்கப்பட்டது. கமலஹாசன் கீழிறக்கப்பட்டார்.

சட்டையைக் கழற்றி, பிறகு பெல்ட்டை கழற்றினால், பெல்ட் இறுகின இடத்தில் ரத்தக் கசிவு இருந்தது.

வெகு நிச்சயமாய் கன்றென்ற வலியை அந்த ரத்தக் கசிவு கொடுத்திருக்கும். இந்த விஷயம் எனக்கும், ஸ்டண்ட் மாஸ்டருக்கும், ஒரு மேக்கப் மேனுக்கும் மட்டுமே தெரியும். கமலஹாசன் வெளிப்படுத்தவில்லை.

'எரியுது இறக்கிவிடு' என்று கத்தியிருக்கலாம். முடியாது என்று யாரும் சொல்லப் போவதில்லை. கால்களை ஊன்றிக் கொண்டே தொங்கியது போல் நடித்திருக்கலாம். தெரியாதது போல் எடுத்து விட முடியும்.

நடிகர் கமலஹாசனுக்குத் தம்மை விட, தாம் நடித்து வெளிவரும் படம் முக்கியம். தாம் நடிக்கின்ற காட்சி முக்கியம்.

ஏனெனில், அவர் நல்ல நடிகர் மட்டுமில்லை. நல்ல டெக்னீஷியன்.

அதே படத்தில் இதே மாதிரி ஒரு பெல்ட், முப்பதடி உயரத்தில் அறுந்து, குத்துச் செங்கலில் விலா அடிபட்டு, சுருண்டு துடித்ததும் நானறிவேன்.

என்னவோ...னால் இது நேர்ந்தது என்று அவர் கத்தவேயில்லை. அந்த விபத்தைத் தம் தொழிலில் ஒரு பகுதியாக எடுத்துக் கொண்டார்.

ஏனெனில், நடிகர் கமலஹாசன் நடிகர்



பாலகுமாரன்

மட்டுமில்லை. நல்ல டெக்னீஷியன்.

அவரோடு நான் பணிபுரிந்த குணாவிலும் கமலஹாசனை என்னால் இப்படித்தான் பார்க்க முடிந்தது. யூனிட் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் கொடைக்கானலில் மனைவி குழந்தைகளோடு வந்து இறங்கி, பள்ளத்தாக்கு பள்ளத்தாக்காய், குகை குகையாய் வழுக்கும் புற்களில் கால் வைத்து, அபாயமான சரிவுகளில் லொகேஷனுக்காக சுற்றித் திரிந்த நடிகர் அவர். போய்ப் பார்த்துட்டு வந்து சொல்லுங்க. ஷூட்டிங் அன்னிக்கு நான் வந்துடறேன் என்று கண்ணாடி தம்ளரில் கள்ளம் வைத்துப் பேசுவதில்லை. இருள் புரியாத காலை ஏழு மணிக்கெல்லாம் லொகேஷன் பார்க்கக் கிளம்பிய வேகத்தை நானறிவேன்.

சினிமா வெறும் நடிப்புத் திறமையை மட்டும் நம்பியிருக்கவில்லை. அது உரத்துப் பேசும் வசனங்களால் மட்டும் உருவாகி விட முடியாது. அல்லது நெருப்புப் பொறி பறக்கும் வாள் சண்டை நிறைவைக் கொடுத்து விடாது. சங்கிலியால் கட்டப்பட்டு நெடு நேரம் பேசிக் கொண்டிருக்க முடியாது. சினிமா விஞ்ஞானத்தைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டது. அதனால்தான் அடுத்தடுத்து இந்த கலை அநேக மாற்றங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறது.

வெறும் நடிகனாக இருந்தால் சினிமாவை ஆள முடியாது. ஒரு நல்ல நடிகன் ஒரு நல்ல டெக்னீஷியனாகத் தன்னை தயார் படுத்திக் கொள்ள வேண்டும் என்று தம்மை மாற்றிக் கொண்டவர். மற்ற நடிகர்களையும் மாற்றிக் கொண்டிருப்பவர்.

அந்த ஆர்வம் இந்தியனிலும் வெளிப்பட்டிருக்கிறது. அழுத்தமான ஒரு திரைக்கதைக்கு மக்களின் மனோவேகத்தைப் பிரதிபலிக்கின்ற ஒரு பாத்திரப் படைப்புக்கு கமலஹாசன் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். முகம் இழுக்கும் ரப்பர் பசையை மாதக் கணக்கில் பொறுத்துக் கொண்டார். டைரக்டர் என்கிற டெக்னீஷியனோடு இன்னொரு டெக்னீஷியனாய்க் கலந்து கொண்டார்.

ஏன்...? பந்தா பண்ணுகிற நடிகராய் ஏன் கமலஹாசனால் இருக்க முடியவில்லை? அது அவர் இயல்பில்லை. அவர் இயல்பு தரையில் கால் பதித்து நிற்றல். வேரிலிருந்து ஆரம்பித்தல். அவர் வெறும் பூ இல்லை. முழுமையான மரம். பயனுள்ள தாவரம். அதனால் தான் சினிமாவின் எல்லா இடங்களிலும் அவர் தம் தடத்தைப் பதிய வைக்கிறார். தம் இருப்பை இடைவிடாது உணர்த்துகிறார். இதுதான் அவர் இயல்பு. இதுதான் அவர் சுபாவம்.

நிலவு குளுமையாக இருக்கிறது என்று ஏன் பாராட்ட வேண்டும்? எதற்குப் புகழ வேண்டும்? அது நிலவின் இயல்பு. நீங்கள் பாராட்டினாலும் பாராட்டாது போனாலும் நிலவு குளுமையாகத்தானிருக்கும். தன் வேலையை இடைவிடாது முழுமையாகச் செய்யும்.

ஆனால் நிலவின் குளுமையைத் தலைமுறை தலைமுறையாக எல்லா கவிஞர்களும் புகழ்வார்கள். எல்லா பாணர்களும் பாடல் இயற்றுவார்கள். எல்லா பாடகர்களும் கை நீட்டிப் பாடுவார்கள். எல்லா குழந்தைகளும் வாய் பிளந்து பார்க்கும். காதலர்கள் கண் கிறங்கி அதன் ஒளியில் நனைவார்கள். சில ஓநாய்களும் ஊளையிடும்.

நிலவு இயல்பாய் குளுமையை வாரி இறைக்கும். நிலவுக்குத் தங்கப் பதக்கம் கொடுத்தால் கொடுக்கிறவருக்குத்தான் சந்தோஷம். அந்த நிலவு அதை வாங்கி நன்றியுடன் வணங்கி ஓரம் வைத்துவிட்டு, அடுத்த படத்தின் வெற்றிக்காக அல்லாடிக் கொண்டிருக்கும். நிலவின் குளுமையைப் போல கமலின் உழைப்பு இயல்பானது.

அட்டை வண்ணப்படம்:
பிரவீண்குமார்



அனுகபூர் பேட்டி

ஓரிரு மாதங்களிலேயே சில நிகழ்ச்சிகள் அலுத்துவிடும். மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு வருடம்; அதற்கு மேல் என்றால் 'ஹா....வ்'தான்! ஆனால் தொடர்ந்து நாலு வருடங்களாக 'வாவ்' சொல்ல வைத்திருக்கும் டீ.வி. நிகழ்ச்சி ஒன்று உண்டென்றால் அது 'அந்தாக்ஷரி'தான். பொறாமைப்படும்படியான இந்த 'பாப்புலாரிட்டிக்கு' இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் அனுகபூர் ஒரு முக்கிய காரணம். நிகழ்ச்சியுடன் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டு, கரைந்து, உருகி, சிரித்து, மகிழ்ந்து, வெகுவாக உணர்ச்சி வசப்படும் அனு கபூர் ஒரு வித்தியாசமான மனிதர். இவருடன் இணைந்து இந்நிகழ்ச்சியை வழங்கியவர்கள், துர்கா ஜெஸ்ராஜ், அனிதா சஹானே, ரேணுகா சஹானே... தற்சமயம் பல்லவி ஜோஷி. அனுகபூரைச் சந்தித்த போது...

கேள்வி : உங்கள் பின்னணி... சுருக்கமாக....

அனு கபூர் : தந்தை போபாலில் ஒரு மொபைல் தியேட்டர் கம்பெனி நடத்தி வந்தார். சந்தர்ப்பவசத்தால் நடிகனானேன். என் அண்ணன், தம்பி, தங்கை (சீமா கபூர்) எல்லோருமே கலைஞர்கள்தான். காமிரா முன் முகம் காட்டத் தெரிந்த நாளிலிருந்து சின்ன, பெரிய திரைகளில் நடித்து வருகிறேன்.

கே : உங்கள் கோணத்தில் முழுமையான 'எண்டர்டெய்னர்' யார்?

அ.க. : சமூக இலக்கோடும் பொறுப்புணர்ச்சியோடும் மக்களை மகிழ்விப்பவன் தான்!

கே : அந்தாக்ஷரி பிரவேசம் பற்றி...

அ.க. : நாலு வருடம் முன்பு இதைத் துவக்க நினைத்த போது இது 'க்ளிக்'காகுமா எனச் சிலர் பயந்தனர். 'ஜீ'யின் சேர்மனும், அந்தாக்ஷரி பொறுப்பாளர்களும் உறுதியுடன் என்னை அணுகி, முழு சுதந்தரமும் அளித்தனர். இன்று இதன் மகா வெற்றிக்கு இறைவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

கே : அந்தாக்ஷரியின் வெற்றிக்குக் காரணம்?

அ.க. : அது நம் கலாச்சாரத்துடன் ஒன்றிய விளையாட்டு; திருமணங்களில், பார்ட்டிகளில், அந்தக் காலத்து குருகுலங்களிலும் கூட, (ஸ்லோகங்களை வைத்துக் கொண்டு) அந்தாக்ஷரி விளையாடினார்கள். அடுத்து, இசை என்பது நமது வேரோடு ஊறிய ஒன்று. எல்லாவற்றுக்கும் மேலாக, குடும்பத்தோடு அமர்ந்து ரசிக்கும்படியான "க்ளீன் ப்ரோக்ராம்" இது!

"டி.வியால்

கே : இந்நிகழ்ச்சிக்குப் பாடத் தெரிந்திருந் தால் போதுமா? இசை ஞானமும் அவசியமா?

அ.க. : இசையைப் பற்றிய ஞானம் ஓரளவு உண்டு என்பதால் என்னை நான் பாடகன் என்று சொல்லிக் கொள்ளவில்லை; நிகழ்ச்சியை நடத்துபவர்களுக்கு, அந்நிகழ்ச்சி பற்றிய பூரண அறிவிருந்தால், ரசிகர்களுக்கு லாபம்!

கே : ஸோனு நிகம் வழங்கும் 'சரிகம' நிகழ்ச்சியால் இதற்கு பாதிப்பு உண்டா?

அ.க. : அது இசையறிவு நிறைந்தவர்களிடையே நடத்தப்படும் பாட்டுப் போட்டி; இது இனிமையான இசை விளை

"கமலுடன் நடிக்க ஒரு வாய்ப்புக் கிடைக்குமா?"

அந்தாக்ஷரி'யை அனுகபூருடன் இணைந்து வழங்கும் பல்லவி ஜோஷியின் குடும்பமும் கலைக் குடும்பம்தான், மராத்தியப் பெண்ணான இவர், குஜராத்தி படத்தில் தமது மூன்றாவது வயதிலேயே குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர். இசையை முறையாகக் கற்காவிட்டாலும் நன்றாகவே பாடக் கூடியவர். 'உங்கள் டிரஸ் நன்றாக இருக்கிறது; ஐஷேடோ பிரமாதம்!' என்றெல்லாம் ரசிகர்கள் பாராட்டும் போது குளிர்ந்து போகிறார். அனு கபூருக்கு நேர் எதிர். அனு கபூரைக் கேட்டால் "கவர்ச்சி காட்டுகிற நீச்சல் குளக் காட்சி எதற்கு?" என்பார். இவரோ, "நீச்சல் குளத்தில் நீச்சல் உடையில் இருந்தால்தான் இயற்கையாக இருக்கும்!" என்கிறார். அனுகபூரைப் பற்றிக் கேட்டால், "அவர் நடை, உடை, பாவனை எல்லாமே வித்தியாசமானவை. அதனால் அவர் தமது சகாவை டாமினேட் செய்வது போல்தான் இருக்கும். இதைப் புரிந்து கொண்டு விட்டால் பிரச்னையே இல்லை!" என்கிறார்.

இறுதியாக இவர் நம் மூலமாக விடுக்கும் வேண்டுகோள் ஒன்று. என்ன தெரியுமா? "எனக்கு ரொம்பவும் பிடித்த நடிகர் கமலஹாசன். அவருடன் ஒரு தமிழ்ப் படத்தில் நடிக்க வாய்ப்புத் தாருங்களேன்!"





...நமது கலாசாரம் நலிகிறது!”

யாட்டு; இரண்டும் அடிப்படையில் வேறுபட்டவை என்பதால், ஒன்றால் மற்றொன்றுக்கு பாதிப் பில்லை.

கே : டீ.வி. நமது கலாசார நலிவுக்கு ஒரு சாதனமா? அப்படி என்றால் அதற்கு யார் பொறுப்பு?

அ.க. : ஆம்! டீவியால் நமது கலாசாரம் நலிந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்கு நாமே பொறுப்பு. வெள்ளையர்கள் நம்மிட மிருந்து உடன் கட்டை ஏறுவதையும், குழந் தைத் திருமணங்களையும், பெண் குழந்தை களைக் கொல்வதையுமா கற்றார்கள்? அவர்கள் நம் யோகத்தை, வேதத்தை, வேதாந்தத்தை, ஆயுர்வேத முறைகளை அல்லவா எடுத்துச் சென்றார்கள்? நாம் மட்டும் ஏன் அவர்களிட மிருந்து விஞ்ஞான அறிவையும், சுயகௌரவ மின்றி எல்லா வேலைகளையும் செய்யும் தன் மையையும் கற்காமல், மடோனாவையும் மாரிஜிவானாவையும் கட்டிக் கொண்டு அழ வேண்டும்? அவர்கள் புத்திசாலிகள்; நம்மிட முள்ள நல்லதை எடுத்துக் கொண்டார்கள்! நாம் மடையர்கள்; அவர்களிடமிருந்து கெட்டதை சுவீகரிக்கிறோம்.

கே : ‘பே வாட்ச்’ ‘போல்ட் அண்ட் ப்யூட்டிஃபுல்’ போன்றவற்றை நீங்கள் பார்ப் பதுண்டா?

அ.க. : ஓரிரு எபிஸோடுகள் பார்த்தேன்; அதற்கு மேல் பார்க்கப் பிடிக்கவில்லை! மிகவும் மூன்றாந் தரமான தொடர்கள்.

கே : நிச்சயமான வெற்றி எனத் தெரிந் தாலும், ஆபாசமான ரோலில் நடிக்க மறுப்பீர்களா?

அ.க. : நிச்சயமாக. நான் மரணத்தைக் கண்டே பயப்படாதவன். பிழைப்புக்கா கவா பயப்பட வேண்டும்? ஆபாசமான தென்றால், பட்டினி கிடந்து மடிந்தாலும் கூட நடிக்க மாட்டேன்.

கே : நிகழ்ச்சியை இணைந்து வழங்குபவர் பற்றி...

அ.க. : உண்மையில் இசைக் குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல் லிக் கொண்ட துர்காவையும், பல்லவி யையும் விட, சாதாரண பின்னணியி லிருந்து வந்த ரேணுகா சஹானேதான் என் ஃபேவரிட்! அவர் பேசினாலும், சிரித்தாலும், பாடினாலும், உருகி னாலும் அதில் ஒரு இயற்கைத் தன்மை மிளிரும். இதய பூர்வமாக அவர் எதையும் செய்ததால் அது உடனே ‘கிளிக்’காகி விட்டது. பண்டிட் ஜஸ்ராஜின் மகள் என்று பீற்றிக் கொண்ட துர்கா ரொம்பவும் ஆட்டி வைத்துவிட்டார். திடீ ரென்று என் முன் அழுவார், அப்புறம் பத்திரிகை யாளர்களிடம் நான் அவரை அழுக்கப் பார்ப்ப தாகவும், நானே டாமினேட் செய்வதாகவும் புருடா விடுவார். ஒருவர் திறமையை மற்றவ ரால் மறைக்க முடியுமா? தான் யார் என்பதை அறிந்து கொள்ளாமல் இன்னார் மகள், அன்னார் பேத்தி என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருப் பதால் வரும் வினை இது.


கே : தமிழ் ரசிகர்களுக்கு ஏதேனும் கூற விரும்புகிறீர்களா?

அ.க. : இந்தியன் என்ற உணர்வுடன் செயல்படுங்கள்; இளைய தலைமுறையின ரிடம், பொறுப்புணர்ச்சி, உண்மை, நேர்மை போன்ற பண்புகளை விதையுங்கள்.

பேட்டி : **ஜெயஸ்ரீ ராஜ்**

...இது சானல் 1! மேலும் பல டீ.வி பக்கங்கள் தொடர்கின்றன....

கல்கி — பாலு ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும்



"என்ன, இது மாப்பிள்ளையே காரை ஓட்டிட்டு வர்றார்?"

"டிரைவர் பேட்டாவை எனக்குக் கொடுத்தால் நானே காரை ஓட்டிட்டு வர்றேன்'னு சொன்னாராம்!"

— ஆர். அப்துல் சலாம்.

"மாப்பிள்ளை கார் ரேஸரா இருக்கலாம், அதுக்காக கல்யாண ஊர்வலத்தையும் இவ்வளவு வேகமாக வெச்சுக்கிட்டா எப்படி?"

— கே. யுவராஜ்.



"யார் உண்டியல் குலுக்கறது?"

"பொண்ணோட அப்பாதான் 'கல்யாண நிதி' திரட்டுறாரு...!"

— கே. பாஸ்கரன்.



"கூல்டிரிங்க்ஸ் கம்பெனிக்காரங்க ஜான வாச ஊர்வலத்தை ஸ்பான்ஸர் பண்றதா ஒப்பந்தம்!"


— ஜி.எல். ராஜேந்திரன்.



"இது ஒரு வித்தியாசமான கல்யாண ஊர்வலம்கறியே? என்ன அது?"

"கார்ல பொண்ணு, மாப்பிள்ளையோட இருக்கற நாலைஞ்சு வாண்டுகள்ல ஒண்ணு இந்தப் புதுமணத் தம்பதிகளோடது!"

— மு. முருகேசன்.



கல்யாண ஊர்வல ஜோக் போட்டி - 3 முடிவு

"ரொம்ப பிசியான முகூர்த்தமாச்சே... கார் கிடைக்கலையாம்... அதான் இப்படி.."


— ஜெயாப்ரியன்



"ஜானவாச ராகிங்கா? கேள்விப்பட்டதே இல்லியே?"

"இப்ப புதுசா ஏற்படுத்தி இருக்காங்களாம்! ஜானவாச கார் டயர்கள்ல உள்ள காற்றைப் பிடுங்கி விட்டுட்டாங்க பெண் வீட்டுக் காரங்க!"


— சாமா



"என்ன இது? கல்யாண ஊர்வலத்துல மாப்பிள்ளை நடந்து போறாரு!"

"மாப்பிள்ளை இந்த வார்டு கவுன்சிலர்... கல்யாண ஊர்வலம் நடந்த மாதிரியும் இருக்கும்; அப்படியே தொகுதியை சுத்திப் பாத்த மாதிரியும் இருக்கும்னுதான்..."


— இரா. தாமோதரன்.



"கல்யாண ஊர்வலத்தை அட்டகாசமாக வீடியோ பண்றாங்களே.. மாப்பிள்ளை வீட்டார் ஏற்பாடா... பெண் வீட்டார் ஏற்பாடா..?"


"C.B.I ஏற்பாடுங்க..."

— எஸ். சிவகடாட்சம்.




" 'இல்லறமே நல்லறமாய் வாழ்வோர்க்கு என்றுமில்லை எய்ட்ஸ் பயம்'னு கல்யாண ஊர்வலத்துல கவர்ன்மென்ட் பிரசாரம் செய்யணுமா?"

—எஸ். தவமணி.



"என்ன பண்றது? நூறு பவுன், வரதட்சணை, ஒரு லட்சம் வேணும்னா, இப்படி பொண்ணை வெச்சு மாப்பிள்ளை காரைத் தள்ளணும்னு பொண்ணு வீட்டிலே சொல்லிட்டாங்க!"

— தே. ராஜாசிங் ஜெயக்குமார்.



பிரசுரமாகியுள்ள ஒவ்வொரு ஜோக்குக்கும் ரூ. 100 பரிசு பெறுகிறது...

நடிகைகள் ரசிப்பவை!

‘டெலிவிஷனில் நீங்கள் விரும்பிப் பார்க்கிற நிகழ்ச்சிகள் என்ன?’ என்று சில நடிகைகளிடம் கேட்டோம்...

“நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் பார்க்கத்தான் சின்னடைப் பிய்த்துக் கொள்ள வேண்டியிருக்குன்னு இல்ல... வரிசையா வர விளம்பரங்களும் நம்மை சின்னடைப் பிய்ச்சுக்க வைக்குது... ஆனா, அதுல எனக்கு மிகவும் பிடிச்சது, செல்லுலர் போன் விளம்பரம். ஹோட்டலில் அந்தப் பெண் உட்கார்ந்து கொண்டு தமது சிறிய செல்லுலர் போனை காதோடு சேர்த்தபடி யாருடனோ பேசிக் கொண்டிருப்பார். இதைப் பார்க்கிற ஒரு நடுத்தர வயதுக்காரர் ஒருவர் தம்மிடம்தான் அவர் பேசுகிறாரோ என்று நினைத்தபடி காலரைத் தூக்கிவிட்டபடி அவர் அருகில் சென்று நிற்பார். அவரைப் பார்க்கிற அந்தப் பெண், அவர் ஹோட்டல் வெயிட்டர் என்று நினைத்து ‘ஒன் பிளாக் காப்பி ப்ளீஸ்...’ என்று கூறியபடியே தமது செல்லுலர் போனில் பேசி முடித்துத் தலையை உயர்த்துவார். அப்போது அந்த நடுத்தர வயதுக்காரரின் முகத்தில் டின் டின்னாக வழியும் பாருங்கள் விளக்கெண்ணெய்!

• சங்கவி



• சிம்ரான்





• சுவலட்சுமி



• சௌந்தர்யா

நான் ரொம்பவும் ரசிப்பேன். இப்படி அவரை வழியச் செய்த அந்தப் பெண்ணின் பெயர் கூட எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் அவருக்கு விசிறியாகி விட்டேன்!" - சுவலட்சுமி இப்படிச் சொல்லிவிட, தொடர்ந்து மற்ற நடிகைகளிடமும் அவர்களுக்குப் பிடித்த விளம்பரம் பற்றிக் கேட்டோம்.

சிம்ரான் : அதுவொரு வெளிநாட்டு சாக்லேட் விளம்பரம். ஒரு சிறுவன் ஒரு குட்டியானைக்கு சாக்லேட் கொடுப்பது போல் போக்குக் காட்டி ஏமாற்றி, அவனே தன் வாயில் போட்டுக் கொண்டு விடுவான்! யானைக் குட்டிக்கு சாக்லேட் கிடைக்காத ஏமாற்றம்.

அடுத்த காட்சியில் ஒரு பிரும்மாண்டமான திருவிழா. அதில் அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று வந்து கொண்டிருக்கும். வரும் வழியில், வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிற ஒருவரைத் தனது தும்பிக்கையால் பளாரென்று அறைந்து விட்டுச் செல்லும். என்ன காரணம் தெரியுமா? சாக்லேட் கிடைக்காமல் ஏமாந்த அந்தக் குட்டி யானைதான் இந்த யானை. அன்று ஏமாற்றிய



• ஸ்ருதி

அந்தச் சிறுவன் வளர்ந்து பெரியவனான பிறகும் அவனை மறக்காமல் இன்று பழிவாங்குவதாகக் காட்சி! அதாவது அந்த அளவுக்குத் தங்களது சாக்லேட் பிரமாதமானது என்று சொல்கிறார்கள்!



• ரோஜா

முதல்வரின் புதிய இல்லம்!

தி.மு.க வின் 65 லட்ச உறுப்பினர்களுக்கும் லேமினேட் செய்த கம்ப்யூட்டர் உறுப்பினர் கார்டு வழங்க இருக்கிறார்கள். இதற்காக உறுப்பினர்களைப் பற்றிய விவரங்களை கம்ப்யூட்டரில் பதிவு செய்யும் வேலை அறிவாலயத்தில் ஜரூராக நடந்து கொண்டிருக்கிறது. சுமார் நூறு பள்ளி மாணவ, மாணவிகள் இந்த வேலையில் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். கோடை விடுமுறையில் பொழுதும் போகிறது; வருமானமும் வருகிறது!

அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள கோஷன் பிளாக் வீடுகளில் ஒன்றில் எப்போதும் கூட்டம் நிரம்பி வழிகிறது. 'இங்கே அமைச்சர் யாரும் இல்லையே' என்று பார்த்தால் அங்கே அன்பில் பொய்யா மொழி. 'தளபதி'யைச் சந்திக்க முடியாதவர்கள், அன்பில் பொய்யா மொழியைச் சந்தித்துச் செல்கிறார்கள். ஸ்டாலினுக்காக ஒதுக்கப்பட்ட வீடு இது.

ஆட்சிக்கு வந்த புதிதில் கிரீன்வேஸ் சாலைக்கு கலைஞர் குடியேறப் போகிறார் என்று செய்தி அடிபட்டது அல்லவா! அதற்கான நேரம் இப்போதுதான் வந்திருக்கிறது. ஆனால் 'பூம்பொழில்' முதலமைச்சரின் அலுவலக இல்லம் என்ற அளவில்தான் இருக்கும். பார்வையாளர்களை மட்டும்தான் முதல்வர் அங்கே சந்திப்பாராம்.

அறிவாலயத்தின் பின்புறம் இருந்த கலைஞர் கல்யாண மண்டபம் முற்றிலும் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் மிக நவீன வசதிகளுடன் கல்யாண மண்டபம் கட்ட இருக்கிறார்கள். சென்னையிலேயே இது போன்ற சிறப்பான கல்யாண மண்டபம் இல்லை என்று சொல்லுமளவிற்கு வர இருக்கிறது இந்தக் கல்யாண மண்டபம். இது தவிர லேட்டஸ்ட் வசதிகளுடன் மாநாட்டு அரங்கமும் உருவாக இருக்கிறதாம்.

— தில்லப்பா

ரோஜா : 'ஐ லவ் யூ ரஸ்னா!' என்று அந்தக் குழந்தை ஒரு விரலை உயர்த்தியபடி கண்களைச் சிமிட்டும் அழகே தனி. ஏதோ நமது பக்கத்து வீட்டுக் குழந்தை சொல்கிற மாதிரி இருக்கும். இதைப் பார்க்கிறபோதெல்லாம் நானும் குழந்தையாகி 'ஐ லவ் யூ ரஸ்னா' என்று என்னையும் அறியாமல் சொல்லி விடுவேன்!

சங்கவி : 'பெப்ஸி'யின் டேங்கரை ஓட்டிக் கொண்டு போகும் ஒரு டிரைவர் சந்து பொந்துகளிலெல்லாம் புகுந்து புறப்பட்டு வேக வேகமாக ஓட்டிச் செல்லுவார். திடீரென்று ஓரிடத்தில் பலமான சப்தத்துடன் பிரேக் போட்டு டேங்கரை நிறுத்துவார். அங்கே கொக்கோ கோலா விற்பனை செய்கிற கடையில், ஒரு கொக்கோ கோலாவை வாங்கி அவசர அவசரமாகக் குடிப்பார். 'பெப்ஸி' டேங்கரை ஓட்டிச் செல்பவர் கூட விரும்பிக் குடிப்பது கொக்கோ கோலாதான் என்று அவர்கள் விளம்பரப்படுத்துகிற துணிச்சலும் புத்திசாலித்தனமும் என்னை மிகவும் கவர்ந்த ஒன்று.

ஸ்ருதி : விபுல் சாரி விளம்பரத்தில் வருகிற ரேணுகா சகானேயின் சிரிப்பு என்னை மிகவும் கவர்ந்த ஒன்று. 'இந்தச் சேலைகளைத்தான் என் மனைவியும் கட்றாங்க!' என்று அந்த ஆண் சொல்ல, 'அவங்க ரொம்பவும் புத்திசாலி!' என்று ரேணுகா சொல்ல, 'இன்னொரு முறை சொல்லுங்க!' என்று அவரைப் பார்த்து அந்த ஆண் சொல்லுகிறபோது, ரேணுகாவின் முகத்தில் வெட்கம் படர்ந்து ஒரு சிரிப்புச் சிரிப்பாரே... மறக்க முடியாத சிரிப்பு அது. இந்த விளம்பரம் வருகிற போது வேறு வேலை செய்து கொண்டிருந்தாலும் அதை அப்படியே போட்டுவிட்டு வந்து பார்த்து ரசிப்பேன்.

சௌந்தர்யா : அழகான சிறு சிறு டின்களில் கொக்கோ கோலா அறிமுகமான போது வந்த விளம்பரம் இது. ஓர் இளைஞர் ஆர்வமாக கொக்கோ கோலா டின்னை வாங்கி உடைத்துச் சாப்பிடுவார். சாப்பிட்டு முடித்த பிறகு அந்த டின் அவரது உதட்டில் மாட்டிக் கொண்டு தொங்கும். அதை எடுப்பதற்காக டாக்டரிடம் செல்லுவார் அந்த இளைஞர். அங்கே வரிசையாக உட்கார்ந்து காத்திருப்பவர்களின் உதடுகளிலும் கொக்கோ கோலா டின்கள் தொங்கிக் கொண்டிருக்கும்! உதட்டில் மாட்டிக் கொண்டாலும் மக்கள் அதைப் பொருட்படுத்தாமல் அதையே வாங்கிக் குடிக்கிறார்கள் என்று 'நெகடிவ்' விஷயத்தையே 'பாஸிடிவ்'வாக்கி விளம்பரப்படுத்துகிற புத்திசாலித்தனத்தைப் பார்த்துப் பார்த்து ரசித்திருக்கிறேன்.

தொகுப்பு : ஈஸ்வர்



காங்கிரஸில் சோனியா!

த.மா.கா வின் நிலை என்ன?

காங்கிரஸில் சேருவதற்கு இந்த கால கட்டத்தை ஏன் தேர்ந்தெடுத்தார் சோனியா? "எப்படியும் இன்னும் ஆறேழு மாதங்களில் பாராளுமன்றத்துக்குத் தேர்தல் வர வாய்ப்பிருக்கிறது. அந்த நேரத்தில் நாடு முழுவதும் அறிந்த ஒரு தலைவர் பிரசாரம் செய்தால் காங்கிரஸின் செல்வாக்கு கூடும். கேசரி, டெல்லி அரசியலில், வேண்டுமானால் சாணக்கியத்தனங்களைக் காட்டலாமே தவிர, வோட்டு வாங்கும் 'முகம்' அவருக்குக் கிடையாது. ஆகவே சோனியா வரவு எங்களுக்கு இன்ப அதிர்ச்சி!" என்கிறார் தமிழக 'கேசரி' காங்கிரஸ் பிரமுகர் ஒருவர்.

"காங்கிரஸோடு தாம் இணைந்து இணக்கமாகச் செயல்பட்டால்தான், வரும் வருடங்களில் ராகுலை சரியான விதத்தில் 'புரொஜக்ட்' செய்ய முடியும் என்று கூட அவர் நினைத்திருக்கலாம்" என்றார் அந்தப் பிரமுகர்.

குற்றாலத்தில் இடி இடித்தால் கும்பகோணத்தில் மழை பெய்யுமோ இல்லையோ, டெல்லியில் சோனியா காங்கிரஸில் சேர்ந்தது, தமிழகத்தில் பல அரசியல் மாற்றங்களுக்கு அடிக்கல் போட்டிருக்கிறது. காரணம், நேரு குடும்பத்தின் மீது, மிகவும் மதிப்புள்ள, அவர்களை மீறி நடக்காத மூப்பனார், காங்கிரஸிலிருந்து பிரிந்து தனிக்கட்சி நடத்துவது இங்குதானே! "காங்கிரஸை வழி நடத்தத் தலைவர் கிடைத்துவிட்டார்!" என்று மூப்பனார் கருத்துத் தெரிவித்து விட்டாலும், சோனியாவின் முடிவு தமிழ் மாநில காங்கிரஸ் என்ற கட்சியின் நிலைப்பாட்டை கேள்விக்குறியாக்கி இருக்கிறது.

கடந்த ஒரு வருடமாக, புதுவிதமான சுதந்தரத்தை அனுபவித்தவர்களுக்கு, "மீண்டும் காங்கிரஸில் இணைந்து, கோஷ்டி பூசல், டெல்லி நிர்ப்பந்தம்" என்று சரித்திரம் திரும்பி விடுமோ என்ற பயம்!

"இரண்டு மனம் வேண்டும்; இறைவனிடம் கேட்பேன்..." இந்த பாடல் இப்போது எங்கள் தலைவருக்கு நன்றாகவே பொருந்தும். தமிழகத்தைப் பொறுத்தவரை தி.மு.க.வோடு உள்ள உறவை நீடிக்கலாமா அல்லது முறித்துக் கொள்ளலாமா? டெல்லியைப் பொறுத்த வரை, காங்கிரஸில் இணைந்து விடுவதா; தனிக் கட்சியைத் தொடர்வதா? இப்படிச் சிக்கலான விஷயங்களில் முடிவெடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார் அவர். ஆனால் தலைவர் என்ன முடிவெடுத்தாலும் ஏற்றுக் கொள்வோம்" என்கிறார் த.மா.கா பிரமுகர் ஒருவர்.

இந்த சூழ்நிலை த.மா.கா.வில் இருக்க, தமிழ்நாடு கேசரி காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, மிகவும் குஷியாக இருக்கிறார். "தமிழ்நாடு காங்கிரஸில் உள்ளவர்களுக்கும் சரி; பிரிந்து போன காங்கிரஸ்காரர்களுக்கும் சரி, சோனியாவின் இந்த முடிவு மிக்க மகிழ்ச்சியை உண்டாக்கி இருக்கிறது. தமிழகம் முழுவதும் இருந்து எனக்கு தொலைபேசி வந்த வண்ணம் உள்ளது. பல இடங்களில் பிரிந்து சென்ற காங்கிரஸார், மீண்டும் கட்சியில் இணைந்து விட்டார்கள். ஆகவே நான் ஏற்கெனவே சொன்னபடி, தமிழ்நாடு காங்கிரஸ், ஒரு பலமான எதிர்க்கட்சியாக உருவாகி வருகிறது!" என்று நம்மிடம் சொன்னார் தங்கபாலு.

"த.மா.கா. மீண்டும் காங்கிரஸோடு இணைந்து விடுமா?"

"பிரிந்து போன காங்கிரஸ் தலைவர்கள் மீண்டும் இணைய வேண்டும் என்று தலைவர் கேசரி ஏற்கெனவே அழைப்பு விடுத்திருக்கிறாரே!" என்றார் தங்கபாலு.

சோனியா, காங்கிரஸில் இணைந்த காரணத்தால், வரும் தேர்தலில் தமிழகத்தில் புது அணிகள் உருவாகும் வாய்ப்பு பளிச்சென்று இருக்கிறது. த.மா.கா மீண்டும் காங்கிரஸோடு இணையும் பட்சத்தில் நிச்சயமாக அ.தி.மு.க.வோடு காங்கிரஸ் கூட்டு இருக்காது. திருநாவுக்கரசு உட்பட எம்.ஜி.ஆர் விசுவாசிகளைச் சேர்த்துக் கொண்டு ரஜினி ஆதரவைப் பெறலாம். அப்படி த.மா.கா. இணையாத பட்சத்தில் குறைந்த பட்சம் த.மா.கா- காங்கிரஸ் கூட்டணி உருவாகலாம். மறுபுறம் அ.தி.மு.க- ம.தி.மு.க.வின் கூட்டணி இருக்கும்.

"ரஜினி, வரும் தேர்தலில் யாருக்கும் ஆதரவு தெரிவிக்க மாட்டார்; மௌனம் சாதிப்பார் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். மேலும், மூப்பனார், கலைஞர் இருவருமே 'கனிந்த' தலைவர்கள். தாங்கள் பிரிந்தால் யாருக்குப் பயன் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே எங்கள் கூட்டணி தொடரும். வேண்டுமானால், காங்கிரஸ் இந்தக் கூட்டணியில் இணையலாம். ம.தி.மு.க, அ.தி.மு.க.வோடு சேர்வதன் காரணமாக, அந்த கட்சியில் பெரிய பிளவு ஏற்பட்டு, மீண்டும் எங்களோடு பெரும் அளவில் தொண்டர்கள் இணைவார்கள். இதன் காரணமாக எங்கள் கட்சியின், பலம் இன்னமும் கூடும்!" என்று நம்பிக்கை தெரிவித்தார் தி.மு.க. பிரமுகர் ஒருவர்!

— கௌசி



"அழுது அடம் பிடித்து அனுமதி வாங்கினேன்!"

"**பி**றந்து வளர்ந்தது எல்லாம் தூத்துக் குடி. அப்பாவுக்கு ஸ்பிக்கில் உத்தியோகம். சென்னையில் உறவினர்கள் யாரும் கிடையாது. எனவேதான், சன் டீ.வியில், செய்தி வாசிப்பவராகத் தேர்வு செய்யப்பட்ட போது, 'தனியாக மெட்ராஸில் போய் எப்படி இருப்பாய்? நியூஸ் படிக்கிற வேலை வேண்டாம்' என்று சொல்லிவிட்டார் என் அப்பா.

"எனக்கோ, கல்லூரியில் படித்த நாட்களிலிருந்தே டீ.வியில் செய்தி வாசிக்க வேண்டும் என்பது லட்சியம். அந்த லட்சியம் நிறைவேற வாய்ப்பு வந்தபோது, அப்பா தடை போட்டதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினேன். ஒரு வழியாய் ஓ.கே. சொன்னார்கள். இப்போது லேடீஸ் ஹாஸ்டலில் தங்கியிருக்கிறேன்" என்கிறார் கார்த்திகா தேவி.

படித்தது எம்.ஏ. இலக்கியம். தமிழில் பள்ளி நாட்களிலிருந்தே ஆர்வம். பல பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றிருக்கிறார். மூன்று வயதில் நடனம் கற்றுக் கொள்ள ஆரம்பித்து, பல மேடை நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளார். முறைப்படி கர்நாடக இசையும் கற்றவர் கார்த்திகா. வீணை வாசிக்கவும் தெரியும்.


"ஆரம்பம் முதலே ஷோபனா ரவியின் ரசிகை. அவரது தமிழ் உச்சரிப்புதான், செய்தி வாசிப்பாளராக வேண்டும் என்ற ஆசையை என்னுள் தூண்டி விட்டது!" என்கிறார்.

சன் டீ.விக்கு செய்தி வாசிப்பாளர்கள் தேவை என்று விளம்பரம் வந்ததும் விண்ணப்பித்து விட்டு, மறுநாள் முதல் தினமும் மொட்டை மாடியில், பேப்பரை வைத்துக் கொண்டு, உரக்க செய்திகள் படித்துப் பயிற்சி செய்ய ஆரம்பித்து விட்டாராம்.

ஒரு நாள் இரவு பத்தரை மணிக்கு சன் டீ.வியிலிருந்து உடனே புறப்பட்டு வரச் சொல்லி டெலிபோன் வர, மறுகணமே கார்த்திகாவின் மனம் சென்னைக்கு வந்து சேர்ந்து விட்டது. மறுநாள் ரயிலில் அவர் வந்தார்.

தற்போது, பிற்பகலில் செய்தி வாசிக்கிற கார்த்திகா தேவி, முதலில் படித்த செய்தி நரவரக் கொலை வழக்கு சம்பந்தப்பட்டது. அது குறித்துப் பேசும்போது இவர், "நோ சென்டிமென்ட்ஸ்" என்று சொன்னாலும் அம்மாவுக்கு லேசான வருத்தந்தானாம்!

சந்திப்பு: மௌஷ்மி





1997 மே 18
ஈசுவர வைகாசி 4
மலர் : 55
இதழ் : 42

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




வளர்ச்சியைத் தடுக்கும் வன்முறை அரசியல்!

“தென் மாவட்டங்களில் வன்முறை குறைந்து விட்டது. கடந்த வருடங்களில் நடந்ததை ஒப்புநோக்க, கணிசமாகக் குறைந்து விட்டது. சட்டம் ஒழுங்கு கட்டுக்குள் இருக்கிறது. கோவில் பட்டியிலும் சின்னமனூரிலும் சில கை கலப்புகள் நடந்தாலும் அதற்குக் காவல் துறையைக் குற்றம் சொல்வது அபாண்டம். வகுப்புக் கலவரங்களைக் கட்டுப்படுத்த சென்னையில் சிறப்புக் காவல் படைப் பிரிவு ஏற்கெனவே தொடங்கியாகி விட்டது. இதோ, மதுரை, கோவை, திருச்சியிலும் விரைவில் அத்தகைய பிரிவுகள் செயல்பட ஆரம்பிக்கும்....”

- சட்டம் ஒழுங்கு பிரிவு ஐ.ஜி. காளிமுத்து, பத்திரிகையாளர்களை அழைத்து இவ்வாறு பேசிய நாள் முதலாக (மே 2) தென் மாவட்டங்களில் வகுப்புக் கலவரங்கள் வெடித்து, வளர்ந்து, பரவி உச்ச நிலைக்குப் போயின!

காவல் துறையையோ, ஐ.ஜி. காளிமுத்துவையோ மட்டுமே இந்த நிலைமைக்கு நேரடி பொறுப்பாக்க முடியாது. ஆனால், அரசுத் தரப்பு நடவடிக்கைகள் இன்னும் முன்னெச்சரிக்கையுடனும் முன்யோசனையுடனும் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

போக்குவரத்துக் கழகப் பெயர் மாற்றம் தொடர்பாக ஏற்கெனவே சச்சரவுகள் நிலவி வந்த நேரத்தில், தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பின் தலைவர் கிருஷ்ணசாமி, ஜாதி உணர்வுகளைத் தூண்டும் விதமாக அவர் பொதுக் கூட்டமொன்றில் பேச, காவல் துறையினர் அவரைக் கைது செய்துள்ளனர்.



சிறிதாக ஆரம்பித்த கலவரங்கள் பெரிதாகி விட்டன. பஸ்கள் உடைப்பு, சாலை மறியல், ரயில் பாதை மறியல், ரயில் ஓட்டுனர் தாக்குதல், போலீஸ் துப்பாக்கிச் சூடு, அதில் ஒருவர் மரணம் இப்படி உச்சகட்டத்தை அடைந்திருக்கின்றன.

உடனே, டாக்டர் கிருஷ்ணசாமியை ஜாமீனில் விடுவிக்க வேண்டியிருந்திருக்கிறது.


இவ்வாறு முன்னுக்குப் பின் முரணாக நடவடிக்கைகள் எடுப்பதால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க, அரசின் செயல்திறன் பேரில் நம்பிக்கை குறைந்து போகும்.

டாக்டர் கிருஷ்ணசாமியின் பொதுக் கூட்டப் பேச்சைத் தொடர்ந்து, முதல்வர் அவரைத் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு உரையாடியிருக்கலாம். தமது ஆட்சி, அனைத்துத் தரப்பினரின் தேவைகளையும் கவனத்தில் கொள்ளத் தயாராய் இருப்பதை உணர்த்தியிருக்கலாம். சட்டம் ஒழுங்கு ரீதியில் மட்டுமின்றி அரசியல் ரீதியிலும் இது உதவியிருக்கும்.

இந்தக் குறையை ஓரளவு ஈடுசெய்யும் விதமாக, ஆதி திராவிடர் மற்றும் ஷெட்யூல்ட் பிரிவினர் நல உயர்மட்டக் குழு கூட்டத்தை அறிவித்துள்ளார் முதல்வர். இந்த 19 உறுப்பினர் உயர்மட்டக் குழுவில் டாக்டர் கிருஷ்ணசாமியும் இடம்பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதி திராவிடர்களுக்கெதிரான அக்கிரமங்களைத் தடுக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு நலத் திட்டங்கள் வகுக்கவும், அப்பிரிவினரின் உரிமைகளை பலப்படுத்தவும் பாதுகாக்கவும் யோசனைகள் தெரிவிக்கப்படவுள்ளன.

இவற்றையெல்லாம் வரவேற்கலாம். ஆனால், எப்பிரிவினரானாலும் ஜாதியின் பெயரால் மக் களின் உணர்வுகளைத் தூண்டுவது மிகவும் அபாயகரமானது. உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருக்கும் மக்கள் வன்முறையில் ஈடுபடும்போது, சம்பந்தப்பட்ட தலைவர்கள் அதைக் கண்டிக்கா மல் இருப்பது அபாயம் என்பதோடு, அக்கிரமமும் கூட. டாக்டர் கிருஷ்ணசாமியும் வேறு சில தலைவர்களும் இத்தகைய அக்கிரமங்களுக்குத் துணைபோவது கண்டனத்துக்குரியது.



நடந்த கலவரங்களின்போது, கையில் நாட்டு வெடிகுண்டு வைத்திருந்த ஒருவர் அந்த குண்டுக்கே பலியாகியிருக்கிறார். கூட்டத்தினர் நாட்டு வெடிகுண்டுகளையும் பெட்ரோல் குண்டுகளையும் சர்வசாதாரணமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பொதுமக்களை இத்தகைய திட்டமிட்ட, கூசாத வன்முறைக்கு அழைத்துச் செல்லும் சக்திகளை உடனடியாக அடக்க வேண்டும்.

மே 17 அன்று கூடவிருக்கும் உயர்மட்டக் குழு, இந்த விஷயத்தையும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளட்டும். பொதுவாழ்க்கைக்கு வந்துள்ள தலைவர்களுக்கு மக்கள் ஆதரவு மட்டும் இருந்தால் போதாது; சகிப்புத்தன்மையும் விமர்சனங்களை ஏற்கும் பக்குவமும் அவர்களுக்குத் தேவை. நிதானமும் பொறுப்புணர்வும் இருப்பது அவசியம்.

ஆதி திராவிடர்களானாலும் சரி, பின்தங்கிய எப்பிரிவினரானாலும் சரி, அவர்களைச் சலுகைகளால் ஒருபுறம் குளிப்பாட்டிவிட்டு, மறுபுறம் அவர்களின் உணர்வுகளைப் பகடைக் காயாக்கி வன்முறை அரசியல் பண்ணுவது, அந்த எளியவர்களை வளரவிடாமல் அமுக்கி வைக்கும் முடிவான வழி. ஜாதி உணர்வு என்கிற திரை கண்களை மறைப்பதால் அவர்களும் இதை அறியாமலே தலைவர்களின் கைப்பாவைகளாகி விடுகிறார்கள்.

இந்தத் தருணத்திலாவது தமிழக அரசு விழிப்புணர்வு கொண்டு, இந்நிலை மாறுவதற்கு ஒரு தொடக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

டாக்டர் கிருஷ்ணசாமி போன்றோரும் அரசின் நல்ல நோக்கத்தை உணர்ந்து, தங்கள் தொண்டர்களின் நீண்ட கால நலன் கருதி ஒத்துழைப்பைத் தர வேண்டும்.

எந்தத் தலைவருமே, ஜாதியுணர்வையோ, வன்முறையையோ தூண்டும் விதமாக மறந்தும் ஒரு சொல் பேசக்கூடாது என்றொரு தீர்மானம் மே 17 அன்று நிறைவேற்றப்படட்டும். அதற்கு டாக்டர் கிருஷ்ணசாமியும் மற்ற தலைவர்களும் முழு மனத்துடன் ஆதரவு அளிக்கட்டும்.

கல்கி கன்ஸல்டன்ஸி



கப்பல் கோதுமை - ஒரு கண்ணீர்க் கதை!

'கோதுமை சாப்பிடுங்கள்! உடலுக்கு ஆரோக்கியம்' - இப்படி தமிழக அரசின் உணவுப் பொருள் வழங்கு துறை பிரசாரம் செய்து வருகிறது. அரிசிப் பற்றாக்குறையைச் சமாளிக்க ஒரு யுக்தி இந்தப் பிரசாரம். ஆனால் இந்த கோதுமைக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய நிலை இப்போது!

கங்கை நதிப்புரத்து கோதுமைப் பண்டம் பஞ்சாபில்தான் அதிகமாக விளைகிறது என்பது நாம் அறிந்ததே! பஞ்சாப் விவசாயிகள் கடும் உழைப்பாளிகள். எக்கச்சக்கமாக உற்பத்தி செய்து குவித்து விட்டார்கள். மத்திய அரசிடம் கொள்முதல் விலையை உயர்த்தச் சொல்லிக் கேட்கிறார்கள்.

விவசாயத்துறை அமைச்சரோ, 'மத்திய அரசு ஏற்கெனவே விவசாயிகளுக்கு உரமானியம், இலவச மின்சாரம் என்று ஏகப்பட்ட சலுகைகள் காட்டி வருகிறது. இனியும் கொள்முதல் விலையைக் கூட்ட முடியாது' என்று மறுத்து விட்டார்.

விவசாயிகள் விட்டுக் கொடுப்பதாயில்லை.

பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதலின் ஆதரவும் இருக்கிறது.

பார்த்தார். விவசாயத்துறை அமைச்சர்... 'பஞ்சாப் கோதுமை இல்லாவிட்டால் என்ன... நாங்கள் அமெரிக்க கோதுமையை இறக்குமதி செய்து கொள்வோம்...' என்று ஒரு முடிவை அறிவித்து விட்டார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் பஞ்சாப் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 475 ரூபாய். அமெரிக்க இறக்குமதி கோதுமைக்குத் தா இருப்பதோ குவிண்டாலுக்கு 675 ரூபாய்! அந்த அமெரிக்க கோதுமை கப்பலில் வந்து சேர 2-3 மாதங்கள் பிடிக்கும்!

போதாக் குறைக்கு, கப்பலில் ஏற்றப்பட்டுள்ள கோதுமைக்கு அடிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்து மிக உடல்நலக் கேடு விளைவிக்கக் கூடியது என்று வேறு புகார் குரல்கள் எழுந்துள்ளன.

இவ்வளவையும் மீறி இந்த அமெரிக்க கோதுமையைத்தான் இறக்குமதி செய்வோம் என்று மத்திய அரசு அசட்டுப் பிடிவாதம் பிடிக்கிறது. அந்த கப்பல் கோதுமைக்குத் தரும் கூடுதல் தொகையை பஞ்சாப் விவசாயிகளுக்குக் கொடுத்தால் என்ன...?

அங்கேதான் 'ஈகோ' இடிக்கிறது! முன் வைத்த காலைப் பின் வைக்க மனமின்றி அரசு பொதுமக்கள் பணத்தை இப்படி விரயமாக்குகிறது.


'இந்தச் சோகக் கதையை கல்கி கன்ஸல்டன்ஸி பகுதியில் சொல்வானேன். இது தலையங்க விஷயமல்லவா...?' என்று கேட்பீர்கள். இந்த நடவடிக்கையால் அரசாங்கம் இழப்பது பஞ்சாப் விவசாயிகளின் நல்லுறவை மட்டுமல்ல; பொக்கிஷம் போன்ற அந்நியச் செலாவணியையும்தான்! அந்நியச் செலாவணி கையில் எவ்வளவு முக்கியம். பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு எது எத்தனை அவசியம் என்பதை நான் கடந்த காலத்தில் விரிவாக விளக்கியது நினைவிருக்கும். அதை இப்படி மூர்க்க பிடிவாதத்தினால் விரயம் செய்வது எந்தப் பொருளாதாரக் கொள்கையில் சேர்த்தி!'

மத்திய அரசு அமைப்பான Food Corporation of Indiaதான் தானியக் கொள்முதலை கவனித்துக் கொள்கிறது. இந்த FCI அமைப்புக்கு உள்நாட்டு வங்கிகளிடம் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கும் மிகப் பெரிய சலுகை அளிக்கப்பட்டுள்ளது. சுமார் பத்தாயிரம் கோடி ரூபாய் வரை இப்படிக் கடன் வாங்க முடியும். இவ்வளவு வசதி இருந்தும் 'அந்நியச் செலாவணியை விரயமாக்குவேன்' என்கிறார் விவசாயத்துறை அமைச்சர்!

இத்தனைக்கும், பிரதமர் குஜ்ரால் பஞ்சாபின் மைந்தர்!

கோதுமை விவசாயிகளுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த மக்களுக்கும் இப்படி அல்வா கொடுக்கிறார்களே!

— வி. கோபாலன்



படம் : கோபிநாத்

வி.கே.ராமசாமி

தங்கவேலு என்கிற ஒரு சகலகலா வல்லவரின் 'சினிமா என்ட்ரி' என் மூலமாக அமைந்தது என்பதில் எனக்கு இன்றும் தனிப்பட்ட பெருமிதம் உண்டு. 'பணம்' படத்தில் நான் நடிக்கவிருந்த- என்.எஸ்.கே. சொன்னதால் அதைத் தங்கவேலுவுக்கு விட்டுக் கொடுத்த- அந்த ஆடிய பாத்தம் முதலியார் வேடம், அவரை ரசிகர்களுக்கு ஒரு மாறுபட்ட நகைச்சுவை- குண சித்திர நடிகராக அறிமுகப்படுத்தியது. தம் திறமையாலும் கடுமையான உழைப்பாலும் அவர் புகழின் உச்சிக்கே சென்றார்! கடைசி வரை, தாம் ஏறிய உயரத்திலிருந்து இறங்காமல் நின்று காட்டிய பெருமை அவருக்கு உண்டு.

தங்கவேலுவுடன் என் நட்பு, நாடக காலத்திலிருந்தே தொடங்கியதுதான். அவர் ஆரம்பத்தில் எம்.கே. ராதாவின் நாடக கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்தாலும் பின்னாளில் கலைவாணர் நாடக சபாவுக்குத்தான் வந்து ஐக்கியமானார்.

மென்மையான சுபாவம், பழகுவதற்கு இனியவர், திறமைசாலி- இதெல்லாவற்றையும் விட அவரிடம் என்னைக் கவர்ந்த விஷயம் வேறு ஒன்று உண்டு. அதுதான் கிரகிப்புத் தன்மை.

வாலி மாதிரி அவர்! எதிரே இருப்பவர் யாரானாலும் சரி, அவரது திறமையைக் கூர்ந்து கவனித்து, அப்படியே கிரகித்துக் கொண்டு விடுவார்.

நடிகர்களுக்கு இந்தத் திறமை மிக அவசியம் என்பேன். பிற மொழி, பிற தேசத்துப் படங்களைப் பார்க்கும்போது அவற்றில் என்னென்ன புதுமைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனித்து, கிரகித்துக் கொள்வது முக்கியம். அதை அப்படியே 'காப்பி' செய்யக்கூடாது. நம் மொழி, கலாசாரம், பண்பாடு இவற்றுக்கேற்ப அதை மாற்றி உபயோகிப்பதில் தவறில்லை.

தங்கவேலுவின் கிரகிப்புத் திறன் அத்தகையது. உலகின் சிறந்த விஷயங்கள் என்னென்னவோ, அத்தனையைப் பற்றியும் அவர் அறிந்திருப்பார். தம் நடிப்பை மெருகூட்டுவதற்காக அவர் மிகவும் மெனக்கெடுவார். உழைப்புக்கு அஞ்சாதவர். முன்னேற வேண்டும் என்கிற வெறி உள்ளவர்.

அவரது குணத்தை முழுவதும் அறிந்தவராக, அவரது வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்புத் தருபவராக எம். சரோஜா அவரது வாழ்க்கைத் துணைவியாக அமைந்தது அதிர்ஷ்டம்.

சொல்லப் போனால் தங்கவேலுவின் வெற்றியில் ஆரம்பமே எம். சரோஜாதான் என்பேன்! 'சிங்காரி' என்ற படத்தில் இருவரும் முதல் முதலாக ஜோடி சேர்ந்து நடிக்க, படம் வெற்றி கண்டு, 'வெற்றிப்பட ஜோடி' என்கிற முத்திரை அவர்கள் மேல் விழுந்து, தொடர்ந்து பல படங்கள் இணைந்து நடித்தார்கள். வாழ்க்கையிலும் இணைந்தார்கள்!



• தங்கவேலு

சென்ற தலைமுறை நடிகர்களாலே எங்களிடம் ஒரு சிறப்பம்சம் உண்டு. இப்போதும் எப்போதும் எண்ணிப் பெருமை கொள்ளத்தக்க விஷயம் அது.

தோழமை உணர்வு!

காகா ராதாகிருஷ்ணன், தங்கவேலு, சி.எஸ். பாண்டியன், டி.எஸ். துரைராஜ் இன்னும் பல நகைச்சுவை நடிகர்களெல்லோரும் என்னுடன் சற்றேறக்குறைய ஒரே கால கட்டத்தில் சினிமாவுக்கு வந்தவர்கள்.

வளர்ச்சியும் சரிவும் மாறி மாறி வந்தாலும், தொழில் ரீதியில் போட்டி இருந்தாலும் தனிப்பட்ட முறையில் எல்லோருமே நெருங்கிய

நான்

• சாரங்கபாணி



நண்பர்களாகவே இருந்தோம். திரையுலகில் இதுபோல் அமைவது அபூர்வம். எங்களுக்கு அப்படி அமைந்ததற்குக் காரணம்- தொழில் என்பதைத் தாண்டி, நாங்கள் கலையை நேசிப்பவர்களாக இருந்ததுதான். திறமையான நடிப்பை யார் தந்தாலும், உடனே பாராட்டி விடத் தயங்க மாட்டோம். இந்தப் பண்பு, கலைவாணரிடமிருந்து நாங்கள் கற்றது.

இந்தப் 'பாராட்டுகிற' விஷயத்தில் மற்ற எல்லோரையும் தூக்கிச் சாப்பிடக் கூடியவர் ஒருத்தர் அன்று இருந்தார். மிகப் பெரிய நடிகர். அன்பைத் தவிர வேறெதையுமே அறியாதவர். 'அடுத்தவருக்கு ஓர் உதவி செய்வதென்றால், இவரைப்போல்தான் செய்ய வேண்டும்' என்று அன்றைய திரையுலகமே போற்றிப் பாராட்டிய கலைஞர் அவர். மனிதாபிமானத்தின் நடமாடும் வடிவம் - அவர் கே. சாரங்கபாணி!

சாரங்கபாணியின் நடிப்பு யாருடைய பாதிப்புமில்லாத ஒருவித 'சுயம்பு' குணம் கொண்டது. அந்தக் காலத்தில் அவரது நடிப்புக்காக மட்டுமே படம் பார்க்க ஒரு பெரும் ரசிகர் கூட்டம் இருந்தது! நகைச்சுவை நடிகர்களுக்கு ஒரு நட்சத்திர அந்தஸ்து வாங்கித் தந்ததில் கலைவாணருக்குப் பின் சாரங்கபாணியின் பங்கு மிகப் பெரியது.

அத்தகைய மேதையுடன் என் முதல் படத்திலேயே அறிமுகமாகிற பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

"போற போக்கைப் பார்த்தால் காந்தி படம் எடுக்கறேன்; நீங்க காந்திக்கு அப்பாவா நடிக்கணும்னு வந்து கேட்பாங்க போலிருக்கு. என்னை விட்டுருங்க. வேற யாரையாவது போட்டுக்குங்க" என்று தயாரிப்பாளரிடம் நான் சொல்லி அனுப்பி விட்டேன்.



நடிக்க மறுத்த கோங்டர்!

தேவகோட்டை ஏவி.எம் ஸ்டுடியோவில் நாம் இருவர் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்த சமயம்.

'இன்னும் கொஞ்ச நாளில் படம் முடிந்து விடும்; மூட்டை கட்டிக் கொண்டு சென்னை இளம்ப வேண்டியதுதான்' என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் சென்னை எனக்கு அப்போது அறிமுகமாகாத, புதிய ஊர். அங்கு போய் எங்கு தங்குவது? யாரைத் தெரியும்? அறிமுகமானவர்களே இல்லாத ஊரில் எப்படிப் புழங்குவது?

இப்படியான குழப்பத்தில் நான் இருந்தபோது தமது வழக்கமான, கம்பீரச் சிரிப்புடன் என்னை அணுகி, "என்ன விஷயம்? பலமான யோசனை?'' என்று ஆதரவாகக் கேட்டார் சாரங்கபாணி.

அப்போது அவரும் ஏவி.எம்மில்தான் இருந்தார். அந்தப் பழக்கம்.

''ஒண்ணுமில்லண்ணே! இங்க வேலை முடிஞ்சி, சென்னை போகணும். அங்க எங்க தங்கறதுன்னு யோசிச்சிட்டிருக்கேன்'' என்றேன் தயங்கியபடி.

''அட, என் வீடு அங்க அரிசிக்காரத் தெருவுல இருக்கில்ல? அப்புறம் என்ன கவலை?''



''நீங்க ஏன் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவிச்சிருக்கீங்க?''

''வயசாயிடுச்சுல்ல... முன்னே மாதிரி கட்சி எல்லாம் தாவ முடியாதே!''

— கீழை அ. கதிர்வேல்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

சடாரென்று பதில் வந்தது அவரிடமிருந்து! அதுதான் சாரங்கபாணி! உதவிக்குச் சளைக்காத உத்தமர் அவர்.

அவர் சொன்னபடியே, நான் சென்னை வந்தபோது, அவர் வீட்டில்தான் பத்து நாட்கள் தங்கினேன்.

வெறுமனே தங்க வைத்து, சோறு போட்டதோடு அவர் நின்றுவிடவில்லை. அவரைச் சந்திக்க வந்த தயாரிப்பாளர்களிடமெல்லாம் என்னை அறிமுகப்படுத்தி, மிக உயர்வாக என் நடிப்புத் திறனைப் பாராட்டிப் பேசுவார்.

"நாம் இருவர்ல இந்தப் பையன் நடிப்பைப் பார்க்கணுமே! பின்னியிருக்கான்! நாங்களெல்லாம் அசந்துட்டோம், தெரியுமில்லே?'' என்பார்.

அன்றைய தேதியில் சினிமாவுக்குப் புது முகமான எனக்கு, அவரது அந்தப் பாராட்டும் புகழுரையும், அவரால் அறிமுகமான திரையுலகப் பெரும்புள்ளிகளும் அவர்கள் மூலம் கிடைத்த வாய்ப்புக்களும் கொஞ்சநஞ்சமல்ல!

கலைவாணருக்கு அடுத்தபடியாக நான் நெஞ்சில் வைத்துப் பூஜிக்கிற ஒருவர் உண்டென்றால் அது திரு. சாரங்கபாணி அவர்கள்தான்!

திரை உலகில் இருந்தும், இந்தத் துறைக்கே உரித்தான கெட்ட பழக்கங்கள் எதையும் தம்மை நெருங்க விடாத ஒழுக்கசீலர் அவர். பின்னாளில் அவரது பல படங்களில் நானும் நான் தயாரித்த படங்களில் அவரும் நிறைய நடித்திருந்தாலும் ஒரு பட சம்பவம் மட்டும் இன்னும் பசுமையாக நினைவு இருக்கிறது.

அது - பார் மகளே பார் எடுத்த சவுண்ட் இன்ஜினீயர் சுப்பராமன் தயாரித்த படம். 'சதாரம்' என்பது டைட்டில். அப்படத்தின் கதாநாயகன் கே.ஆர். ராமசாமி, ஹீரோயின் பானுமதி.

இந்தப் படத்தில் சாரங்கபாணி அவர்கள் பானுமதிக்கு அண்ணன் வேடம்.

இதே படத்தில், பானுமதி, சாரங்கபாணி இருவருக்கும் அப்பா வேடத்தில் நடிக்க என்னைக் கூப்பிட்டார்கள்.

அப்போதுதான் நான், 'இன்னும் எத்தனை படங்களில்தான் கிழ வேஷம் போடுவது? போதும், இனி நல்ல, சுமாரான இளமையுள்ள(!) குணசித்திர வேடங்களில் நடிக்கலாம்' என்று முடிவு செய்து, 'தாத்தா வேடங்களை'த் தவிர்த்துக் கொண்டிருந்த சமயம்.

இந்த நிலையில், சாரங்கபாணி - பானுமதிக்கு அப்பாவாக நடிக்க வேண்டும் என்று கேட்டால்?

நான் தீர்மானமாக மறுத்து விட்டேன். "போற போக்கைப் பார்த்தால் காந்தி படம் எடுக்கறேன்; நீங்க காந்திக்கு அப்பாவா நடிக்கணும்னு வந்து கேட்பாங்க போலிருக்கு. என்னை விட்டுருங்க. வேற யாரையாவது போட்டுக்குங்க'' என்று தயாரிப்பாளரிடம் நான் சொல்லி அனுப்பி விட்டேன்.

அவ்வளவுதான்! மறுநாளே சாரங்கபாணி அண்ணன் என் ஆபீஸுக்கு வந்துவிட்டார்.

"என்ன ராமசாமி, நீ நடிக்க மாட்டேன்னு சொல்லிட்டியாமே?''

எனக்குச் சங்கடமாக இருந்தது. அவரிடம், நான் அந்தப் படத்தில் நடிக்க மறுத்ததன் காரணத்தை விளக்கமாக எடுத்துச் சொன்னேன்.

முழுவதையும் பொறுமையாகக் கேட்டுவிட்டு, "எல்லாம் சரி. ஆனா இந்தப் படத்துல, இந்த கேரக்டரைப் பொறுத்தவரைக்கும் சிறப்பா செய்யறதுக்கு உன்னை விட்டால் வேற ஆள் கிடையாது! ரொம்ப கஷ்டமான வேஷம். அப்பா கேரக்டரானாலும் பாட்டுப் பாடணும், டான்ஸ்கூட ஆடணும்! எங்களால கூட முடியாது. வேற வழி இல்லை. நீ ஒத்துக்கிட்டுத்தான் ஆகணும்!'' என்றார் அன்புக் கட்டளையாக.

நான் அப்போதும் தயங்கினேன்.

"இதோ பார்! யோசிக்காமல், எனக்காக ஒத்துக்கோ. சம்பளம் பற்றிக்கூட நீ கவலைப் பட வேண்டாம். நீ கேக்கறது கிடைக்கும். நான் பார்த்துக்கறேன்!'' என்றார்.


அதற்கு மேலும் அவர் என்னிடம் வேண்டுவது எனக்கே என்னவோ போல் இருந்தது.

துளிக்கூட விருப்பம் இல்லாவிட்டாலும் சாரங்கபாணி அண்ணனின் அன்புக்காக அந்தப் படத்தில் நடிக்க நான் ஒப்புக் கொண்டு, நடித்துக் கொடுத்தேன்!

எனக்கு விருப்பமில்லாமல்தான் செய்கிறேன் என்பதை அவரும் அறிந்தே இருந்தார். ஆனாலும் ஒரு திருப்தி எனக்கு.

அவருக்கு ஏதோவொரு வகையில், என் நன்றிக்கடனை, அந்தப் படத்தில் நடித்தது மூலம் தீர்த்ததுபோலவே உணர்ந்தேன்!

(தொடரும்)



தமிழ்க் கொலையைத் தடுக்க என்ன வழி?

— அமைச்சர் தமிழ்க்குடிமகன் கூறுகிறார்

சென்னை தொலைக்காட்சியைப் பொறுத்தவரை அதில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள், சில நெறிமுறைகள், கட்டுப்பாடுகள் இவற்றுக்குட்பட்டே அமைவதால், தமிழுக்குப் பெரிய சிதைவு என்று கூற முடியாது. இலக்கிய வடிவில், முறையான தமிழ் அங்கே பயன்படுத்தப் படுகிறது.

ஆனால், தனியார் தொலைக்காட்சிகளில் தான் இந்த தமிழ்ச் சிதைபாடு அதிகம் இருக்கிறது. அதில்கூட இரண்டு வகை. கவியரங்கம், பட்டிமன்றம் போன்றவற்றைக் குறை சொல்ல முடியாது. அங்கே இயல்பான தமிழ் கையாளப் படுகிறது.

மற்ற நிகழ்ச்சிகளில், தொகுப்பு உரை என்ற பெயரில் அறிவிப்பாளர்கள் பேசுவதுதான் தமிழ்க் கொலையின் உச்ச வடிவம் என்று சொல்ல வேண்டும்.

அந்த அறிவிப்பாளர்களில் பலருக்கும் ல, ள, ழ வேறுபாடு தெரிவதில்லை. அவர்களுக்கு முறையான பேச்சுத் தமிழ் பயிற்சியே கிடையாது. ஏதோ தோற்றத்தில் நன்றாக இருப்பதால் அவர்களுக்கெல்லாம் இந்த வாய்ப்புக் கிடைத்து விடுகிறது என்றே நான் கருதுகிறேன்.

ஒன்று, தமிழ் உச்சரிப்பில் செய்கிற கொலை, இன்னொன்று மிக அதிகமான அளவில் ஆங்கில கலப்பு என்று இவர்களைப் பற்றி இரண்டு விதமான குறைகளைக் கூறலாம். இவர்களுக்கெல்லாம், தமிழ்நாட்டில், ஒரு தமிழ்த் தொலைக்காட்சியில் நிகழ்ச்சியினை வழங்குகிறோம் என்ற எண்ணமே துளியும் இருப்பதில்லை. 'பட், பை தி பை' என்று ஆங்காங்கே தயக்கமின்றி ஆங்கிலம் கலந்து பேசுவது இவர்களது சிறப்பு அம்சம் என்று நினைத்துக் கொண்டு விடுகிறார்கள்.

இதே பாணி, நேர்காணல் நிகழ்ச்சிகளில், நேர்காணுகிறவரிடம் மட்டுமின்றி, பங்கேற்று விடையளிப்பவர்களிடமும் காணப்படுகிறது.

அண்மையில், நம் மாண்புமிகு முதல்வர்கூட, தொலைக்காட்சி தமிழ்க் கொலை பற்றி ஒரு கவியரங்கத்தில் சுட்டிக் காட்டினார். இதை அரசு கவலையுடன் கவனித்ததன் விளைவாக, ஒரு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சென்னை மற்றும் தனியார் தொலைக்காட்சியினரைக் கூட்டி, இதுபற்றி நாங்கள் பேசியிருக்கிறோம். முறையான உச்சரிப்புப் பயிற்சியளிக்க ஒரு திரைச்சுருள் எடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தனியார் தொலைக் காட்சிகள், தாம் தேர்ந்தெடுக்கும் அறிவிப் பாளர்களை, அரசு வடிவமைத்து நடத்தவிருக்கும் சுமார் ஒருமாத கால தமிழ்ப் பயிற்சிக்கு அனுப்பிப் பயனடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் போகிறோம்.

"உச்சரிப்பு சுத்தமான திறமைசாலிகள் இல்லை என்று குறை சொல்கிறார்களே?"

"அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். தமிழை திறமையாய் உச்சரிக்கவும், நயமாய்ப் பேசவும் கூடிய திறமையானவர்கள் பலரை சென்னை கல்லூரிகளிலேயே என்னால் அடையாளம் காட்ட முடியும்."

"தமிழாக்கத் தொடர்கள் என்ற பெயரில் நடக்கிற தமிழ்க் கொலைகளைத் தடுக்க ஏதாவது செய்யக் கூடாதா?"

"அது பற்றியும் கடுமையாய் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அது தமிழைக் கொச்சைப் படுத்தும் காரியம். அதைத் தவிர்க்க எந்தவிதமான கட்டுப்பாடுகளைக் கொண்டு வர வேண்டும் என்று ஆராய்ந்து கொண்டிருக் கிறோம்."


சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

மருத்துவ(ர்) மகிமை

பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருத்தியை சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தனர் அவளது பெற்றோர். முகம் வெகு லட்சணமாக இருந்தது. என்றாலும் அவளைப் பார்க்கும் யாருக்குமே அவள் உடலின் குறைபாடுதான் பளிச்சென்று தெரியும். இடுப்புக்கு மேல் அவள் உடல் முழுவதுமாகவே ஒருபுறமாக வளைந்திருந்தது. இதற்குக் 'காரணம், நேராக இருக்கவேண்டிய முதுகெலும்பு வளைந்து போயிருந்ததுதான்.

முதுகெலும்பு வளைதலை 'ஸ்கோலியாஸிஸ்' என்று மருத்துவ மொழியில் குறிப்பிடுவோம். இதை இரண்டு விதங்களாகப் பிரிக்கலாம். கருவில் இருக்கும்போதே முதுகெலும்பு சரியாக உருவாகாமல் போயிருக்கலாம். அதனால் பிறக்கும்போதே குழந்தையின் முதுகுப்புறம் லேசாக ஒருபுறம் வளைந்திருக்கும். வளர வளர இந்த வளைவு அதிகமாகும்.

இன்னொரு வகை முதுகெலும்பு வளைவு என்பது எட்டிலிருந்து பத்து வயதுக்குள் தொடங்கும். டீன்-ஏஜில் இந்த வளைவு வெகு வேகமாக அதிகரிக்கும் (முக்கியமாக சிறுமிகளுக்கு). பெரும்பாலான பெற்றோர் இதை கவனிப்பதில்லை. அப்படியே கவனித்தாலும் 'ஸ்கூலுக்கு எக்கச்சக்கமா புத்தகங்களைச் சுமந்துக்கிட்டுப் போறானே. அதனாலேதான் ஒரு தோள் பகுதி கீழேயும். இன்னொன்று மேலே தூக்கிக் கொண்டும் இருக்கிறது' என்று தாங்களாகவே முடிவெடுத்து விடுகிறார்கள். இப்போதெல்லாம் டீனேஜ் பெண்கள் மிகவும் லூஸான உடைகளை அணிவதாலும், மேற்கூறிய குறைபாட்டை அவர்கள் பெற்றோரால் சுலபத்தில் கண்டுபிடிக்க முடிவதில்லை. சில பெற்றோர், 'வயசுக்கு வந்துட்டா இல்லையா? அதனாலேதான் ஏதோ ஃபேஷன் ஷோவிலே கலந்துக்கிட்டா மாதிரி விசித்திரமா நடக்கிறா!' என்று அலட்சியப்படுத்தி விடுகிறார்கள்.



இந்தியாவைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட வளைந்த முதுகெலும்புகளுக்கு இன்னொரு காரணமும் உண்டு - போலியோ! போலியோவால் முதுகெலும்பில் உள்ள தசைகளில் ஒரு பகுதி தங்கள் உறுதித் தன்மையை இழந்து விடுகின்றன. முதுகெலும்பின் ஒரு பக்கம் உறுதியான தசைகளும், இன்னொரு பக்கம் மிகவும் 'வீக்'கான தசைகளுமாக அமைந்து விட்டால், ஸ்ட்ராங்கான தசைகள் முதுகெலும்பைக் கொஞ்சம் கொஞ்சமாக எதிர்ப்புறம் தள்ளத் தொடங்கும். முதுகெலும்பு நேர்ப்பாதையை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக நகரும்.

என்னிடம் அழைத்து வரப்பட்ட சிறுமியால் சரியாக உட்காரக் கூட முடியாத நிலைமை. இரண்டு கைகளையும் கீழே ஊன்றிக் கொண்டுதான் அவளால் உட்கார முடிந்தது. தொடக்க கட்டத்திலேயே வந்திருந்தால் சிலவகை பெல்டுகளை அணிய வைத்து அசௌகரியத்தைக் குறைத்திருக்கலாம். ஆனால் முற்றிய

நிமிர்ந்து உட்காரச் செய்த

நிலையில்தான் அவள் என்னிடம் சிகிச்சைக்கு வந்திருந்தாள். பார்ப்பதற்குத்தானே உருத்து



• டாக்டர் ஸ்ரீராம்

கிறது என்று ஒதுக்கிவிடக் கூடிய விஷயம் அல்ல இது. இந்தப் பிரச்னையால் ஒரு பக்கத்து நுரையீரல் மிகவும் அழுத்தப்படும். நாளடைவில் நுரையீரலின் இந்த அதிகப்படி டென்ஷன் இதயத்துக்கு மாற்றப்படவும், இதனால் இதயமே நின்று போகவும் கூட வாய்ப்பு உண்டு!

அறுவைச் சிகிச்சையின் மூலம்தான் இதைக் குணப்படுத்த முடியுமென்று தீர்மானித்தேன். இது ஒரு மேஜர் ஆபரேஷன். முதுகெலும்பில் பல விதங்களில் வெல்டிங் செய்ய வேண்டியிருக்கும். அது மட்டுமல்ல; முதுகெலும்பைச் சுற்றி ஸ்பெஷல் உலோகத் தண்டுகளையும் பொருத்த வேண்டும். இரண்டரை ஆண்டுகள் கழித்து, முதுகெலும்புக்குப் போதிய வலிவு கிடைத்தவுடன், மற்றொரு அறுவைச் சிகிச்சை மூலம் இந்த உலோகத் தண்டுகளை நீக்கி விடுவோம்.

அந்த சிறுமிக்கு ஆபரேஷன் செய்து முடிக்கச் சுமார் ஐந்து மணி நேரமானது. இதில் ஒரு பெரிய ரிஸ்க் உண்டு. முதுகெலும்பில் 'வெல்டிங்' செய்யும்போது ஏதாவது ஒரு இணைப்பு சரியான கோணத்தில் ஒட்டிக் கொள்ளவில்லையென்றால், அதை உடனடியாகக் கண்டுபிடித்து விட முடியாது. ஆபரேஷன் செய்தபிறகு சுமார் மூன்று மாதங்கள் கழித்து முதுகெலும்பு மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக வளையத் தொடங்கும். (நல்லவேளையாக அந்தச் சிறுமிக்கு இந்தப் பிரச்னை ஏற்படவில்லை).

ஆபரேஷன் முடிந்ததும் - மயக்க மருந்தின் தீவிரம் அடங்கியதும், முதல் வேலையாக "காலை ஆட்டும்மா" என்று கவலையுடன் சொன்னேன். சில சமயம் இந்த ஆபரேஷன், நரம்புகளை பாதித்து, ரத்த ஓட்டத்தை தடைப்படுத்தி, காலையே செயலிழக்கவும் வைக்கலாம். எனவேதான் மயக்கம் தெளிந்தவுடனேயே சிகிச்சை பெறுபவரை உடனடியாகக் காலை ஆட்டச் சொல்லுவோம். காலை இயக்க முடியவில்லையென்றால், முதுகில் பொருத்தப்பட்டுள்ள இரும்புத் தண்டுகளின் முறுக்கைக் (டென்ஷனை) குறைத்து விடுவோம்.


நான் சொன்னதும், அந்தச் சிறுமி தன் கால்களை ஆட்டினாள். அப்பாடா, ஒரு பெரிய கவலை விட்டது! சில நாட்கள் மேலும் சிகிச்சை எடுத்துக் கொண்டதில், அவள் உடற்குறை நீங்கியது.

பத்து வருடங்கள் கழித்து அந்தப் பெண் மீண்டும் என்னைச் சந்தித்தாள். அவளுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருந்தது. இதை அவள் சொல்லிவிட்டுப் போன பிறகு ஒருநாள் அவளது வருங்கால மாமியார் என்னைத் தனியே சந்தித்தார். 'முதுகெலும்பிலே மேஜர் ஆபரேஷன் செய்திருக்கீங்களே, இதனாலே அவ திருமண வாழ்விலே ஏதாவது சிக்கல் வருமா? வீட்டு வேலைகளை அவளால் செய்ய முடியுமா?' என்று கேட்டார். என் பதில்கள் அவருக்குத் திருப்தியளித்தன. இருந்தாலும் ஒரு சின்ன சோதனை செய்தார். பெஞ்சுக்குக் கீழே ஒரு சாவியைப் போட்டுவிட்டு அதைத் தன் வருங்கால மருமகளிடம் எடுத்துத் தரச் சொன்னார். அந்தப் பெண் அப்படி எடுத்துத் தந்ததும் அவரது முகம் பூவாய் மலர்ந்தது!

இப்போது அந்தப் பெண் திருமணமாகி சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறாள் கேள்விப்படும்போதே சுகமாக இருக்கிறது!

சந்திப்பு : அருண்சரண்யா

முதுகெலும்புப் பிரச்னை!



விபத்து நடைபெற்ற இடத்துக்கு இரண்டு தீயணைப்பு வண்டிகள், ஓர் ஆம்புலன்ஸ், மூன்று போலீஸ் வேன்கள் வந்து சேர்ந்தன. பல பேர் தங்கள் காரிலிருந்த போன் மூலம் பயங்கர விபத்து நேர்ந்திருப்பதாகப் போலீசுக்குத் தகவல் தெரிவித்திருந்தார்கள். சிலர் தங்கள் காரிலிருந்து இறங்கி வந்து எட்ட நின்றபடி எச்சரிக்கையுடன் பார்த்தார்கள். விபத்துக்கு ஆளான சிறிய காரில் நான்கு பேர் இருப்பதும், அவர்களில் இருவருக்கு வெகு பலமான காயம் ஏற்பட்டிருப்பதும் தெரிந்து அதிர்ச்சி அடைந்து நின்றார்கள்.

இந்தக் காருடன் மோதிய மற்ற காரில் ஒரு பெண்மணிதான் இருந்தாள். இரண்டொரு சிராய்ப்புத் தவிர வேறு எந்தக் காயமும் அவளுக்கு ஏற்படவில்லை. அது ஒரு மாபெரும் ஆச்சரியம். தன் காரை விட்டு இறங்கி, சாலையோரமாக நின்று கொண்டு, கிறுக்குப் பிடித்தவள் போல் விசும்பி அழுது கொண்டிருந்தாள். வழிப்போக்கர்களில் ஒருவர் அவளைத் தன் தோளில் சாய்த்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு போலீஸ்காரர் போக்குவரத்து நெரிசலை ஒழுங்கு செய்தார். இரண்டு போலீஸ்காரர்களும் ஆம்புலன்ஸில் வந்திருந்த ஹவுஸ்சர்ஜன்களில் மூன்று பேரும் பிலிப்பின் மெர்ஸிடிஸ் காருக்குள் எட்டிப் பார்த்தார்கள். அங்கே நின்றிருந்த டாக்டர் இளைஞன், 'காரோட்டி இறந்து விட்டான்' என்று தெரிவிக்க, அவர்களும் அவனைத் தொட்டுப் பார்த்து, ஊர்ஜிதம் செய்தார்கள்.

போயாயிற்று. ஓர் உயிர் பலியாகி விட்டது. ஒரே நிமிடத்தில் வாழ்வு முடிந்து விட்டது. எவ்வளவு சின்னப் பையனாக இருந்தென்ன? எவ்வளவு புத்திசாலிப் பையனாக இருந்தென்ன? எவ்வளவு நல்ல பையனாக இருந்தென்ன? பெற்றோர் எவ்வளவு கொள்ளைப் பிரியம் அவன் மீது வைத்திருந்தாலென்ன? போய் விட்டான். அறிவில்லாத, அர்த்தமில்லாத, நோக்கமில்லாத மரணம்.

ஓர் ஏப்ரல் மாதச் சனிக்கிழமையின் இளமையான இரவில் சாப்மன் என்பவரின் புதல்வனான பிலிப் சாப்மன், பதினேழே பிராயத்தில் இறந்தாயிற்று.

"எங்களால் கதவுகளைத் திறக்க முடியவில்லை," என்றான் டாக்டர் இளைஞன். "பின்சீட்டில் இருக்கும் பெண் ரொம்பவும் சிக்கிக் கொண்டிருக்கிறாள். இடுப்புக்குக் கீழே பலமாய் அடிபட்டிருக்குமென்று நினைக்கிறேன்," என்றவன், குழப்பத்துடன் வெறித்து நோக்கிக் கொண்டிருக்கும் ஜேம்ஸைச் சுட்டிக் காட்டி, "இந்தப் பையன் ஓகே," என்றான். "அதிர்ச்சியில் பிரமை பிடித்தவனாக இருக்கிறான். உடனே ஆஸ்பத்திரிக்கு அனுப்பிச் செக் பண்ணச் சொல்ல வேண்டும். அனேகமாய் இவனுக்கு ஒன்றுமில்லை என்றே தோன்றுகிறது. மூளையில் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும்," என்றான்.

தீயணைப்புப் படையைச் சேர்ந்தவர்கள், இரும்புக் கதவை அறுக்கக்கூடிய கருவிகளை உடனே கொண்டு வரச் சொல்லித் தகவல் அனுப்பினார்கள்.

"இந்தப் பெண்ணுக்கு எப்படி இருக்கிறது, டாக்டர்?" என்று ஆலிஸனைச் சுட்டிக் காட்டி ஒரு ஹவுஸ்சர்ஜன் கேட்டார்.

"பிழைப்பாள் என்று தோன்றவில்லை," என்றான் டாக்டர் இளைஞன். அவன் இன்னமும் ஆலிஸனின் நாடியைப் பார்த்துக் கொண்டிருந்தான். உயிருடன்தான் இருக்கிறாள். ஆனால்



நாடித் துடிப்பு வேகமாக அடங்கிக் கொண்டிருந்தது. உடனடியாகப் பெரிய கருவிகள் வந்து அவளை வெளியே கொண்டு வரவேண்டும். அவை வருகிறவரையில் ஒன்றும் செய்வதற்கில்லை. எனினும் ஹவுஸ்சர்ஜன்கள் தங்களால் முடிந்த முதலுதவிகளைச் செய்தார்கள். ஒருவர் ஆலிஸனின் தலையின் பின்னே ஒரு தலையணையைப் பொருத்தினார், மேலும் சேதம் ஏற்படாமல் இருப்பதற்காக.

"தலையில் பலமான காயம் ஏற்பட்டிருப்பது தெரிகிறது. வேறு எங்கெங்கே என்னென்ன காயம் ஏற்பட்டிருக்கிறதோ! வெளியே எடுத்த பிறகுதான் தெரியும்," என்றான் டாக்டர் இளைஞன்.

இரும்புத் தகடுகள் ஆலிஸனை முற்ற முழுக்கப் போர்த்தியிருந்தன. அவள்

6

மூலம் : டேனியல் ஸ்டீல்; தமிழில் : ரா. கி. ரங்கராஜன்

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்

உடம்பின் பெரும் பகுதி அவர்கள் கைக்கு எட்டவில்லை. நிச்சயமாய் நொறுங்கிப் போயிருக்கும். பிழைப்பாளா என்பது சந்தேகம் தான்...

பின்சீட்டில் க்ளோ மேலும் மேலும் பயங்கரமாக வீறிட்டுக் கொண்டிருந்தாள். ஆலிஸனையும் ஜேம்ஸையும் பிலிப்பையும் பற்றி இவர்கள் பேசுவது அவளுக்குக் கேட்டதோ, இல்லையோ, தெரியவில்லை. ஒருவேளை அவளுக்கு அவளுடைய மரண வலியே பெரிதாக இருந்தது போலும். அவளுடன் பேச்சுக் கொடுத்து அமைதிப்படுத்தலாமென்றால் அதற்கும் வழி இல்லை. தான் எங்கே இருக்கிறோம் என்பதே அவளுக்குத் தெரியவில்லை என்று தோன்றியது. 'என் கால்! ஐயோ! என் கால்! முதுகில் வலி உயிர் போகிறதே!' என்றுதான் திரும்பத் திரும்பக் கத்திக் கொண்டிருந்தாள். வலி தெரிகிற அளவுக்காவது அவளுக்கு உணர்வு இருக்கிறதே என்று ஹவுஸ்சர்ஜன்களுக்கு ஆறுதலாக இருந்தது. அவர்கள் பார்த்திருந்த பெரும்பாலான விபத்துக்களில், அனேகமாக முதுகுத்தண்டு உடைந்திருக்கும். எந்த வலியும் தெரியாமலே இருப்பார்கள்.

"இதோ பாரம்மா, இன்னும் ஒரு நிமிஷம் தான். பொறுத்துக் கொள். சமர்த்துக் குழந்தை இல்லே?" என்று ஒரு தீயணைப்பு வீரர் பரிவாக அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தார். போலீஸ்காரர்களில் சிலர் பிலிப் இருந்த பக்கத்தில் எப்படியோ கதவை உடைத்துத் திறந்து மெதுவே அவன் உடலை இழுத்து வெளியே எடுத்தார்கள். மற்ற போலீஸ்காரர்கள் ஒரு போர்வையில் அந்த உடலைச் சுருட்டி மூடி ஆம்புலன்ஸில் கொண்டு போய் வைத்தார்கள். பார்த்துக் கொண்டு நின்றிருந்தவர்களுக்கு அவன் இறந்து விட்டான் என்பது புரிந்தது. முன்பின் தெரியாத அந்தப் பையனுக்காக அவர்கள் கண்ணீர் விட்டார்கள்.

முன்புறக் கதவு திறந்திருந்ததால் அந்த டாக்டர் இளைஞன் ஆலிஸனை நெருங்கிக் கவனித்தான். நிலைமை நம்பிக்கையூட்டுவதாக இல்லை. மூச்சு தாறுமாறாக வந்து கொண்டிருந்தது. ஹவுஸ் சர்ஜன்கள் அவள் வாயில் ட்யூபை நுழைத்து, ஒரு பையின் மூலம் பிராண வாயுவைச் செலுத்தினார்கள். இரண்டு கைகளும் கிழிபட்டிருந்ததால் ரத்த அழுத்தம் பார்க்கும் பட்டையைச் சுற்ற முடியவில்லை. அப்படியே முடிந்தாலும் பார்த்து என்ன ஆகப் போகிறது என்று டாக்டர் இளைஞன் எண்ணிக் கொண்டான். கொஞ்சம் கொஞ்சமாக இவள் செத்துக் கொண்டிருக்கிறாள். உடனடியாக மீட்டு வெளியே எடுத்தாலொழிய, பிலிப்பின் கதிதான் இவளுக்கும். உடம்பெல்லாம் ரத்தம் பூசியிருந்தபோதிலும் அவள் சின்னப் பெண் என்பது தெரிந்தது. பாவம், இவள் பிழைக்க வேண்டும் என்று அவன் இதயம் விரும்பியது.

"பாப்பா, இங்கே பார்... உனக்கு ஒன்றும் ஆகாது. நல்லபடி இருப்பாய்... தெரிகிறதா?" என்று அவளிடம் அவன் சொன்னது, இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்வது போல் இருந்தது. "ஆக்ஸிஜன் போதாது. இன்னும் கொடுங்கள்!" என்றான் ஹவுஸ்சர்ஜன்களிடம்.

அவர்கள் பிராண வாயுவுடன் இன்னும் ஏதோ மருந்தும் சேர்த்துச் செலுத்தினார்கள். ஆனால் துரும்பைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறோம் என்று எல்லாருக்குமே தோன்றியது. உடனே இவளை வெளியில் எடுத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றால் தான் பிழைப்பாள்...

காரின் கதவுகளை அறுக்கும் பெரிய கருவிகளுடன் ஐந்து பேர் ஓட்ட ஓட்டமாக வந்து சேர்ந்தார்கள். கண் இமைக்கும் நேரத்துக்குள் நிலைமையைப் பரிசீலித்து, அங்கிருந்தவர்களுடன் கலந்து பேசி, பரபரவென்று செயலில் இறங்கினார்கள்.

க்ளோவுக்கு நினைவு தவறிக் கொண்டிருந்தது. தீயணைப்பு படையைச் சேர்ந்த ஒருவர் அவளுக்கு வாய் வழியே பிராணவாயுவைச் செலுத்திக் கொண்டிருந்தார். ஆனால் முதலில் மீட்க வேண்டியது ஆலிஸனைத்தான் என்று எல்லாருக்குமே புரிந்தது. அனேகமாக அவன் இறந்து விட்ட மாதிரியே இருந்தது. சில நிமிடங்களுக்குள் – சொல்லப் போனால், சில விநாடிகளுக்குள் – அவளை வெளியே கொண்டு வர வேண்டும். க்ளோவின் கூச்சல் பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஆனால் அவள் பொறுத்திருக்க வேண்டியதுதான். ஆலிஸன்தான் முக்கியம். அத்

"கோயில்ல கொள்ளை அடிச்சானே கேடி கந்தசாமி... அவன் என்னய்யா சொல்றான்?"

"அவன் கடவுளோட குழந்தையாம்.. அதனால கோயில் சொத்தை எடுத்துக்கறதுக்கு அவனுக்கு உரிமை இருக்குன்னு சொல்றான்!"

— ஆர். லோகநாதன்



துடன், முன்சீட்டையும் ஆலிஸ னையும் வெளியே எடுத்தால் தான் க்ளோவை விடுவிக்க முடியும்.


வந்தவர்களில் ஒருவன், கார் கொஞ்சமும் அசையாமலிருக்கும் படி முட்டுக் கட்டைகளைச் செருகினான். ஒருவன் டயர்களில் காற்றை இறக்கினான். இன்னொருவன், ஜன்னல்களில் துருத்திக் கொண்டிருந்த கண்ணாடித் துண்டுகளைப் புயல் வேகத்தில் பறித்தெடுத்தான். ஒருவன் மூன்று பேரின் மீதும் போர்வைகளைப் போர்த்தி, மேற்கொண்டு கண்ணாடித் துண்டுகள் அவர்கள் மீது விழாத படி செய்தான். இரண்டு பேர் காரின் முன்புற 'விண்ட்ஷீல்டு' கண்ணாடியையும், இன்னும் இரண்டு பேர் பின்புறக் கண்ணாடியையும் அறுத்து அகற்றினார்கள். இவ்வளவும் ஒரு நிமிட நேரத்துக்குள் நடைபெற்றது. பார்த்துக் கொண்டு நின்றிருந்த டாக்டர் இளைஞன், அந்தச் சின்னப் பெண் உயிர் பிழைத்தால் அந்தப் புண்ணியம் இவர்களுக்குத்தான் என்று எண்ணிக் கொண்டான்.

ஆலிஸனைப் பத்திரமாகப் போர்த்திய பிறகு, மீட்புப் படையில் ஒருவர் காருக்குள் புகுந்து அவனுடைய சீட் பெல்ட்டையும் காரின் சாவிகளையும் அகற்றினார். அடுத்து, எல்லாருமாகச் சேர்ந்து ஹைட்ராலிக் வெட்டுக் கருவிகள் மூலமாயும், கைக்கருவிகள் மூலமாயும் காரின் கூரையை வெட்டத் தொடங்கினார்கள்.

பிரமை பிடித்தவனாக, பேசாமலே இருந்த ஜேம்ஸ், அந்தப் பயங்கரமான சத்தத்தைக் கேட்டு விசும்பினான். கொஞ்ச நேரம் அடங்கியிருந்த க்ளோ மீண்டும் காட்டுக் கத்தலாக வீறிட்டாள். ஆனால் ஆலிஸன் இம்மி கூட அசையவில்லை. ட்யூப் மூலம் அவனுக்குப் பிராண வாயுவைச் செலுத்தியவண்ணம் இருந்தார்கள்.

சில நிமிடங்கள்தான். காரின் கூரையை எடுத்து விட்டார்கள். கொண்டு வந்திருந்த பெரிய கருவியின் மூலம் கதவைப் பிளந்தார்கள். அது ரொம்பவும் கனமான கருவி. இரண்டு பேர் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அது எழுப்பிய சத்தம் சுற்றுப்புறத்தைக் கிடுகிடுக்க வைத்தது. அந்தச் சத்தத்தில் க்ளோவின் கூச்சல் கூட அமுங்கி விட்டது. ஜேம்ஸ் இப்போது வாய்விட்டே அழத் தொடங்கியிருந்தான். ஆலிஸன் மட்டுமே நடப்பது எதையும் அறியாதவனாக நினைவற்றுக் கிடந்தான். ஹைவே சார்ஜன்களில் ஒருவர் அவன் அருகே உட்கார்ந்து, பிராண வாயு ஒழுங்காகச் சென்று கொண்டிருக்கிறதா என்பதைக் கவனித்தபடி இருந்தார். ஆலிஸன் சுவாசித்துக் கொண்டிருந்தான். ஆனால் சீராக அல்ல. தாறுமாறாக.

முன்புறம், பின்புறம், கூரை, கதவுகள் ஆகிய யாவும் அகற்றப்பட்டு, வெறும் மொட்டை



பல பிரமுகர்களையும் கிடுக்கிப்பிடியாய் கேள்விகள் கேட்டு திணற அடிக்கிற ரபி பெர்னார்ட் சமீபத்திய ஜெயலலிதா பேட்டியில் சறுக்கி விட்டார் என்பதே பரவலான விமர்சனம்.

ஏன் இந்தச் சறுக்கல்? ரபி பெர்னார்டிடம் கேட்ட போது :

ஜெ. பேட்டியில் சறுக்கலா?

விஜய் டிவியின் பாபுலாரிட்டியை அதிகரிப்பதற்கு, பெரும் பரபரப்பாக ஏதாவது செய்ய வேண்டிய கட்டாயம். எனவே ஜெயலலிதாவை பேட்டி காண விரும்பினேன். எனது நோக்கம், அந்த பேட்டி பரபரப்பை ஏற்படுத்துவதுதான். இதில் வெகு தெளிவாக இருந்தேன் நான்.

பேட்டியின் போது, ஏதாவது ஒரு கேள்வி அவரை அப்செட் ஆக்கிவிட்டாலும், அவர் மேற்கொண்டு பேட்டியைத் தொடராமல் போகவோ, அல்லது, அதுவரை எடுத்ததை ஒளிபரப்பக் கூடாது என்று கூறிவிடவோ வாய்ப்பு உண்டு. அப்படி ஏதாவது நிகழ்ந்தால் நஷ்டம் எனக்குத் தானே? எனவேதான் மிகுந்த கவனத்துடன் கேள்விகளைக் கையாண்டேன். பலன் : அரை மணி நேர பேட்டிக்குச் சென்ற எனக்கு மூன்று மணி நேர பேட்டி கிடைத்தது.

விமர்சனம் எப்படி இருந்தாலும், விஜய் டிவியின் நிகழ்ச்சி இயக்குனர் ரபி பெர்னார்ட், பேட்டியாளர் ரபி பெர்னார்டுக்கு அளித்த பணியை கச்சிதமாய் முடித்த திருப்தி உள்ளதே!

— மௌனி

உன்னால் தூக்கம் போச்சு!



புதிதாகத் திருமணமான ஜோடி.

கணவன் பெரிதாகக் குறட்டை விட்டான்.

விழித்து எழுந்த அவள், "ஏன் இப்படிக் குறட்டை விடுகிறீர்கள்? என்னால் தூங்க முடியவில்லை" என்றாள்.

"சரி" என்றான் அவன். சிறிது நேரத்தில் மீண்டும் குறட்டை விடத் தொடங்கினான்.

அவளும் பலமுறை அவனை எழுப்பி, "குறட்டை விடாதீர்கள், என்னால் தூங்க முடியவில்லை" என்றாள்.

அவன் புரண்டு புரண்டு படுத்தானே தவிர குறட்டை விடுவதை மட்டும் நிறுத்தவில்லை.

மறுநாள் காலையில் அவனுக்கு உணவு பரிமாறும் போது, "நேற்றிரவு உங்களால் நான் தூங்கவே இல்லை" என்றாள் அவள்.

"உன்னால்தான் என்னால் தூங்க முடியவில்லை. உனக்குத் தூக்கத்தில் பேசற வியாதி இருக்குது. இரவு முழுவதும் என்னைத் தூங்க விடாம தொண தொணன்னு பேசிக் கொண்டே இருந்தாய்" என்றான் அவன்!

"கெட்டிக்காரன் ஜோக்ஸ்" நூலிலிருந்து :
பா. குமார்

மரம் போலத் திறந்து கிடந்தது கார். ஹவுஸ் சர்ஜன்கள் ஆலிஸனை நெருங்கிப் பார்த்தார்கள். முன் மண்டையில் மட்டுமின்றி, மற்ற பகுதிகளிலும் பலத்த காயம் ஏற்பட்டிருப்பது தெரிந்தது. கார் மோதியபோது அவள் தலை பம்பரம் மாதிரி சுழன்றிருக்க வேண்டும். சீட் பெல்ட் முழுதும் அவிழ்ந்திருந்தது - அவள் அதைக் கட்டிக் கொள்ளவேயில்லை என்பது போல.

ரொம்ப ரொம்ப மென்மையாக அவளைத் தூக்கி ஸ்டிரெச்சரில் கிடத்தி, ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள். மெரீன் ஜெனரல் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல முடிவு செய்தார்கள். கற்றுக்குட்டிகளான ஹவுஸ் சர்ஜன்களுடன் ஆலிஸனை அனுப்ப அந்த இளம் டாக்டருக்கு மனமில்லை. ஆம்புலன்ஸில் தானும் ஏறிக் கொண்டான். அவனுடைய காரைத் தீயணைப்புப் படையினரில் ஒருவர் ஓட்டிக் கொண்டு பின்னாலேயே வந்தார்.

இன்னோர் ஆம்புலன்ஸில் க்ளோவை ஏற்றினார்கள். கால்களில் பலமான காயம். எலும்புகள் வெளியே துருத்திக் கொண்டிருந்தன. மாறி மாறி மயக்கமும் நினைவுமாக இருந்தவள், ஆம்புலன்ஸில் ஏற்றிய போது முழுதும் மயக்கமாகி விட்டாள்.

ஜேம்ஸை மற்றொரு ஆம்புலன்ஸில் கொண்டு சென்றார்கள். அவனுக்குக் காயம் ஏதும் இல்லை. வெளியே தூக்கி வந்ததும், போலீஸ்காரர்களில் ஒருவரின் கழுத்தைக் கட்டிக் கொண்டு குழந்தை மாதிரி அழ ஆரம்பித்தான். அவர் அவனை முதுகில் தட்டிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தினார்.

ஆம்புலன்ஸ் வண்டிகளும் போலீஸ் வேன்களும் மெரீன் ஜெனரல் ஆஸ்பத்திரியை நோக்கிப் புறப்பட்டன. போக்குவரத்து நெரிசல் இப்போதும் தணியாததால் அவை ஒன்றன் பின் ஒன்றாக ஊர்ந்துதான் சென்றன.

பிலிப்பின் காருடன் மோதிய லின்கன் காரின் சொந்தக்காரி சாலையோரமாய், பிரமை பிடித்தவளாக உட்கார்ந்திருந்தாள். அவளுக்குக் காயம் ஏதுமில்லை. அவளுடைய வெள்ளைக் கோட்டில் ரத்தக் கறை காணோம். தீயணைப்பு வீரர்களில் ஒருவன், ஒரு நெடுஞ்சாலைப் போலீஸ்காரரிடம், "அந்த அம்மாள் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டாமா?" என்று கேட்டான்.

"தனக்குக் காயம் ஏதுமில்லை என்கிறாள். ரொம்ப அதிர்ஷ்டம். துளியாவது காயம் ஏற்பட்டிருக்கிறதா, பாருங்களேன். ஆனால், ரொம்ப அதிர்ச்சி. அதுவும் அந்தப் பையன் இறந்து போனதில் ஆடிப் போய் விட்டாள். நாங்கள் யாராவது அவளை வீட்டில் கொண்டு போய்விட வேண்டும்," என்றார் அந்தப் போலீஸ்காரர்.


தீயணைப்பு வண்டிகள் போய்க் கொண்டிருந்தபோது, ஒரு ஊழியர் தன் தோழரிடம் சொன்னார் : 'மெர்ஸிடிஸ் கார், லின்கன் கார் இரண்டுமே சாலை நடுவேயுள்ள மஞ்சள் கோட்டைத் தாண்டியிருக்கிறதாம். ஒரு போலீஸ்காரர் என்னிடம் சொன்னார். ஒரு அங்குலம் மஞ்சள் கோட்டைத் தாண்டினால் போதும், இப்படிப்பட்ட பயங்கர விபத்து ஏற்பட்டுவிடும் என்றார். ஆனால் தான் மஞ்சள் கோட்டைத் தாண்டவேயில்லை என்று லின்கன் காரை ஓட்டிவந்த அம்மாள் உறுதியாகச் சொல்கிறாள்."

"யார் அந்த அம்மாள்?"

"செனெட்டர் ஹட்சின்ஸின் மனைவி லாரா ஹட்சின்ஸ்."

மற்றவர் பிரமித்தார். "அடேங்கப்பா! ரொம்பப் பெரிய இடம்!"

(தொடரும்)



* 'மாண்புமிகு மாமியார்' தொடரில் கோவை அனுராதா...

"காப்பி, தம்ளர், துளசிமாடம்...!"

இருபது தொலைக்காட்சித் தொடர் நாடகங்களுக்குக் கதை வசனம் எழுதியுள்ள கோவை அனுராதா, சன் டீ.வி.யில் ஒளிபரப்பான 'காஸ்ட்லி மாப்பிள்ளை' தொடரிலிருந்து இயக்குனர் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார். இப்போது 'மாண்புமிகு மாமியார்' என்ற தொடரை இயக்கிக் கொண்டிருக்கும் இவரிடம் தொலைக்காட்சித் தொடர் உருவாகும் விதம் மற்றும் இதிலுள்ள பிரச்னைகள் பற்றிக் கேட்டோம்.

"ஸ்பான்ஸர்ட் தொலைக்காட்சித் தொடர்களின் இன்றைய நிலை என்ன?"

"அரை மணி நேரத்துக்கான ஒரு எபிஸோட் என்றால் இப்போதைய நிலவரப்படி தூர்தர்ஷனுக்கு இருபதாயிரம் ரூபாயும், சன் டீ.வி.க்கு ஐம்பதாயிரம் ரூபாயும் தர வேண்டியிருக்கிறது. இந்த வகையில் பார்த்தால் தூர்தர்ஷனுக்காகத் தொடர் எடுப்பதுதான் லாபகரமானது. ஆனால் இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது இது சரியல்ல. டி.டி.யில் அதிகபட்சம் (ஒரு எபிஸோடுக்கு) 120 வினாடிகள்தான் விளம்பரங்களுக்கு அனுமதி. சன் டீ.வி.யில் 240 நொடிகள் அனுமதிக்கிறார்கள்."

"தொலைக்காட்சித் தொடர் தயாரிப்பது, திரைப்படம் தயாரிப்பது இரண்டிற்குமிடையே உள்ள முக்கிய வித்தியாசமென்று எதைச் சொல்வீர்கள்?"

"ஒரு பட்ஜெட் படத்திற்குப் பயன்படுத்தப்படும் அவ்வளவு வசதிகளும் தொலைக்காட்சித் தொடருக்கும் வேண்டியிருக்கிறது. அவுட்டோரில் தொலைக்காட்சித் தொடரைப் படமெடுக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு யூனிட்டிற்குக் குறைந்தது 55 பேராவது தேவைப்படுகிறார்கள். அத்தனை பேருக்கும் டிபன், சாப்பாடு, அடிக்கடி காப்பி, டீ, உடை, ஆர்ட் டைரக்டர், ஜெனரேட்டர் வேன் ஆட்கள், நடிக நடிகைகள், நடிகைகளுக்கு டச்-அப் பாய்- இவர்களில் யாரையுமே விடமுடியாது.

"ஆனால் ஒன்று. திரைப்படமென்றால் மொத்தப் பணத்தையும் முடக்கிவிட்டு, ரெண்டு மூணு கோடி நஷ்டம்னு தலையிலே துண்டைப் போட்டுக் கொள்ள வேண்டிய நிலை தயாரிப்பாளருக்கு ஏற்படலாம். தொலைக்காட்சித் தொடரில் இப்படி ஆவ

தொடர் தயாரிப்பில் தொல்லைகள்!

இல்லை. நஷ்டம் ஏற்பட்டாலும் அதை முன்னதாகவே கணித்து விட முடியும். இதனால்தான் நாலு எபிஸோடுகள் தயாரித்ததுமே சிலர் நிறுத்திக் கொண்டு விடுகிறார்கள்."

"அதாவது தயாரிப்பு சரியில்லாவிட்டால் விளம்பரதாரர்களின் ஆதரவு கிடைக்காது..."

"சந்தேகமில்லாமல். இப்போதெல்லாம் ஏகப்பட்ட தொலைக்காட்சித் தொடர் தயாரிப்பு நிறுவனங்கள் உருவாகி விட்டன. ஆனால் முக்கிய விளம்பரதாரர்களின் எண்ணிக்கை அதேதான். சுமார் நூறு பேர்."

"விளம்பரதாரர்கள் ஏதும் உங்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கிறார்களா? நடைமுறை என்ன?"

"முதலில் ஒரு எபிஸோடைத் தயாரிப்போம். (இதற்கு 'பைலட்' என்று பெயர்). இதை விளம்பர ஏஜென்ஸிகளிடம் கொடுத்து, பார்க்கச் சொல்வோம். மாதமொருமுறை என்றுதான் அவர்கள் தங்கள் விளம்பரங்களுக்குப் பணம் கொடுப்பார்கள். ஒரு மாதத்திற்குப் பிறகும் ஒரு குறிப்பிட்ட தொலைக்காட்சித் தொடரை விளம்பரதாரர் ஆதரிக்க வேண்டுமென்றால், குறிப்பிட்ட விளம்பரதாரர் அந்த நாடகத்தின் 'டி.ஆர்.பி. ரேட்டிங்' என்ன என்று பார்ப்பார். அதாவது ஒரு குறிப்பிட்ட அமைப்பு, வாரத்துக்கு ஒருமுறை என்று ஆயிரம் வீடுகளில் ஒரு சர்வே எடுக்கும் - ஒரு நாளின் குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் எந்த சானலில் எந்த நிகழ்ச்சியைப் பார்க்கிறார்கள் என்று. இது திருப்திகரமாக இருந்தால் மட்டுமே விளம்பரங்கள் அளிப்பது தொடரும். பங்கு மார்க்கெட்டைப் போல ஒரு தொலைக்காட்சித் தொடரின் ரேட்டிங்கும், அதனால் விளம்பர எண்ணிக்கைகளும் மாறிக் கொண்டேயிருக்கும். 'கொஞ்சம் காமெடியை அதிகப்படுத்தலாமே' என்பது போன்ற யோசனைகளை விளம்பர ஏஜென்ஸிகள் தயாரிப்பாளரிடம் கூறுவதுண்டு. அதே சமயம் திரைப்பட விநியோகஸ்தர் போல் 'இந்த நடிகரைப் போடு, ஒரு நடனத்தைச் சேர்' என்றெல்லாம் உத்தரவிட மாட்டார்கள்."

"தொலைக்காட்சித் தொடரென்றால் அதென்ன குறைந்த பட்சம் பதின்மூன்று எபிஸோடுகள் என்று கணக்கு? இதன் காரணமாக எட்டு எபிஸோடுகளில் முடிய வேண்டியவற்றைக்கூட ஜவ்வு மாதிரி - இழுப்பது நியாயமா?"

"காலாண்டுக்கு 13 வாரங்கள். இப்படி அமைத்தால் விளம்பர பட்ஜெட்களுக்கு சுலபமாக இருக்கிறது. 13 எபிஸோடுகள் என்பதெல்லாம் ரொம்பக் குறைவு. 26 அல்லது 39 எபிஸோடுகள்தான் இப்போதைய டிரெண்ட். ஒரு நல்ல திரைப்படத்தை இரண்டு மணி நேரத்தில் அடங்கும்படி எடுக்க முடியும். ஆனால் டி.வி விஷயம் வேறு. கதைப் போக்கை ஓரளவு புரிந்து கொண்டு, ரசிகர்கள் தங்கள் மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவே ஆறு வாரங்கள் தேவைப்படும். அப்போது தான் டி.ஆர்.பி ரேட்டிங்கும் அதைப்பற்றி வெளி வரும். அலுவலகம், பஸ் ஸ்டாண்ட் என்றெல்லாம் அந்தத் தொடர் பேசப்பட பத்து வாரங்கள்கூட ஆகலாம். அப்படியொரு பெயர் கிடைத்த பிறகு டக்கென்று நிறுத்திக் கொள்ள முடியுமா? ஒரு விதத்தில் தொலைக்காட்சித் தொடர் என்பது சிறுகதைத் தொகுப்பு போல்தான். எட்டு கதைகள் இருந்தாலும் சற்றே பெரிய அல்லது முக்கியமான கதையின் பெயரை அந்தத் தொகுப்புக்கு வைப்பார்கள் இல்லையா? அதேபோல் தொலைக்காட்சித் தொடரிலும் முக்கிய கதை இழை என்று ஒன்றிருந்தாலும்- எவ்வளவு எபிஸோடுகள் என்று அவ்வப்போது முடிவு செய்வதற்கேற்ப - தனித்தனி பாத்திரங்களுக்கு கிளைக்கதை என்பதை உருவாக்கிக் கொள்வோம்."

"இது ஆரோக்கியமான போக்கா?"

"தொலைக்காட்சித் தொடர் (ஸ்பான்ஸர் செய்யப்படுபவை) என்பதே வியாபாரம் என்றாகி விட்ட பிறகு இதையெல்லாம் கேட்பதில் அர்த்தமில்லை."

"ஓர் இயக்குனர் என்ற விதத்தில் எந்தெந்த விதங்களில் காம்ப்ரமைஸ் செய்து கொள்கிறீர்கள்?"

"என்னைப் பொறுத்தவரை தயாரிப்பாளரின் பர்ஸைத் தெரிந்து கொண்டுதான் கதையே எழுதுவேன். 'பத்து யானைகளை ஒருவன் துரத்தி வருகிறான்' என்பது போல் எல்லாம் காட்சி அமைப்பானேன், பிறகு அதெல்லாம் சக்திக்கு மீறிய விஷயம் என்று தயாரிப்பாளர் சொல்ல, நொந்து கொள்வானேன்? காப்பி, தம்ளர், துளசி மாடம் இப்படி சுலபமாகக் கிடைப்பதை மனத்தில் கொண்டுதான் நான் காட்சிகள் அமைப்பேன். அதேமாதிரி நான் குடியிருக்கும் நங்கநல்லூர் பகுதிகள்தான் எனது கதைகளின் அவுட்டோர் என்பதால் செட்டுகள் போட வேண்டிய அவசியமும் இல்லை. இதனால் செலவும் குறைகிறது. இயல்பாகவும் இருக்கிறது. ஸ்டார் டி.வி உலக மார்க்கெட் கொண்டது. அவர்களால் ஒரு எபிஸோடுக்கு ஒரு கோடி ரூபாய் கூட செலவழிக்க முடியும். எனவே பிரம்மாண்டத்தில் நாம் அவர்களுடன் போட்டியிடவே முடியாது. தவிர ஒரு நாளைக்கு ஒரு எபிஸோட் எனும் அளவுக்கு தயாரிப்பில் வேகமிருந்தால்தான் பொருளாதார ரீதியாகவும் கட்டுபடியாகும்."

சந்திப்பு: **ஜி.எஸ்.எஸ்**

• பொன்முடி



நமது தலையங்கம் : அமைச்சரின் விளக்கம்!

நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த மூன்று பொறியாளர்கள் மீது ஒரு காண்டிராக்டர் தொடர்ந்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு குறித்து தேசிய நாளிதழ்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் 'தி.மு.க. ஆட்சிக்கு முதல் குட்டு' என்ற தலைப்பில் நாம் தலையங்கம் எழுதினோம். அந்தத் தலையங்கத்துக்கும் அதை எழுதக் காரணமாக இருந்த சில தினசரிப் பத்திரிகைச் செய்திகளுக்கும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பொன்முடி விளக்கம் அளித்துள்ளார்.

அதன் விவரம் :

'அந்த முறைகேடுகள் யாவும் கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்ற முறைகேடுகள்' என்று தலைமைக் கணக்கு அலுவலரால் சுட்டிக்காட்டப்பட்டவை என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

தீர்ப்பின் ஒரு பகுதியில் தி.மு.க. அரசையும் அமைச்சரவை உடனடியாக எடுத்த நடவடிக்கையையும் நீதிபதி பாராட்டியுள்ளார்.

1996-ம் ஆண்டு மே மாதத்துக்குப் பிறகு புதிய அரசு எடுத்த கொள்கை மாறுதல் காரணமாக கடந்த ஆட்சியிலே தரப்பட்ட 23 பணிகளை ரத்து செய்து விட்டு புதிய ஒப்பந்தப் புள்ளி கோரியதால் அரசுக்கு ரூ. 5.17 கோடிக்கு மேல் சேமிப்பு ஏற்பட்டுள்ளதை நீதிபதி கூறியுள்ளார்.

'வெள்ள நிவாரணப் பணிகளைக் கூட நியமன முறையிலே வழங்க வேண்டுமா?... அது குறித்து சில விதிமுறைகளை வகுப்பது நல்லது' என அரசுக்கு நீதிபதி தெரியப்படுத்தியுள்ளார். வெள்ள நிவாரணப் பணிகளைக் கூட ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் வழங்க வேண்டும் என முதல்வர் கருதுகிறார். அதிலே ஏற்படும் காலதாமதத்தைக் கருதி வெள்ள நிவாரணப் பணிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டியிருப்பதால் அரசு முன்பே பிறப்பித்துள்ள ஆணைப்படி நியமன அடிப்படையில் வழங்கினால்தான் பணிகளை விரைவாக முடிக்க முடியும். எனவே இந்த முறையைப் பின்பற்ற வேண்டியிருந்தது. இதுவரை இந்தப் பணிகளிலே பின்பற்றப்பட்டு வந்த முறைதான் இதிலேயும் பின்பற்றப்பட்டது என்று நீதிபதி கூறியுள்ளார். முறைகேடுகளை விசாரிக்க வேண்டும் என நீதிபதி கூறியிருப்பது, கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்ற முறைகேடுகளைப் பற்றித்தான்.

ரூ. 25 கோடிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோராமல் பணிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு அரசு சார்பில் அளித்த பதிலிலேயே அச்செய்தி தவறானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுமைக்குமே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலை நிவாரணப் பணிகளுக்காக 15 மாவட்டங்களில் 30 ஆயிரம் கிலோ மீட்டர் சாலையைச் சீர்செய்ய ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையே ரூ. 37.15 கோடிதான். அதிலும் பெரிதும் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் செங்கல்பட்டுக் கோட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 12.5 கோடி மட்டுமே.

துறையினால் வழங்கப்படும் பொருட்களான தார், சிமெண்ட் போன்றவைகளுக்காக ரூ. 5 கோடி கழித்தால் மீதம் ரூ. 7.5 கோடிதான். அது 1377 பணிகளாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் 397 காண்டிராக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீர்ப்பின் ஒரு பகுதியில் நீதிபதி இதை எடுத்துக்காட்டி இருந்தாலும் கடைசிப் பகுதியில் ரூ. 25 கோடிக்குப் பணிகள் வழங்கப்பட்டன என கூறியிருக்கிறார். இதுகுறித்த நிலைமையைத் தெளிவாக்குவதற்காக அரசு மேல் முறையீட்டிற்குச் செல்ல இருக்கிறது என்றும் அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

ப்ரியாவுக்கே தெரியும்!

ஆறு வயது வித்தியாசத்தில் ஒரு தங்கை இருப்பதன் பிரதான பலன், இப்போதுதான் தெரிந்தது டாக்டர் யோகேஷுக்கு! அவனுக்கு வந்திருந்த வரன்களில் முக்கால்வாசியும் மனீஷாவுக்குப் பரிச்சயமான பெண்கள் - ஸ்கூல் மேட், காலேஜ் ஃப்ரெண்ட், கம்ப்யூட்டர் தோழி, 'ஜிம்'பால், பாட்டுக் கிளாசில் கூடக் கத்தியவள்... இப்படிப் பெரிய பட்டியலே வைத்திருந்தாள்.

ஃபோட்டோவுடன் பயோடாட்டா அனுப்பியவர்களில், டாக்டர் பெண்களுக்கு யோகேஷ் 'நோ' சொல்லி விட ("இருவரும் ஒரே ப்ரொஃபஷனில் இருக்கக் கூடாது"), ஜோசியர் "பாஸ்" செய்தவற்றை இவள் அனாயாசமாக ஃபெயில் செய்து கொண்டிருந்தாள்.

"இது ரொம்ப 'ஸிக்லி' டைப்! வேணாம்..."


"இவப்பாவுக்கு பயங்கர 'பொலிடிகல் லிங்க்ஸ்', யாரையாவது 'க்னோஸ்' பண்ணிட்டு, அண்ணாவை பொய் சர்டிஃபிகேட் குடுக்கச் சொல்வார்... நோ...."

"இது படா 'ஃபனர்ட்'! அண்ணாவுக்கு ஸ்டைலா 'பை-பை' சொல்லி கிளினிக்குக்கு அனுப்பிட்டு, நைஸா பாய் ஃப்ரண்டோட பிக்சர் போயிடும்... ரிஜக்டட்..."


அம்மாவும் அப்பாவும் ஏதோ அருள் வாக்கு கேட்பது போல் அவள் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகளில் லயித்திருக்க, யோகேஷ் மௌனமாக ரசித்துக் கொண்டிருந்தான்.

ஒரு மாதிரியாக வடிகட்டி, மனீஷா இரண்டைத் தேர்வு செய்தாள். "இது ரம்யா... இது ப்ரியா..."

ப்ரியாவின் கண்களில் அதிக உயிர்ப்பிருந்தது; முறுவலில் குறுகுறுப்பிருந்தது; முகத்தில் கொஞ்சம் நாணமும் பாக்கி இருந்தது... யோகேஷின்



பார்வை போன திசையைப் பார்த்து, "இது இரண்டாம் பட்சம்தான் அண்ணா" என



இடைமறித்தான் மனீஷா.

"உனக்கு ரம்யாதான் நல்ல மாட்ச்! உன்னை மாதிரியே ரொம்ப இண்டெலிஜண்ட்; எல்லா கிளாசுலயும், எல்லா ஸப்ஜெக்டுலயும் ஃபர்ஸ்ட்... இந்தப்

ஜெயஸ்ரீ ராஜ்

ப்ரியா நல்ல பொண்ணுதான். ஆனா கொஞ்சம் 'அரியர்ஸ்' கேஸ்... ஒரு 'ஸெம்' ட்ராப் ஆகி மறுபடியும் எழுதி க்ளியர் பண்ணா..."

"அப்ப ரம்யாவையே பார்க்கலாமா?" - அம்மா கேட்கவும் டெலிஃபோன் மணி அழைக்கவும் சரியாயிருந்தது.

"மணி அடிக்கிறதே! நல்ல சகுனம்தான்...." என்றார் அப்பா.

ஆனால் அந்தப் பக்கத்திலிருந்து வந்த செய்தி அவ்வளவு நல்லதாக இல்லை!

"இதோ வரேன்...." யோகேஷ் சட்டையை மாட்டிக் கொண்டான். "ஹாஸ்பிடல்ல ஒரு எமர்ஜென்சி கேஸ்... வந்து பேசிக்கலாம்..."

ஐ.ஸி.யு.வுக்கு வெளியே சின்னதாக ஒரு கும்பல். கொஞ்சம் வயதானவர், கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்த நடுத்தர வயதுப் பெண்மணியைக் கண்டித்துக் கொண்டிருந்தார்...

"இப்ப அழுது என்ன பிரயோஜனம்? அப்பவே முட்டிண்டேன், அவன் வாங்கற மார்க் போதும்.. போட்டு ப்ரஷரைஸ் பண்ணாதேன்னு... கேட்டேளா? புருஷனும் பெஞ்சாதியுமா மாத்தி மாத்தி அவனைப் போட்டு வாட்டி எடுத்தேள்... ஈச்வரா..." கையில் ருத்ராட்சத்துடன் ஒரு மூதாட்டி, பெஞ்சில் அமர்ந்து பிரார்த்தித்துக் கொண்டிருக்க, யோகேஷ் நுழைந்ததும் சிறு பரபரப்பேற்பட்டது.


"எப்படியாவது எங்க பேரனைக் காப்பாத்திடுங்க டாக்டர்" எனப் பெரியவர் இவனைக் கும்பிட, அந்த நடுத்தர வயதுப் பெண்மணி குற்ற உணர்வில் நிலை

ஜூன் கோகுலம் வந்தாச்சு!
வண்ண லேபிலும் வந்தாச்சு!

கோகுலம்

ஜூன் இதழில்...

* வண்ண லேபில்கள்
* படிப்பை விடவா? (பரிசுக்கதை)
* சிங்கப்பூர் சட்டை (படக்கதை)
* காடைக்குக் 'க்யூ' தெரியுமா?



* கோடை விடுமுறைப் போட்டி II
* பழமொழி என்ன?–போட்டி

+ ஏராளக்கதைகள், நாடகம், பாடல் எல்லாம்! இன்னும் என்ன?

முழுமையான சிறுவர் மாத இதழ்!

குலைந்தாள்.

நர்ஸ் சுருக்கமாக விவரங்களை உதிர்த்தாள் - அந்தப் பையன், சுரேஷ், +2 பரீட்சை எழுதியிருக்கிறான். அம்மா ப்ரொஃபசர்; அப்பா சார்டர்ட் அக்கவுன்டண்ட்; ஒரே பையனை இஞ்சினியராகவோ டாக்டராகவோ ஆக்கிப் பார்க்க வேண்டுமென்ற வெறி! பையன் புத்திசாலி என்றாலும், எக்கச்சக்கமாகச் செலவழித்து, பிரைவேட் ட்யூஷன் வைத்து, இன்னும் முயற்சி செய்து படிக்கச் சொல்லி, மற்றவர்களுடன் ஒப்பிட்டு, ஹூம்! கணக்கு, கெமிஸ்ட்ரி பரீட்சைகளில் கேள்வித் தாளிலேயே குளறுபடி... பொக்கிஷம் போன்ற 25 மார்க்குகளுக்கு உலை... ப்ராக்டிகல்லின் போது ஹைதர் காலத்து அப்பாரடஸ் படுத்திய பாடு.. பையன் சோர்ந்து விட்டான். ரிசல்ட் தேதி நெருங்க நெருங்க ஒரே பதற்றம்... டென்ஷன்... பெற்றோரின் பிடுங்கல்...

எல்லாமாகச் சேர்ந்து "ஹார்ட் அட்டாக்"... யோகேஷ் நன்றாக சோதித்தான்; நல்லவேளை 'மைல்ட் அட்டாக்'தான், மருந்துகளிலேயே குணமாக்கிவிடலாம்!

சிறிது நேரத்தில், சுரேஷ் முகத்தில் தெளிவு வந்ததும்... இதமாகப் பேசி, நட்புடன் சிரித்து, வாழ்க்கையில் வெற்றிக்கும், படிக்கும் படிப்புக்கும் சம்பந்தமில்லாததை விளக்கி... நல்ல சைக்கியாட்ரிஸ்டுக்கு லெட்டர் கொடுத்து விட்டு யோகேஷ் ஒருவழியாக வீட்டுக்குத் திரும்பவும்... மீண்டும் ஜாதக விஷயம் தலைதூக்கியது!

"என்னடா... அந்த ரம்யாவை பெண் பார்க்கப் போகலாமா....?" - அப்பாதான் ஆரம்பித்தார்.

யோகேஷ் நிதானம் காத்தான் - "அந்தப் ப்ரியாவையே பார்க்கலாமேப்பா?"

அப்பா, அம்மா, மனீஷா எல்லோரும் ஆச்சர்யப்பட்டனர்.

"ஏன்டா... ஏதாவது காம்ப்ளெக்ஸா? அந்த ரம்யா உன்னைவிட புத்திசாலியா இருப்பாளேன்னு பயமா?..."

"கொஞ்சம் சுமாரான பெண்ணை பண்ணின்டா நிறைய அதிகாரம் பண்ணலாம்னா...?"

"எல்லா இண்டியன் மேல்ஸூம் ஒண்ணு தான்.. ஈகோயிஸ்டிக்...."

ஆளாளுக்கு ஏதோ சொல்ல... "ஏதாவது உளறாதீங்க." யோகேஷ் ஆரம்பித்தான். ஹாஸ்பிடலில் நடந்ததை விவரித்தான்.

"ரம்யா எல்லாத்துலயும் ஃபர்ஸ்ட்; அதனால தன் குழந்தைகள் தன்னைவிட அதிக சாதனையாளர்களா இருக்கணும்கற இயற்கையான தாபத்தோட, தனக்குப் பிறக்கறதுகள் வானத்தையே வில்லா வளைக்கணும்கற எதிர்பார்ப்பு இருக்கும். குழந்தைங்க ஸ்மார்ட்டா இல்லைன்னா குமைச்சல் அதிகமாயிடும்...

"இது மாதிரிப் பெண்கள், ஒண்ணு குழந்தைகளைப் பாடா படுத்துவாங்க, இல்ல... தானே மனசுக்குள்ள மருகுவாங்க... ரெண்டுமே ஆரோக்யமானதில்லை!

"ப்ரியாவுக்குத் தோல்வின்னா என்னன்னு தெரிஞ்சிருக்கு; அரியர்ஸ் வாங்கி பாஸ் பண்ணியிருக்கறதால, குழந்தைங்க படிப்பை யதார்த்தமா எடுத்துக்கற மனப்பக்குவம் இருக்கும்.

"என் தொழில், என்னை குடும்பத்துக்கு அதிக நேரம் செலவழிக்க விடாது; அதனால எனக்கு மனைவியா வர பெண்ணோட ரோல் அதிகரிக்கும்!

"என் குழந்தைங்க ஆரோக்யமான சூழ்நிலையில வளரணும்; அவங்க இயல்புக்கு எதிரா எந்தவித 'பிரஷரும்' கூடாது; அதுக்கு வெற்றி, தோல்வி இரண்டையும் சாதாரணமா எடுத்துக்கக் கூடிய ஒரு பெண் வேண்டும். அது ப்ரியாவால முடியும்னு நினைக்கிறேன்." உறுதியாக முடித்தான்!



• ராஜ்குமார், ஷ்யாம்

"இனி சாயங்காலம் வீட்டுக்குப் போனா, உங்க மனைவி சூடான காப்பியோடு சூடான செய்தியும் தருவாங்க!"

தராசு ஆசிரியர் ஷ்யாம், என்.ஈ.பி.சியுடன் சேர்ந்து தராசு டி.வி என்று தனியே செய்திகள் ஒளிபரப்பு சானல் ஒன்றைத் தொடங்கியிருக்கிறார்.

"என்.ஈ.பி.சியினர் ஏற்கெனவே பிற்பகல் இரண்டரை மணி முதல் நாலரை வரை செய்திகள், நாட்டு நடப்புகள்னு தமிழ் சானல் பண்ணிக்கிட்டிருக்காங்க. இதுக்காகவே இருபத்திநாலு மணி நேரமும் தமிழ்ல ஒரு சானல் இருக்கணும்னு எனக்கு ஒரு ஆசை. இந்த குறிக்கோளோட நான் என்.ஈ.பி.சி இயக்குனர் ராஜ்குமாரை அப்ரோச் பண்ணினேன். 'முதல்லே ஒரு மணி நேரம் பண்ணுங்க. அப்புறமா அதை மூணு மணி நேரம், ஆறு மணி நேரம்னு அதிகமாக்கலாம்'னு அவர் சொன்னார். சரின்னு இப்போ ஒரு மணி நேரம் வாங்கியிருக்கேன். தினமும் சாயங்காலம் ஐந்தேகால் மணி முதல் ஆறேகால் வரை."

"ஒரு மணி நேரமும் நியூஸா?"

"இல்லே. கால் மணி நேரம். மீதி முக்கால் மணி நேரமும் நாட்டு நடப்புகள்."

"ஏற்கெனவே தூர்தர்ஷன், சன் டி.வி ஆகியவை ஒரு நாளைக்குப் பல முறை தமிழ் செய்திகளை தூள் கிளப்பிக் கொண்டிருக்கின்றன. தராசு டி.வி இந்தப் போட்டியை எப்படி சமாளிக்கப் போகிறது?"

"நாங்க கொடுக்கப் போறது, முக்கியமா உள்ளூர் செய்திகள். எங்களோட இலக்கு இல்லத்தரசிகள்தான். அவங்களைப் போய் செய்திகள் சேரணும். ஆபிஸில இருந்து கணவன் வந்ததும் காப்பியோட, சூடா ஒரு செய்தியையும் சொல்ல! 'இப்பதாங்க தராசு டி.வி.யில பார்த்தேன்'னு மனைவி கணவன்கிட்ட சொல்லணும்."

ஆனா "ஷ்யாம்'னு சொன்னாலே அவர் 'தி.மு.க.வுக்கு எதிரி' - ஜெயலலிதாவுக்கு 'ஆமாம், போடுகிறவர்'னு ஒரு பொதுவான அபிப்ராயம் இருக்கு. அதை நீங்க மறுக்க முடியாது. அப்படியிருக்க..."

"ஷ்யாம் தி.மு.க.வின் எதிரி அல்ல. ஆன்ட்டி - எஸ்டாபிளிஷ்மென்ட்'னு சொல்லுங்க, ஒப்புக்கறேன். எந்தக் கட்சி பதவியில் இருந்தாலும் அதை ஷ்யாம் விமர்சிப்பார். ஆனா நியூஸ் அப்படீன்னு வரப்போ, அதை நியூஸா மட்டுமே சொல்லணும். செய்தி அறிக்கையில விமர்சனத்துக்கு ஏது இடம்? செய்திகள் உண்மையா இருக்கணும். அதுதான் முக்கியம். தராசு செய்திகள் உண்மையா இருக்கும்."

பேட்டி: **ஆர்.எம்.**

ஞானயோக்

முக்கூர் லக்ஷ்மிந

6

பிரஹலாதன் கதையைப் போன வாரம் சொன்னேன். பகவான் நமக்குள்ளே இருக்கிறான் என்ற சிந்தனை நமக்கு இருந்து கொண்டேயிருக்க வேண்டும். அதனாலேதான் இந்த சரீரத்தை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அவன் வாழும் கோயில் இது என்பதால் இதை சுத்தி பண்ண வேண்டும்.

'கோவில்' என்று நாம் எப்படித் தெரிந்து கொள்கிறோம்? நாம் சென்று சேவிக்கிற கோவில்களைப் பார்த்தோமானால், மதில் சுவரைச் சுற்றி சுண்ணாம்பும் காவியும் அடித்திருக்கும். பகவான் வாழும் கோவில் என்பதால் அதற்குச் சில இலட்சணங்கள் உண்டு. அதே போல்தான் சரீரத்துக்கு அவரவர் சம்பிரதாயப்படி சில அலங்காரங்களைப் பண்ணிக் கொள்வது. இந்த அலங்காரங்களெல்லாமே பகவானுக்காக என்று சொன்னால், அதில் தப்பேயில்லை. நமக்காக என்னும்போது தான் உபத்திரவமே! எதைப் பண்ணினாலும் 'பகவானுக்காக' என்று பண்ணி விட்டோமானால், தோஷமே கிடையாது.

அதனால்தான் கீதையிலே பரமாத்மா அப்படிச் சொல்கிறான்- எதைப் பண்ணினாலும் பகவானுக்காகப் பண்ணிவிடு என்கிறான்.

சஹஸ்ரநாமத்துக்கு பாஷ்யம் எழுதிய பராசர பட்டர், ஒரு சமயம் ஸ்ரீரங்கத்திலே உபன்யாசம் பண்ணிக் கொண்டிருந்தார். அன்றைய தினம் உபன்யாசத்துக்கான விஷயம் என்னவென்றால்- வைராக்கியம். எப்படி வைராக்கியமாய் இருப்பது என்று விளக்கிக் கொண்டிருந்தார்.

ஏகப்பட்ட உதாரணங்கள் சொன்னார். 'தாமரை இலை தண்ணீர் மாதிரி ஒட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்; எதிலேயும் பற்று வைக்கக் கூடாது; சர்வத்தையும் விட்டுவிட வேண்டும்..'- இப்படி ஏகமாக உபதேசம் பண்ணினார்.

இந்த உபன்யாசத்தைக் கேட்டவர்கள் அத்தனை பேரும் மறுநாள் குளிக்கவே இல்லை! பல் தேய்க்கவில்லை; அலங்காரம் செய்து கொள்ளவில்லை...!

'ஏன்?' என்று கேட்டால், 'என்னத்துக்காக அலங்காரம் பண்ணிக் கொள்வதாம்? இந்த சரீரத்தினால் என்ன பிரயோஜனம்...?. சரீரத்திலே பற்று வைக்கக் கூடாது என்று நேற்றுத் தானே உபன்யாசம் கேட்டோம்...' என்று அத்தனை பேரும் ஒன்று போல பதில் சொல்கிறார்கள்! பரம வைராக்கியமாக மாறி விட்டது போல் பேசினார்கள்!

இந்த பராசர பட்டர் இருக்கிறாரே... இவர் ரங்கநாதருக்குப் புரோஹிதர். கோவிலில் இவர் போனால்தான் எல்லாமே நடக்கும்.

ஸ்ரீரங்கத்திலே ஒரு சம்பிரதாயம் உண்டு. பெருமாளுக்கு என்ன செய்தாலும் அதை உரக்க அறிவிப்பு பண்ணிவிட்டுச் செல்வார்கள்.

"திருவால வட்டம்!" என்று அறிவித்து அந்த உபசாரத்தைப் பண்ணுவார்கள்.


"பட்டர் புருஷ சூக்தம்" என்று சொல்லி, பிறகு புருஷ சூக்தத்தைச் சொல்லுவார்கள்.

பார்க்கிறவர்களும் கேட்கிறவர்களும் என்ன நடக்கிறது என்று தெரிந்து அனுபவிப்பார்கள்.

இப்படி அந்தக் காலைப் பொழுதிலே பகவானுக்கு உபசாரங்கள் நடக்கின்றன. ராத்திரி உபன்யாசம் கேட்டவர்களெல்லாம் எந்த வித அலங்காரமும் பண்ணிக் கொள்ளாமல் அப்படியப்படியே கோவிலுக்கு வந்திருக்கிறார்கள்.

ரங்கநாதருக்குப் பக்கத்திலே பட்டர் நிற்கிறார். கமகமவென்று சந்தனத்தை உடம்பு முழுதும் பூசிக் கொண்டிருக்கிறார். சிரசிலே இருக்கும் அவர் குடுமியில் இத்தனை புஷ்பத்தைவேறு சூட்டிக் கொண்டு, ஏகமாய் அலங்காரம்...! பட்டு பீதாம்பரம் என்ன...? மாலை என்ன...? திருமணி ஹாரங்கள் அணிந்திருக்கிறார். ரங்கநாதருக்கு மிக அருகிலே நின்று கொண்டிருக்கிறார்.

உபந்யாசம் கேட்டவர்கள் அத்தனை பேரும் நடுங்கிப் போய்விட்டார்கள்! அவரிடம் கேட்டார்கள்: "சுவாமி! ராத்திரி



சொன்ன உபன்யாசமெல்லாம் உமக்கு இல்லையா...? எங் களுக்கு மட்டும்தானா..? வைராக் கியமெல்லாம் உமக்கு இல்லையா? நாங்கள் மட்டும்தான் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமா...?"

ழுமில்லை

ரசிம்மாச்சார்யார்



கேட்டவர்களுக்கு பட் டர் பதில் சொன்னார்:

"'வைராக்கியத்தோடு இரு' என்று நான் சொன்னது வாஸ்தவம்தான். நானும் வைராக் கியமாகத்தானே இருந்து கொண்டிருக்கிறேன்."

"இது என்ன வைராக்கியம்?... இப்படி உடம்பு முழுவதும் சந் தனத்தைப் பூசிக் கொண்டு இவ்வளவு அலங்காரம் பண் ணிக் கொள்வது எதில் சேர்த்தி...? இதிலே எப்படி வைராக்கியம் சித்திக் கும்...?"

பத்மவாசன்..

"இதையெல்லாம் நான் எனக்காகவா பண்ணிக் கொண்டேன்...?"

"பின்னே யாருக்காகப் பண்ணிக் கொண்டீர்கள்...?"

"இந்த ரங்கநாதருக்காக அல்லவா பண்ணிக் கொண்டேன்!"....

அத்தனை பேரும் வாயடைத்துப் போனார்கள். அதன்பின் ஒரு வார்த்தை பேசவில்லை!

சாந்தோக்ய உபநிஷத் பரமாத்மாவைக் கொண்டாடுகிறது: 'அவன் சர்வ ரஸமாக இருக்கிறான்; சர்வ கந்தமாக (மணமாக) இருக்கிறான்...' என்கிறது. அப்படிப்பட்ட எம் பெருமான் பக்கத்திலே துர்கந்தமாக நாம் போய் நிற்கலாமா...?

"ஒரு வீட்டிலே கல்யாணம் நடக்கிறது; அல்லது விசேஷமான காரியம் நடக்கிறது. அந்த



"தேவா ராகம்'னு புதுசா ஒரு ராகம் கண்டுபிடிச்சிருக்காங்களாம்."

"காப்பி ராகத்தைத்தான் அப்படிச் சொல்லிருப்பாங்க!"

— சீர்காழி வி. ரேவதி

நேரத்திலே வாசலில் பந்தல் போட்டு, மாவிலைத் தோரணம் கட்டி அலங்காரம் பண்ணுவதில்லையா? அந்த மாதிரிதான்...ரங்கநாதர் எழுந்தருளியிருக்கிற இடத்திலே ஒரு பந்தல் போட்டு அலங்காரம் செய்வது மாதிரிதான் நாம் நம்மை அலங்கரித்துக் கொள்வதும்..."– இந்த விளக்கத்தைப் பராசர பட்டர் சொன்னதும் அத்தனை பேரும் நடுங்கிப் போய் விட்டார்கள்.

'அலங்காரம் எதற்குப் பண்ணிக் கொள்கிறோம்...?'

'பகவானுக்காக...'

'எதற்காகச் சாப்பிடுகிறோம்...?'

'அந்தர்யாமி நிவேதனத்துக்காக...'

– இப்படி, உள்ளே இருக்கிற பரமாத்மாவுக்கு என்று நினைத்துக் கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்தோமானால் அது பலனைத் தரும். வைராக்கியத்தினுடைய உச்சம் அது– மிக உயர்ந்த நிலை.

எல்லாம் 'எனக்கு எனக்கு' என்று ஒருத்தர் நினைத்துக் கொண்டால்தான் உபத்திரவங்கள் வந்து சேரும்; இன்னலுக்கு வழி. ஆகையினால் பகவானுக்காக என்றே ஒவ்வொரு செயலையும் அர்ப்பணித்துச் செய்ய வேண்டும்.

உள்ளுக்குள்ளே பரமாத்மா எழுந்தருளியிருக்கிறான். எங்கும் பிரவேசிக்கக் கூடியவன் நமக்குள்ளேயும் இருக்கிறான்; அசேதனங்களுக்குள்ளேயும் இருக்கிறான் என்ற உயர்ந்த சாஸ்திரத்தை அந்தவிஷ்ணு: என்கிற வாக்கு உணர்த்துகிறது.

நமக்குள்ளே இருக்கிறவனை நாம் பார்க்க முடியுமா...? முடியும். ஆசார்யர்களால் கொடுக்கப்பட்ட மந்திரத்தின் மூலமாக.

ஒரு மந்திரத்தை நாமாக எடுத்து புத்தகத்திலே படித்து மனப்பாடம் பண்ணக் கூடாது. அதை மனப்பாடம் செய்து ஜபம் பண்ணினால் ஒரு நாளும் பலனைக் கொடுக்காது. ஆசார்யரிடத்திலே சென்று அடிபணிந்து, அவர் உபதேசம் பண்ணிய பிற்பாடுதான் அந்த மந்திரத்தை நாம் அனுஷ்டானத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆகையினாலேதான் சாஸ்திரம் சொல்கிறது: மந்திரத்தினிடத்திலேயும் மந்திரத்தின் உள்ளீடான தேவதையிடத்திலேயும் மந்திரத்தை உபதேசிக்கிற ஆசார்யரிடத்திலேயும் சமானமான பக்தி நமக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் அது சித்தியைக் கொடுக்கும்– பூரண பலனைக் கொடுக்கும்.

மந்திரம் கையில் வந்ததுமே ஒருத்தர் ஆசார்யனை மறந்துவிட்டார். அவரை நினைப்பதே இல்லை...மந்திரம் பலனைக் கொடுக்குமா...?

மந்திரத்தினிடத்திலே பக்தி இருக்கிறது; ஆசார்ய பக்தி இருக்கிறது; மந்திரத்துக்கு உள்ளீடான தேவதையிடத்திலே பக்தி இல்லை. அது பலனைக் கொடுக்குமா...?

ஆசார்யரிடத்தில் பக்தி இருக்கிறது; மந்திரத்துக்கு உள்ளீடான தேவதையிடம் பக்தி இருக்கிறது; ஆனால் அந்த மந்திரத்திடமே பக்தி இல்லை.. கண்டவாறு சொல்கிறார்! 'இது தானா மந்திரம்...? இது எனக்கு எப்பவோ தெரியுமே...' என்று அதை சாமான்யமாக நினைக்கிறார்! இவருக்கும் பலன் லபிக்காது!

அந்த மந்திரத்தினிடத்திலே பகுமானம் வேண்டும். 'ஓஹோ, இப்படிப்பட்ட மந்திரமாயிற்றே' என்று பெரிதாக மனத்திலே நினைத்துக் கொள்ள வேண்டும். இப்படி மந்

திரத்தை யார் நல்ல முறையிலே ரக்ஷிக்கிறார்களோ அவர்களை அது ரக்ஷிக்கிறது. அப்படி ரக்ஷிப்பதால்தான் அதற்கு மந்திரம் என்றே பெயர். மந்திரம் என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்றால், 'யார் அதை நல்ல முறையில் உச்சரித்து ரக்ஷிக்கிறார்களோ அவர்களை அது ரக்ஷிக்கும்...' என்றே பொருள்.

காயத்ரி இருக்கிறது- அந்த மந்திரத்தை யார் நன்றாக கானம் பண்ணுகிறார்களோ, அப்படிப்பட்டவனை அது ரக்ஷிப்பதனாலே-காப்பாற்றுவதனாலேதான் அதற்கு காயத்ரி என்று பெயர்.

அப்படிப்பட்ட ஏற்றமுடைய மந்திரத்தை ஆசார்யரிடத்திலே கேட்க வேண்டும்.

அஷ்டாக்ஷர மந்திரம் இருக்கிறதே, அதிலே முதலில் வருவது பிரணவம். அந்த பிரணவத்துக்குப் பல பெயர்கள் உண்டு. அதிலே 'தாரம்' என்பது ஒன்று. 'சம்ஸார பந்தத்திலிருந்து விடுவிக்கக் கூடியது' என்று அதற்குப் பொருள்.

'மூலமாகிய ஒற்றை எழுத்தை மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி...' என்றார் பெரியாழ்வார்.

பிரணவத்திலே பார்த்தோமானால் அகார, உகார, மகாரம் என்று மூன்று அக்ஷரங்கள் உள்ளன. விஷ்ணு என்கிற எம்பெருமானை விளக்க வந்தது பிரணவம்.

விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் மூன்று 'விஷ்ணு' இருக்கிறது என்று சொன்னேன். ஒவ்வொரு விஷ்ணுவும் ஒவ்வொரு அக்ஷரத்தை விவரிக்கிறது.

பிரணவத்தின் மூன்று தனித்தனி அக்ஷரங்கள் ஒன்று சேர்ந்து, இழைந்து, ஒரே அக்ஷரமாக 'ஓம்' என்று ஆகிறது. அதை மூன்று மாத்திரை காலத்துக்குச் சொல்ல வேண்டும் என்கிறார் ஆழ்வார்.

சாஸ்திரமே மூன்று, அல்லது இரண்டரை மாத்திரையிலேதான் பிரணவத்தை உச்சரிக்கலாம் என்று சொல்கிறது.

இரண்டு உச்சரிப்பு முறைகளுக்கும் பலச்ருதி உண்டு:

இரண்டரை மாத்திரையிலே யார் யார் சொல்கிறார்களோ, அவர்களுக்குக் கல்வி, செல்வம், இவ்வுலக போக-போக்யங்களெல்லாம் கிடைக்கும்.

மூன்று மாத்திரையிலே சொன்னால், பரப்ரும்ம ஞானம் கிடைத்து, மோக்ஷத்துக்கு அதிகாரியாகிறார். - உச்சரிக்கிற கிரமத்தைப் பொறுத்து நமக்குப் பலன் ஏற்படும்.

மகான்களான பெரியோர்கள் மூன்று மாத்திரையாகத்தான் சொல்வார்கள். ஏனென்றால், பிரணவத்தைச் சொல்லி அழியக் கூடியதையே ஏன் சம்பாதித்துக் கொள்வது..? உயர்ந்ததையே அடையலாமே...

அதனால், சன்னியாசிகள், மகான்கள், ஆசார்யர்களெல்லாம் மூன்று மாத்திரையில் பிரணவத்தை உச்சரித்து உயர்கதி அடைகிறார்கள். அப்படிப்பட்ட உயர்ந்த மோக்ஷத்தை அளிக்கக் கூடியதான இந்தப் பிரணவம் மிகவும் உயர்ந்தது. ஆனால் பத்து, பதினோரு மாத்திரை என்று ரொம்ப இழுத்தோ அல்லது குறைத்தோ சொல்லக் கூடாது. சாஸ்திர ரீதியாகச் சொன்னால்தான் பலன் ஏற்படும்.


கீதையிலே பரமாத்மா உபதேசம் பண்ணும்போது சாஸ்திரத்தினுடைய முக்கியத்துவம் நமக்குத் தெரிகிறது.

'சாஸ்திரத்தை மீறி, தனக்குத் தோன்றிய பிரகாரம் ஒருத்தன் காரியம் செய்வானானால், அவனுக்கு சித்தி ஏற்படாது! அப்படிப்பட்டவனை நான் விடமாட்டேன்!' என்கிறார் பகவான்.

வராஹ புராணத்திலே சொல்கிறான் பகவான்: 'என்னுடைய ஆக்ஞையாகிற வேதம், தர்ம சாஸ்திரங்களை மீறி ஒருத்தன் நடந்தால் அவன் எனக்கு துரோகியாகிறான். அவன் என் பக்தன் என்று கூறிக் கொண்டால் ஏற்க மாட்டேன்; அவன் என் நாமத்தைச் சொன்னாலும் ஏற்க மாட்டேன். வழி தவறிப்போகிறவனாகிறான் அவன்!'

- பகவானுடைய கோபமான வார்த்தையைப் பாருங்கள்! பரம காருண்யனான பகவானிடத்திலே போய் இப்படிக் கோபமான வார்த்தையை நாம் வாங்கிக் கட்டிக் கொள்ளலாமோ...? நம்மை அனுக்கிரஹிக்கக் காத்திருக்கிற பகவான் 'சகிக்க மாட்டேன், நரகத்திலே தள்ளுவேன்!' என்று சொல்கிற அளவுக்கு கோபத்தை வரவழைக்கலாமா...? ஆகையினாலே சாஸ்திர வழியோடு நாம் வாழ வேண்டும்.

(தொடரும்)



"ஸ்டண்ட் மாஸ்டர் சார்! இந்தப் படத்துலே சரியான அடி வாங்கினவர் யாருங்க?"

"பட முதலாளிங்க; பாவம்."

— ஏழ்வரைக்கடியான்



முரண்பாடாகச் செய்கிறாரா மோகன் வைத்யா?

ராஜ் டிவியில் 'ராகம் சங்கீதம்' என்ற கர்நாடக இசை அடைப்படையிலான நிகழ்ச்சி மூலம் கவனம் ஈர்ப்பவர், மோகன் வைத்யா. அவர் சமீபத்தில், விஜய் டிவியில், ரஜினிகாந்த் படப் பாடல்களை நேயர்கள் பாடும் விதமாய் 'ரஜினியின் ராகங்கள்' என்கிற நிகழ்ச்சியினை நடத்துகிறார். இரண்டு நிகழ்ச்சிகளும் முரண்பாடாக இருக்கிறதே! இதற்கு மோகன் வைத்யாவின் விளக்கம்:

சார்! அடிப்படையில் நான் ஒரு கலைஞன். முறைப்படி கர்நாடக சங்கீதம் கற்றவன். ஆனாலும் கர்நாடக இசைக் கச்சேரிகள் அதிகம் பண்ணினதில்லை. மெல்லிசைக் குழுக்களில் இடம் பெற்று, மேடையில் சினிமாப் பாட்டுகள்தான் அதிகம் பாடியிருக்கிறேன். இது பலருக்கும் தெரியாது.

ஜேசுதாஸ், பாலமுரளி முதல் உன்னி கிருஷ்ணன், பாம்பே ஜெயஸ்ரீ வரை பல பிரபல கர்நாடக இசைக் கலைஞர்களும் சினிமாவில் பாடவில்லையா? அதனால் கர்நாடக இசையில் அவர்களது ஈடுபாடோ, திறமையோ துளியேனும் குறைந்து விட்டது என்று சொல்ல முடியுமா? எனவே, ராகம் சங்கீதம் நடத்துகிற நான், ரஜினியின் ராகங்கள் நிகழ்ச்சியை ஏன் நடத்தக்கூடாது?

இன்னொரு விஷயம். ரஜினி படப் பாடல்களை நேயர்கள் பாடினாலும், அந்தப் பாடல்களில் உள்ள கர்நாடக இசை 'டச்'கள் பற்றி நான் விளக்கம் தருகிறேன். எனவே அது வழக்கமான சினிமா பாட்டு நிகழ்ச்சி அல்ல.

மேலும், அந்தக் குளிர்பான கம்பெனி பல ஊர்களிலும், இப்படியொரு நிகழ்ச்சியை என்னை நடத்தித் தரும்படி கேட்டதால், நான் நடத்தினேன். அப்போது, இது டிவியில் ஒளி பரப்பப் படவுள்ளது என்பது எனக்குத் தெரியவே தெரியாது.

— கௌதம்

வாரத்தில் ஐந்து நாட்கள் தினமும் தூர்தர்ஷன் முதல் சானலில் மதியம் பன்னிரண்டரை முதல் ஒரு மணி வரை, பின்னர் அதுவே ஐந்தாவது சானலில் இரவு ஒன்பது முதல் ஒன்பதரைவரை என்று இதுவரை 320 பகுதிகள் வந்தாயிற்று... இன்னும் 200 பகுதிகள் வர இருக்கின்றன. இதில் 345 பகுதிகள் வரை படப்பிடிப்பு முடிந்து ஒளிபரப்புக்குத் தயார். அதற்கு மேலும் கதை வசனம் என்று ஷூட்டிங்கிற்கு ஸ்கிரிப்டும் ரெடி. எதற்கு என்கிறீர்கள்? 'விழுதுகள்' தொடருக்குத்தான்! இது முழுக்க முழுக்கத் தமிழிலேயே தயாரிக்கப்படுகிற ஒரு தொடர்.

நாம் சென்றபோது 367-வது பகுதியைப் படித்துக் கொண்டிருந்தார் 'பாண்ட்ஸ்' பாலா.

விழுதுகளின் வெற்றிக்குக் கடிதமே சாட்சி!

"எப்படி இத்தனை வாரங்கள்... இப்படியொரு மெகா தொடர் என்கிறபோது நிச்சயம் பிரச்னை இல்லாமல் இருக்காதே..." என்றோம்.

"ஏமாந்து போகப் போகிறீர்கள். இதுநாள் வரை ஒரு சின்னப் பிரச்னைகூட இல்லவே இல்லை. நம்புவதற்குக் கடினமாக இருக்கும். ஆனால் அதுதான் உண்மை. காரணம், ஈகோ என்ற வார்த்தைக்கு அர்த்தமே தெரியாத எங்களுடைய அருமையான யூனிட். அதில் மொத்தம் நானூறு பேர்! என்றாலும் உண்மையான குடும்பத்தில்கூட இத்தனை பாசம் இருக்குமா என்று தெரியவில்லை."

"எப்படிப் பிளான் பண்ணுகிறீர்கள்?"

"முதலில் நான் நன்றி சொல்ல வேண்டியது ஹன்ஸாவிஷன் விமலா ரமணன் அவர்களுக்குத்தான். தயாரிப்புப் பணியில் எனக்கு முழு

சுதந்திரம். துளியும் தலையீடு இல்லை. படத்துக்கு மூன்று இயக்குநர்கள். மிக முன்கூட்டியே எல்லாவற்றையும் துல்லியமாகத் திட்டமிட்டு விடுகிறோம். ஐந்து குடும்பங்கள் சம்பந்தப்பட்ட கதை என்பதால், அந்தந்த குடும்ப பாத்திரங்களுக்கு மாதத்தில் இன்று இன்று படப்பிடிப்பு என்று முடிவு செய்து விடுகிறோம். 'உங்களுக்கெல்லாம் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியிலிருந்து எட்டாம் தேதி வரை... உங்களுக்கு பத்து முதல் பதினெட்டு...' இப்படி நான் குறித்துவிட்டால் அதை மாற்றுவதில்லை. இப்படி அடுத்த ஒன்பது மாதங்களுக்குப் பிளான் போட்டாகி விட்டது."





• விழுதுகளில் ஒரு காட்சி

"ஏதாவது புதிதாகச் சொல்ல வேண்டும். என்ன செய்யலாம்?' என்று 95ம் ஆண்டு மே மாதம் விமலா ரமணன், பாலா மற்றும் நண்பர்கள் உட்கார்ந்து யோசித்தபோது ரமணீயன் சொன்ன பத்து வரிக் கதை பிடித்துப் போக, அதை அலசி அலசி ஆலமரமாக்கி விட்டார்கள். அந்த ஆலமரம்தான் இத்தனை வாரங்களாக விழுது விட்டுக் கொண்டிருக்கிறது.

"இந்தக் கடிதத்தைப் பாருங்கள்!" என்று ஒரு கவரை நம்மிடம் நீட்டினார் பாலா, வழக்கம்போல வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே.

கும்பகோணம் நேயர் கசிலா என்பவரின் கடிதம்: "சக்கரவர்த்திக்கு (தொடரில் தனிமையில் வாடும் கோடீஸ்வரர்) நான் வந்து உதவியாக இருக்கிறேன். எனக்கு பணம், வசதி எதுவும் வேண்டாம். அவர் தனிமையில் வாடுவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை."

"அந்த அளவுக்குப் பாத்திரங்கள் நேயர்களைப் பாதித்திருக்கிறார்கள்! இதுவே எங்கள் வெற்றிக்குச் சாட்சி" என்கிறார் பாலா.

1998 பிப்ரவரியில் விழுதுகள் தொடர் முடிகிறது. அடுத்து? திருவிளையாடல் புராணம்! அதுவும் மெகா சீரியல்தான். கதை, திரைக்கதை வசனம் ஸ்ரீகவி. இந்தத் தொடர் சன் டி.வி.க்கு.

— ராணி மைந்தன்

மும்பை மசாலா:



அமிதாபின் ‘பரிணாம’

பிரதான் பிரதானமில்லை!

மும்பைக் கலவரங்களை விசாரித்துக் கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணா கமிஷனின் கூடுதல் சீனியர் கவுன்சல் விஜய்பிரதான், திடீரென்று ராஜினாமா செய்து, எல்லோரையும் திடுக்கிட வைத்துள்ளார். முதல்வர் ஜோஷியின் குறுக்கு விசாரணைக்கென்று நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டிருந்தவரின் வாயில் ஒரு கிலோ பாகற்காயைத் திணித்ததுபோல், தாமே அதை நடத்தப் போவதாக, ஜஸ்டிஸ் ஸ்ரீ கிருஷ்ணா அறிவித்து விட்டார். கசப்புணர்வுடன் விலகி விட்டார் பிரதான். சிவசேனையின் டிஃபென்ஸ் லாயர்களை ஒரு கலக்குக் கலக்கிய பிரதான், ஜோஷிக்கு தர்ம சங்கடமான நிலையை உருவாக்கப் போகிறாரே என்று தான் நீதிபதி அப்படி ஒரு முடிவெடுத்தார். பிரதான உரிமைகளைப் பறிகொடுத்துவிட்டு, உப்புக்குச் சப்பாணியாய் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க, பிரதான் ஒன்றும் அரசியல்வாதி இல்லையே?

வினை அறுத்தவர்கள்

‘மும்பை வாழ்க்கையே பாதுகாப்பற்றதாகி விட்டது’ என்ற ஷரத் பவாரின் குற்றச்சாட்டு, காவல்துறையை கொதிப்படைய வைத்திருக்கிறது! ‘நேர்மையாக இயங்கும் எந்தத் தொழிலபதிபருக்கும், பெரிய மனிதருக்கும் எந்த ஆபத்துமில்லை! ஈஸ்ட் வெஸ்ட் ஏர்லைன்ஸ் அதிபர் வாஹீத், படத் தயாரிப்பாளர் தக்கல், பில்டர்கள் கோயல், குக்ரேஜா, இப்போது தக்கர்... இப்படிக் கொலையுண்டவர்கள் அனைவரும், தங்கள் சுய லாபத்துக்கென்று ‘டான்’களை உபயோ

கப்படுத்தியவர்கள். இவர்களை நாங்கள் முதலிலேயே எச்சரித்தோம். கேட்கவில்லையே? 'என்கௌண்டர்' என்ற போர்வையில் அண்டர்வர்ல்ட் டான்கள், அவர்களின் அடியாட்கள் என்று அவர்களில் பலரை நாங்கள் தீர்த்துக் கட்டியாகிவிட்டது! மிச்சமிருப்பது அருண்காவ்லி போன்ற சிலர்தான்! இவர்களைச் சும்மா விடாமல் பில்டர்களும் தொழிலதிபர்களும் இந்த தாதாக்களின் கால்களில் விழுவதால்தான் கிரிமினல் நடவடிக்கைகள் உயிர்பெற்றிருக்கின்றன!' என்று போலீசார் கோபப்படுகிறார்கள். வினை விதைத்தால், அதை அறுத்துத்தானே ஆக வேண்டும்?

பழிக்குப் பழி

இளைஞர் காங்கிரஸ் அணி, போராட்டமெல்லாம் நடத்திய பிறகு, புராணிக் கமிட்டியால் ஊழல் குற்றம் சாட்டப்பட்ட சிவசேனை அமைச்சர் சுதாரின் ராஜினாமாவை அரைகுறை மனசுடன் அரசு ஏற்றுக் கொண்டு விட்டது. ஜஸ்டிஸ் துத்ஹத் கமிஷனை அமைத்து மீண்டும் ஆதியோடந்தமாக சுதாரை விசாரிக்கச் சொல்லி இருக்கிறது. 'இந்தக் கமிஷனாவது சுதார் நிரபராதி என்பதை நிரூபிக்கட்டும்' என உதவ் தாக்கரே கூறுவது உத்தரவா, வேண்டுகோளா, பிரார்த்தனையா...? இடையே இதற்கெல்லாம் அடிப்படைக் காரணகர்த்தாவான அண்ணா ஹசாரே மீது, வஞ்சம் தீர்த்துக் கொள்ள, அவரது ட்ரஸ்ட் நடவடிக்கைகள் மீதான ஊழல் புகார் பட்டியலொன்றைத் தயாரித்து

வளர்ச்சி!

வருவதில் மும்முரமாயிருக்கிறது சேனா!

உயிர் காப்பான் பயணி

அண்மையில், பரேல் பிரிட்ஜின்மீது பஸ்ஸை ஓட்டிக் கொண்டிருந்தபோதே, 36வயது குலாம் ராவூத் என்ற டிரைவர், ஹார்ட் அட்டாக்கினால் இறந்து போக, பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த நாற்பது பயணிகளும் கூண்டோடு கைலாசம் சென்றிருக்க வேண்டும். அப்படி எதுவும் நடந்து விடாமல், பாஸஞ்சர்களிலிருந்தே ஒருவர், சட்டென்று ஸ்டியரிங்கை கண்ட்ரோல் செய்து, பஸ்ஸை ஒரு பாதுகாவலான இடத்திற்கு ஓட்டிச் சென்று நிறுத்திவிட்டு, கூட்டத்தில் மறைந்து விட்டார். நிர்வாகத்துக்கு அவப் பெயரையும், அதைவிடப் பெரிய உயிர்ச்சேதத்தையும் சமயோசிதமாகத் தடுத்த அந்த சமய சஞ்சீவியை பஸ் நிர்வாகம் சல்லடை போட்டு தேடிக் கொண்டிருக்கிறது, அவார்டு கொடுக்க!

கொண்டாட்டம் பு(பொ)து விதம்!

ஷாம்பெயின் ஆறையும், கேக் மலைகளையும் தவிர்த்து, உருப்படியான விதத்தில், "ஜானே கஹாம் மேரா ஜிகர் கயா ஜி" தொடரின் வெற்றியைக் கொண்டாடினார்கள். லுகேமியா நோயாளியான ஆறு வயது உர்மி மோடியைத் தத்து எடுத்து, அந்தப் பெண் குழந்தையின் ட்ரீட்மெண்டுக்கான செலவு முழுவதையும் ஸ்பான்சர் செய்ய இருக்கிறார், தொடரை எழுதியிருக்கும் ப்ரோசி பாடியா.

'ஸ்ரீதமா' டீ.வி. நிகழ்ச்சியின் போது, கடைசி கட்டத்திலும் தைரியமாக கான்சர் நோயை எதிர் கொண்ட ஒரு குழந்தையை இவர்கள் பேட்டி காண நேர்ந்தது. அந்தத் தொடர் முதல் முறையாக ஒளிபரப்பப்பட்ட போது அந்தக் குழந்தை இயற்கை எய்திய செய்தி இவர்களை உலுக்கி விட்டது; அந்த பாதிப்பினால்தான் இந்த யோசனை உதித்ததாம். பகட்டான பளபளப்புக்குள்ளே படபடக்கும் நெஞ்சங்களும் மும்பைவாசிகளிடையே உண்டுதான்!

மாறிவிட்டாரா அமிதாப்?

'மறுபடியும் திரைப் பிரவேசம் செய்யும் போது, மாறுபட்ட பாத்திரங்களில் என்னைக் காண்பீர்கள்!' என்று சொன்னாரே அமிதாப், 'ம்ருத்யு தாதா'வில் எப்படிப்பட்ட மாறுதலோ என்று ரசிகர்களெல்லாம் தவமிருந்தது வீண் போகவில்லை. மாறியிருக்கிறார்– angry young manலிருந்து, angry 'old' manஆக! வயலன்ஸ் தாங்க முடியாமல், சென்சாரே 'ஏ' சர்ட்டிஃபிகேட் கொடுத்து விட்டது! அடடா, இளசுகளுக்கென்றே திணிக்கப்பட்டிருக்கும் அதிரடி ஃபைட்டுகளும், தடாலடி வசனங்களும் வீண் போவதா என்று விசனிப்பவர்களுக்கு ஒரு விஷயம்– மெட்ரோ நகரங்களில்தான் 'A' வுக்கு அர்த்தம் "அடல்ட்ட்ஸ் ஒன்லி." மும்பையிலிருந்து ஐந்தடி வெளியே காலை வைத்தாலும் A விலிருந்து Z வரை எல்லாவற்றுக்கும் ஒரே அர்த்தம்தான்! ஆக, சென்சார் கொடுத்த 'A' சர்ட்டிபிகேட்டுக்கு என்ன அர்த்தம்?

மும்பையிலிருந்து: **ஜெயஸ்ரீ ராஜ்**

தோப்பில் முஹம்மது மீரான்

குட்டி ஆடு

அறையில் தனித்தோம், நானும் அவளும். அவளுடன் பங்கு போட வேண்டிய இரவு அது. பையன் தண்ணீர்க் கூசாவை மேசை மீது வைத்துவிட்டுப் போய்விட்டான். இனி வரமாட்டான், கூப்பிட்டாலொழிய. கதவைச் சாத்துகையில் கேட்டான், 'வேறு ஏதாவது?' பல பொருள்கள் அடங்கியிருந்தன அக்கேள்வியில்.

"ஒண்ணும் வேண்டாப்பா" என்று சொல்லும் போது அவளைப் பார்த்தேன், உனக்கு ஏதாவது தேவையா என்ற அர்த்தத்தில். தலை அசைப்பில் தேவையின்மையை வெளிப்படுத்தினாள். பையன் போனதும், கதவில் கொண்டி போட்டு விட்டு, வாசல் பக்கமே நின்றாள். அந்நிய ஆடவன் ஒருவனோடு அறையில் தனிமையில் நிற்கும் கூச்சமும் அச்சமும் அவளிடம் காணப்படவில்லை. நிஜமா அல்லது நடிப்பா என்று தெரிந்து கொள்ள முடியாத முகபாவனையாளாலும் முகத்தில் ஏதோ ஒரு வகையான சோகம் படர்ந்திருந்தது. கூப்பிட்டால் பின்னால் வருபவர்களுடைய கண்களில் வரவழைக்கப்படும் செயற்கை மலர்ச்சி அவள் கண்களில் இல்லை. பேச விரும்பாத மவுனம் ஏனென்று தெரியவில்லை. மவுனம் நகர்த்திக் கொண்டு போன அந்த மணிப்பொழுதுகள் இழப்பாகவே இருந்தன. அதுவே முதல் ஏமாற்றம். முகத்தில் படர்ந்திருந்த சோகம், கண்களில் காணப்படாத மலர்ச்சி, நீண்ட நேர மவுனம், எல்லாம் கூட்டிப் பெருக்கிப் பார்த்தால் ஒரு கட்டாயச் சூழல், என் வெறிக்கண்களின் சின்ன அமைப்பில் உட்பொருள் உணர்ந்து என்னைப் பின் தொடரத் தூண்டியிருக்கலாம்.

எங்களுக்குத் தருவதற்குச் சற்று முன்புதான் அதே அறையில் தங்கியிருந்தவர்கள் அதைக் காலி செய்திருக்க வேண்டும். கூந்தலிலிருந்து உதிர்ந்து தரையில் கிடந்த பூக்கள் அப்பவும் உலரவில்லை. குளியலறையை விட்டு வெளியே வரும் இடத்தில் ஈரம் காயவில்லை. எங்களுக்கு முன் அவர்கள் எங்களைப் போன்று வந்துவிட்டு, பொழுது சாயும் முன் வீடு அடைய அறையைக் காலி செய்திருக்க வேண்டும். ஓர் இரவை இங்கு இவளுடன் செலவு செய்துவிட்டு, விடியும் முன்னரே அறையை வெறுமையாக்கி விட்டு பஸ்ஸை ஓடிப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு.

பஸ் நிலையத்தில் தூணைச் சுற்றிப் போடப்பட்டிருந்த வட்டமான சிமெண்டு திண்டில் உட்கார்ந்திருந்தவள், கண் அசைப்பில் என் பின்னால் வந்தாள். நான் ஏறிய பஸ்ஸில் ஏறினாள். முன் பின் இருக்கைகளில் யாரோ எவரோ என்ற பாவனையில் உட்கார்ந்து கொண்டோம். பேசிக் கொள்ளவில்லை. நான் இறங்கிய இடத்தில் அவளும் இறங்கினாள். சொல்படி கேட்கும் ஒரு குட்டி ஆட்டைப் போல் என் கால்சுவடுகளைப் பார்த்து நடந்தாள்.

பொதிகை மலைச் சரிவிலுள்ள மேட்டு நிலத்தில் இயற்கையை நுகர்வதற்கு வசதியாகக் கட்டப்பட்ட புது அடுக்குமாடி விடுதியின் வரவேற்பறைக்கு நேராக நடக்கையில் அவள் கொஞ்சம் கூட தயக்கம் காட்டவில்லை. முன்பு வந்துபோன பரிச்சயத்தோடும், துணிச்சலோடும் வரவேற்பறையில் எனக்கொப்ப நின்று கொண்டிருந்தாள்.

"உட்காரு."

அறையில் ஓரமாகப் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

கட்டிலில் என்னருகில் வந்து உட்கார்ந்து கொள்வாள் என்று எதிர்பார்த்தேன். உணர்ச்சியைக் கிளறிவிடாத அவளுடைய மவுன இருப்பு எரிச்சலூட்டியது. வெறியோடு பார்த்த போதும் எந்த அசைவும் இல்லாமல் உட்கார்ந்திருக்கும் அவள் ஒரு வித்தியாச தினுசாகப் பட்டது. பஸ் நிலையத்தில் சிமெண்டுத் திண்டில் உட்கார்ந்து கொண்டிருந்த அவளுடைய மாமிசத்துளுதுளுப்பான உடலமைப்பிற்கு அந்நேரம் வசீகரமிருந்தது. என் மீது அவள் பாய்ச்சிய பார்வையில் ஈர்க்கும் அழைப்பு இருக்கவில்லை. கண்டு பரிச்சயமானவர்களைப்



போல் பார்த்ததால் அந்தப் பார்வை வசீகர மிழந்திருந்தது.

"இதுக்கு முன்னே இங்கே வந்திருக்கியா?"

பதில் கூறாமலும் என்னை நிமிர்ந்து பார்க் காமல், கால்பெரு விரலால் மொசைக் தரை யைப் பிராண்டிக் கொண்டிருந்தாள். சாரியைக் கொண்டு உடல் முழுதும் மூடியிருந்ததால் ஒரு வேறுபட்ட தோற்றமிருந்தது. அவளிடத் தில். உட்கார்ந்திருந்த அவளுடைய உடலின் எந்தப் பகுதியையும் என் வெறிப்பார்வையால் கொத்த முடிய வில்லை. பாழ்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தை நினைக்கையில், அவள் மீது கோபம் தோன்றியது. ஏன் இப்படி

உணர்ச்சி மரத்துப் போய் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும் என்ற கேள்விக்கு விடை கிடைக்கவில்லை.

ஒரு வேளை, அவளுக்குரிய தொகை என்னவென்று முன்கூட்டிப் பேசிக் கொள்ளாததால் அதை எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கிறாளா? அவள் பெருவிரல் தரையில் கிழிக்கும் காணாக்கோடுகள் மனசிலுள்ள தொகையைச் சுட்டுகிறதா?

இவ்வளவு வேண்டுமென்று அல்லது என்ன தருவீர்கள் என்று முதலில் கேட்டுத் தெரிந்திருக்கலாம். அப்படி எதுவும் பேசிக் கொள்ளாமல் என் கண் அசைப்பைக் கண்டதும் சிமெண்டுத் திண்டிலிருந்து இறங்கி என் பின்னால் குட்டி ஆட்டைப் போல் வந்துவிட்டு, அறைக்குள் நுழைந்ததும் பேசாப்பிராணியாக விலகிக் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். இப்படியா ஓர் ஆடவனின் பொறுமையைச் சோதிக்க வேண்டும்?

அனுப்பி விட்டீர்களா?

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1997 - க்கான சிறுகதைகளை அனுப்பிவிட்டீர்களா? கடைசி தேதி : ஜூன் 15.

முழு விவரங்களுக்குச் சென்ற வார இதழையோ அல்லது அடுத்த வார இதழையோ பாருங்கள்!

பொதிகை மலையைத் தொட்டு காற்று புறப்படாததால், நெற்றி வேர்த்தது. அறைக்குள் நிரம்பியிருந்த வெப்பத்தை 'ஃபேன்' காற்று கிளறிவிட்டது. வெக்கை வெளியேற ஜன்னல்களைத் திறந்த போது கட்டு அறுத்துவிட்ட இருளில், அருவி வறண்ட மலைச்சரிவுகள் தென்படவில்லை. வரும் போது மஞ்சள் வெயில் பசுமை இழந்த மலைமுகட்டு மரங்களின் உயரங்களில் அப்பிக் கொண்டிருந்தது.

மாலை மஞ்சள் வெளிச்சம் முகத்தை இனம் காட்டி விடாமலிருக்க அவளிலிருந்து தனித்து, முகம் குனிந்து, கர்ச்சீப்பால் முகத்தைத் துடைக்கும் பாவனையில் முகம் மறைத்து நடந்த எனக்கு, விடுதிக்குள் கால்வைத்த பிறகு தான் மூச்சு சீரானது.

அவளிடத்தில் எந்தக் கூச்சமும் இருக்கவில்லை, எதையும் கண்டு பயப்படுபவளாகவும் காணப்படவில்லை.

உட்கார்ந்திருந்து அலுத்துப் போயிருப்பாள். ஒரு கொட்டாவிக்குப் பிறகு எழுந்து சென்று கூசாவிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடித்தாள். அது, கட்டிலில் என்னுடன் சேர்ந்து உட்கார்வதற்கான ஆயத்தமாகத் தோன்றியது. என் எதிர்பார்ப்பில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டு மீண்டும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டது ஏமாற்றத்தைத் தந்ததால் வெறி அதன் உச்சிக்கு எட்டியது.

வாயைத் துடைத்துக் கொண்டு சேலை முனையை, அவிழ்ந்துவிடாதபடி இடுப்பில் செருகியது, என்னைப் பொறுமை இழக்க வைத்தது. இன்னும் தயாராகவில்லை அவள்.

வெறி ஏறிக் கொண்டிருந்த எனக்கு அவளுடைய நிச்செயல்களும், நிலைப்பாடுகளும் எரிச்சலைக் கிளப்பினாலும், அவளுடைய அமைதியான இருப்பும், அச்சம் விலகிப் போன முகமும் என்னைச் சற்று நிதானப் படுத்தியது. விடிவதற்கு இன்னும் எவ்வளவோ நேரமிருக்கிறது.

"மணி 8.00."

நேரம் ஓடிக் கொண்டிருப்பதை நினைவூட்டியதும் என்னை எறிட்டுப் பார்த்தாள். பார்வையில் மலர்ச்சி இல்லாவிட்டாலும் சோர்வு விலகியிருந்தது.

அறைக்குள் ஃபேன் நிரப்பிய காற்றில் அவளுடைய அசைந்த முடித்தும்புகள், என் நரம்புகளுக்குள் நெய் எறும்பாக ஊர்ந்து கீச்சம் காட்டின. மேலும் பொறுத்துக் கொண்டிருக்க என்னால் இயலவில்லை.

"நீ எதுக்கு வந்தா?"

கொஞ்சம் கோபமாகத்தான் கேட்டேன்.

"எனக்கும் சில விசயம் சொல்லணுமென்னு தோணிச்சு."

அமைதியான முறையில் சொன்னாள்.

"நான் கூப்பிட்டது எதுக்கென்னு தெரியாமலா வந்தா?"

"தெரியாம வரல்ல."

"ஆறுமணிக்கு உள்ளே வந்தோம். மணி இப்பம் என்னாச்சு?"

"நேரம் புலர இன்னும் எவ்வளவோ நேரமிருக்கு."

மென்மையாகப் பேசினாள்.

"நேரம்புலரும் வரை இப்படியே இருக்கவா?"

"எப்படி இருக்கணுமென்னு நெனக்கிறீங்க?"

"நீ எதுக்கு வந்தா?"

"நீங்க எதுக்குக் கூப்பிட்டீங்க?"

"தெரியாமலா என் பின்னால வந்த, நான் ஏறின பஸ்ஸில ஏறின, நான் இறங்கின இடத்துலே இறங்கின, இங்கே இந்த அறையில் தனிமையில் என்னோடே இருந்துக்கிட்டு இருக்க."

"நான் என்னை இப்பம் ஒரு பெண்ணாக மட்டும் நினைக்கல்ல."

"உன்னை ஆணாக ஏற்றுக்கிடவா?"

"ஏற்றுக்கிட மாட்டீங்கென்னு தெரியும்."

"பேசி நேரத்தை வீணாக்கவேண்டாம். இந்த ராத்திரிக்கு அறை வாடகை 250 ரூபாய்."

"நான் இப்பம் என்ன செய்யணும்?"

"இப்படி வந்து உட்கார்."

சொன்னதை மறுக்கவில்லை. கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டாள். ஒரு சின்ன இடைவெளியிருந்தது, எங்களுக்கிடையில். எந்த வெட்க பாவமும் அவள் காட்டிக் கொள்ளவில்லை. நான் சற்று நகர்ந்து அவளை நெருங்கினேன்.

எத்தனையோ கைகளின் வருடல்களால் மரத்துப் போன தோள் அவளுடையது என்பதால் -

பார்வையைப் பின் வாங்காமல் கேட்டாள் -

"என்னை உங்களுக்குத் தெரியுமா?"

அதிர்ச்சியாகவே இருந்தது, அக்கேள்வி.

"தெரியாது."

"பார்த்திட்டிலியா?"

"பார்த்ததில்லை."

குரலில் முன்பிருந்த மென்மை இல்லாமலிருந்தது. அவள் தோளிலிருந்த என் கை எந்திர இயக்கமாக மெல்ல நழுவியது. அவளிலிருந்து சற்று அகன்று உட்கார்ந்து கொண்டேன். அவள் பேசுவதில் பல மர்ம முடிச்சுகள் இறுக்கப்பட்டிருந்தன. அவளாகவே அவிழ்த்து விடும் வரை பொறுத்திருக்கும் முடிவில் உட்கார்ந்தேன்.

"என்னைப் பார்த்திருக்க முடியாது. உங்களை நான் பார்த்திருக்கேன்."

விடுதிகளிலிருந்து விடுதிகளுக்குக் கை மாற்றப் செய்யப்படும் அவள், என்னைப் பார்த்திருக்கக் கூடும்.

"எங்க வச்சு?"

"உங்க வீட்டுக்கு எதிர் வீட்டு மாடியிலே குடியிருந்தேன். வெளியே வரமாட்டேன். பீடி சுற்றிக்கிட்டிருப்பேன். அதுனால நீங்க என்னைப் பார்த்திருக்க முடியாது."

"உன் புருஷன் பேரு?"

"பேரு சொன்னா தெரியாது. நான் அவருக்கே மூணாவது பெண்டாட்டி. ராத்திரி ஒரு மணிக்கு வருவார். நேரம் விடியு முன்னே போயிடுவாரு."

"ஏன் அப்படி?"

"ஹோட்டல் வச்சிருந்தார். பகல் நேரம் ஒரு நாளும் ஊட்டுலே தங்கினதில்லை. அதுனாலே தெருக்காரங்களுக்குச் சந்தேகம். யாரெல்லாமோ ராத்திரி வந்து போறதாகக் கதை கட்டினாங்கோ. ஊட்டுக்காரர் வந்து காலிபண்ணச் சொல்லி சத்தம் போட்டதெல்லாம் தெரியாதா?"

"நீதான் அது என்னு தெரியாது."

"மானமுள்ளவங்கோ குடியிருக்கும் தெரு; சவத்தே அடிச்சு வெளியே பத்துக்கென்னு தெருவிலே நின்னு நீங்கெ கத்தினதெ மறந்திட்டீங்களா?"

மறக்கவில்லை. அதனால் பதில் பேசவில்லை. என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டுச் சொன்னாள் - "மானமுள்ள வங்கொ ஆனதினால, உங்களை அடையாளம் தெரிஞ்சுதான் உங்கெ பின்னால வந்தேன்."

"இந்த நீ தானே அன்னு அங்கெ குடியிருந்தா?"

"ஆமா அதே நான்தான், இப்பம் மானமுள்ள உங்களோட இந்த அறையில் தனிமையிலெ இருக்கேன்."

யாரைப் போல பிறக்க ஆசை?

எழுத்தாளர் புஷ்பா தங்கதுரை :



கல்கத்தா பல்கலைக் கழகத்தில் புரொபசராக இருந்தவர், மகேந்திரன். "எம்" (தமிழில் 'ம') என்று குறிப்பிடுவார்கள் அவரை. நேரம் கிடைக்கிற போதெல்லாம், ராமகிருஷ்ண பரமஹம்சரைக் காணப் போய்விடுவார். அவருக்கு சற்று எட்டத்தில் அமர்ந்து, அனைத்தையும் மிகக் கூர்மையாய் கவனிப்பார். ஒரு வார்த்தை பேச மாட்டார். அவர் தம் அனுபவங்களைப் புத்தகமாய் வெளியிட்டு, இந்த மனித குலத்துக்கே பேருதவி புரிந்தார். அவர் மட்டும் இல்லாமல் போயிருந்தால், பகவான் ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள் நமக்குக் கிடைத்திருக்காது. அந்த 'எம்' போல, யாராவது ஒரு மகான் அருகில் இருக்கிற பெரும் பாக்கியத்தை அடுத்த பிறவியிலாவது நான் பெற விரும்புகிறேன்.

— மௌலி

"நீ உன்னை நல்லவோ என்று சொல்லு இயா?"

"நிரூபிக்க இப்பம் என்னால முடியாது. கொஞ்சம் பொறுங்க."

"காலி பண்ணிக்கிட்டு எங்கெ போன?"

பதில் மவுனமாகவே இருந்தது. அவன் பார்வை, வெள்ளை பூசிய சுவரில் ஏதோ புள்ளி மீது ஊன்றியிருந்தது. ஒரு நெடு மூச்சுக்குப் பிறகு, துவக்க அத்தியாயத்தின் முதல் வரியை வாசித்தாள்.

"மேட்டுத் தெருவுக்கு கெட்டகாலம் ஆரம்பிச்சது. அங்கெ வச்சுதான்."

ஒரு பெரிய கதையின் ஆரம்ப அத்தியாயம் என்பதால், ஆர்வமிகுதியோடு கட்டிலிலிருந்து எழும்பிப் போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன்.

"சொல்லு."

"மணியைப் பாத்தினா?"

"11.30."

"எம்மனசை அழுத்தும் பாரத்தை யாருட்ட சொல்லி இறக்கி வைக்கணுமென்னு தெரியாமத்தான் அங்கே உட்கார்ந்திருந்தேன்."

"சொல்லு, நா கேக்கேன்."

"இந்த ராத்திரிக்கு 250 ரூபா."

"பரவா இல்லை. விடிய இன்னும் எவ்வளவோ நேரமிருக்கு."

"மேட்டுத் தெருவிலெ வச்சுதான், என் மகளை கர்ப்பமானேன். அதுக்கு அவர் பொறுப்பில்லையாம்; கருச்சிதைவு செய்யச் சொன்னாரு."

"செய்திருக்கலாமே?" என்ற போது அவள் முகம் சிவந்து கனத்தது. என்னை தகனம் செய்வது போல் பார்த்தாள்.

"உங்களுக்கெல்லாம் தெரிஞ்ச ஒரே வழி அதுதான்" என்றாள்.

அப்படியே உக்கி உட்கார்ந்துவிட்டேன், அந்தப் பார்வை அனல் தட்டி.

"எதுக்காக கருச்சிதைவு செய்யணும்? என் கணவன் மூலம் கர்ப்பமான குழந்தையை பிரசவிக்க எனக்கு உரிமை இல்லையா?"

விடை கேட்டு, கேள்வியுடன் எய்த பார்வையை என் முகத்திலிருந்து திருப்பி உருவவில்லை அவள்.

"கருவ கலச்சாதான் கூட வாழ்வேன் என்னாரு. அது முடிவு செய்ய வேண்டியது, யாருடைய வயிற்றிற்குள் கரு வளருதோ அவளே தான் எண்ணேன். கோவத்திலே இறங்கிப் போயிட்டாரு. ஒருவரோடு வாழுதுக்காக என் உருமையை விட்டுக் கொடுக்க முடியுமா?"

அவள் கண்கள் சொட்டிடும் என்று எதிர்பார்த்தேன்; அவை ஜொலித்துக் கொண்டிருந்தன.

"போனவர் திரும்பி வரவே இல்லையா?"

"வருவாரென்னு எதிர்பார்க்கல்ல. நாலாவதாக ஒரு பொண்ணு கட்டுதுக்கு என் கர்ப்பத்துக்கெ மேல போட்ட பழி அது."

மேசை மீதிருந்த கூஜாவிலுள்ள குளிர்ந்த தண்ணீரைக் காலி செய்தாள்.

"சாயா கொண்டு வரச் சொல்லட்டுமா?"

அவள் கவனத்தை என் உணர்ச்சியின் பக்கம் திருப்புவதற்காகக் கேட்டேன்.

"கிடைக்குமா? மணி என்னாச்சு?"

"1.05."

பெல் ஸ்விட்சை அழுக்கினேன்.

பையன் வந்து கேட்டான்.

"என்ன சார்?"

'டீயா, காப்பியா?' அவள் விருப்பத்தைக் கேட்டேன்.

"ஏதாவது."

கதவு சாத்தப்பட்டதும் அவள் கேட்டாள்

"எதுக்கு என்னைக் கூப்பிட்டிட்டு வந்தீங்க?"

என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. நடுச்சாமம்! ஒரு அறையின் தனிமையில் மாமிசக்கொழுப்புள்ள ஒரு பெண்ணின் அருகாமையில், விறுவிறுப்பேறிய நரம்புகளைக் கட்டுப்படுத்த ரொம்பவும் சிரமப்பட வேண்டிய இக்கட்டான சூழல். எதிர்மறையான ஓர் உணர்ச்சியின் உடும்புப் பிடிப்பில் புடையும் அவனை எப்படி வசப்படுத்துவதென்று தெரியாத மனக்குழப்பம். என் மனசின் அச்சாணியும் கழன்று போனது.

"நீ ஏதோ நெருப்பு மேல நிப்பதாகத் தெரியுது?"

"நான் நெருப்பு மேல நிக்கல்ல. நானே நெருப்பாகத் தகிக்கிறேன்."

"உன்னை எதுக்கு கூப்பிட்டு வந்தேனு இப்பம் எனக்கு தெரியல்ல."

"மறந்து போச்சா? நினைவுபடுத்தவா?"

"வேண்டாம்மா. உன் பாரத்தை இறக்கி வை."

"ஸாரிம்மா, உங்களுக்குப் பிறந்த குழந்தைக்குக் கொம்பு முளைச்சிருக்கு!"

"நான் அப்பவே சொன்னேன்! 'மாட்டுத் தீவன ஊழல் எல்லாம் நமக்கு வேண்டாம்'னு! இவர் கேட்டாத்தானே!"

— வே. முருகேசன்



பையன் கொண்டு வந்த டீ சூடாறவில்லை. உறக்கச்சடவு இல்லாவிட்டாலும், சாயாவின் சூட்டால் சற்று உற்சாகம் ஏறியது. தலைக்கு மேல் சுழன்று கொண்டிருந்த விசிறியின் அடிப் பகுதியிலுள்ள ஸ்டீல் தகடுக்குள் அவள் சுழன்றாள். விசிறியின் வேகத்தில் அவள் மனமும் சுழன்றது.

"என் மகளை ஜெயிலில் பிரசவிச்சேன்."

"ஜெயில்!"

நெஞ்சு நடுங்கி, கண்கள் பிதுங்கி வெளியே வரும் போலிருந்தது எனக்கு.

"ஏன் நடுங்குறியோ? ஜெயில்ல்தான் பிரசவிச்சேன்."

அவளுடைய கண்கள் உமிழ்ந்த வெளிப் பார்வை யாரையோ கடித்துக் குதறப் பாய்வது போல் காணப்பட்டது. "அந்த மிருகத்தை அப்படியே சும்மா விட்டிருப் பேன் என்னு நெனச்சீளா? இல்லை. நாலாவதாக ஒண்ணைக் கட்டி, அதுக்க மேல பழி சுமத்தி, அஞ்சாவதாக ஒண் ணைக் கட்ட பாப்பான். அவனை உடு லாமா?"

இரையைக் கைவிட்ட ஒரு வேட்டைப் புலிக்கு முன்னால் நடுங்கிக் குறுகி உட்கார்ந்து கொண்டிருந்தேன். பிரி சுழன்ற என் நாடி நரம்புகளெல்லாம் தளர்ந்து போயின. விடியலை நோக்கி மெல்ல நகரும் நேரத்தை வேகப்படுத்தத் தெரியாத தவிப்பு.

"அவன் புள்ளையை வயிற்றில் தாங்கிக் கொண்டு அவனைத் தேடித்திரிந்தேன். திசையன்விளையில் ஓட்டல் வச்சிருக் காண்ணு அங்கெ போனேன்; அங்கதான் நாலாவது பொண்ணு பாத்து வச்சிருந்தான். அவனுட்டெ சண்டை போடல்ல. அன்பா பேசினேன். மனைவியாகக் கூட காட்டிக் கிடல்ல. எவ்வளவோ பேசிப் பார்த்தேன். மசியல்ல. அவன் குழந்தையே இல்லேண்ணு மறுத்திட்டான். கருக்கலைச்சிட்டு போனா என்னையும் சேத்துக்கிடுவானாம். ராத்திரி ரொம்ப நேரமாயிட்டு, தங்கிவிட்டுப் போறேண்ணேன். புதுப் பெண்ணுடன் வாழ எடுத்துப் போட்டிருந்த ஊட்டுக்கு, யாரும் பாக்காம ரகசியமாக என்னைக் கூட்டிட்டு போனான். பாத்தியளா, கட்டின பெண்டாட்டி யைக் கள்ள உறவுக்காரியைப் போல கூட்டிட்டு போறத!"

"தனியாத்தான் படுத்திருந்தியா?"

"தனியாத்தான் படுக்கச் சொன்னான்; பயமா இருக்குண்ணு சொன்னேன்; படுத்தான். எனக்கு எப்படித் தூக்கம் வரும்?"

"அப்புறம்?"

"அப்புறம் என்ன! குடி மயக்கிலெ கெடந் தான்; தூக்கமில்லாத அந்த ராத்திரி எனக்குச் சாதகமாக இருந்தது. இனி அவன் எந்தப் பெண்மேலயும் பழிபோடப்படாதுண்ணு நெனச்சேன்."

அவள் மேலும் பேசவில்லை. அறைக்குள் ஒரு மூலையைப் பார்த்து உட்கார்ந்திருந்த அவ ளுடைய மனசை என்னால் அப்போது வாசிக்க முடிந்தது.

"நான் செய்தது தப்பா?"


கேள்வியில் குற்ற உணர்வு இல்லாம லிருந்தது.

உறைந்து உட்கார்ந்துவிட்ட நான், தனிமை யில் இருப்பது மென்மையான ஒரு பெண்ணு டனா, அல்லது சீற்றப்புலியுடனா என்ற குழப் பம் எனக்குள்.

பக்கத்து அறையில் சாம மவுனத்தைச் சோடா பாட்டில் சிதைத்தது. அறைக்கு வெளியே கால் அசைவுகள்; சாமத்தில் புக லிடம் தேடியவர்களுடைய சிரிப்பொலிகள்.

பொதிகை மலையிலிருந்து கேட்ட ஊளை

முதல் சம்பளம்!



ஜெயலலிதாவுக்குக் கிடைத்த முதல் வருமானம் எது தெரியுமா! அவரது 14-வது வயதில் மைலாப்பூர் ராதா சில்க் எம்போரியத்துக்கு மாடலிங் செய்ததற்காகக் கிடைத்த சொற்பத் தொகைதான். அந்த மாடலிங் போட்டோவை பார்த்துத்தான் ஸ்ரீதர் 'வெண்ணிற ஆடை' படத்துக்குத் தேர்வு செய்தாராம்.

தகவல் : அண்ணா அன்பழகன்

ஓய்ந்த பிறகு சொன்னாள் -

"நான் செய்தது தப்பா, சரியானு யாராவது ஒருவர் சொல்லித் தெரியணும்."

"உன்னெ தண்டிக்கல்லியா?"

"தண்டனையை வச்சு தப்பையும் சரியையும் நிர்ணயம் செய்ய முடியுமா?"

"நீதிமன்றத் தீர்ப்பு தப்பா?"

"எல்லாத் தீர்ப்பும் சரியா? எதுக்காகச் செய்தேன்னு விசாரிச்சாங்களா? பழந்தோலைக் களைவது போல என்னைக்களைய, நான் செய்த தப்புதான் என்ன? நீதிபதியும் வக்கீலும் போலீஸ்காரர்களும் எல்லாம் ஆண்கள் தானே?"

"..............................."

"பெண்மனுச்செ துடிப்பு என்னானு இவங்களுக்குத் தெரியுமா?"

"குழந்தை?"

"பராமரிப்பில்லாம ஜெயில்ல இறந்து போச்சு. அந்தக் குழந்தை இறந்து போச்சே, எதனாலேனு விசாரிச்சாங்களா? இங்கே நீதிமன்றம் எங்கே போச்சு? ஏன் பதில் பேசல்லே?"

"நீ பேசுது ஒண்ணுமே புரியல்லம்மா."

"புரியாது; எங்க விசயம் ஒண்ணுமே உங்களுக்குப் புரியாது. எங்க பேச்சும் புரியாது. நீங்கெ கண் அசைச்சுக் கூப்பிட்டால், பின்னால வருத குட்டி ஆடு நாங்கோ என்னு நினைச்சிட்டிரிக்கிறியோ."

அவனுடைய பேச்சைத் திசை திருப்ப எண்ணி நேரத்தைச் சொல்லி எச்சரித்தேன்.

"மணி 5.00 ஆச்சு; இப்பம் பஸ் பிடிச்சா தான் புலரும்போளர் போய்ச் சேரலாம்."

"எதுக்கு என்னை கூப்பிட்டிட்டு வந்தியோ?"

"அதுதான் எனக்குத் தெரியல்ல."

"தண்டனை முடிஞ்சு நேற்றுதான் விடுதலையாய் வந்தேன்."

"அவன் என்ன ஆனான்?"

"அவன் எறக்கல்ல."

"நீ ரொம்ப துணிஞ்சவோ, தாயே."

"துணிச்சல் இருந்ததினாலேந்தானே, உங்கெ பின்னாலே எறங்கி வந்தேன்? ஜெயில் கண்ட எனக்கு, இனி என்ன பயம்! உங்க மத்தியிலெ என்னால என்னைத் தற்காத்து உழைச்சு வாழ முடியும்."

கதவில் தட்டுதல் கேட்டது.

"பெட் காபி" பையனின் குரல்.

"டீயா, காப்பியா?"

"டீ". அவன் சொன்னான்.

புறப்படத் தயாரானோம். அறையை விட்டு வெளியே வந்தோம். விடி நிலவு தரையில் வியாபித்திருந்தது. மலைச்சரிவுகள், சிகரங்கள் தெரிந்தன. இலைகள் காய்ந்த மரங்கள் அசைவதற்குக் காற்று இல்லை.

அவன் பின்னால் நான் ஒரு குட்டி ஆடாக நடந்தேன். அவன் ஏறிய முதல் பஸ்ஸில் நான் ஏறினேன். அவன் இறங்கிய இடத்தில் இறங்கினேன். ஆயில் கொட்டிய தரையில், செவ்வெயில் விழுந்திருந்தது. "வரட்டுமா?" அவள் விடை கேட்டாள்.

"உன் பேரென்ன?" உள் அச்சத்தோடுதான் கேட்கத் தோன்றியது.

"மெஹருன்னிஸா!"

நடந்தாள்!



கஞ்சூஸ்...

உலகிலேயே மிகப் பெரிய கஞ்சூஸாகக் கருதப்படுகிறவர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ஹெட்டி கிரீன் என்ற பெண்மணி. இவருக்கு உள்ள பல வங்கிக் கணக்குகள் ஒன்றிலே மட்டும், 3,14,00,000 டாலர்கள் உள்ளன! செலவுக்கு இந்தக் கணக்கிலிருந்து பணம் எடுக்கவே மாட்டாராம்! இவரது மகனுக்கு காலில் ஒரு முறை அடிபட்ட போது இலவச சிகிச்சை தேடி இவர் அலைய, அதனால் ஏற்பட்ட காலதாமதத்தால் காயம் புரையோடிப் போய் காலையே வெட்டி எடுக்கும்படி ஆகிவிட்டது!

தகவல் :

பழங்கூர் மீரா முருகன்



• "அம்மாவின் சமையல்தான் பிடிக்கும்!"

கல்யாணம் போன்ற விசேஷங்களுக்குச் சமைப்பவர் ராகவன். கூட பத்து பேர் வேலை செய்கிறார்கள். விருந்துச் சமையலில் இவர் வைக்கும் பால் பாயசம் விசேஷம் என்கிறார்கள். ஆனால் இவர் யாருடைய சமையலை விரும்பிச் சாப்பிடுவார்?

"ஆயிரம் பேருக்குச் சமைத்தாலும் அம்மா சமையல் வருமா?"



• ராகவன்

"சந்தேகம் என்ன! என் அம்மா சமையலைத்தான் விரும்பிச் சாப்பிடுவேன்! அதிலும் அவர் செய்யும் கத்திரிக்காய் வறுவல் எனக்கு ரொம்பப் பிடிக்கும். பரிமாற பரிமாறச் சாப்பிட்டுக் கொண்டே இருப்பேன்!"

"உங்கள் மனைவி சமையல்?"

"என் அம்மா அளவுக்கு அத்தனை சுவையாக அவளுக்குச் சமைக்க வராது!"

"விருந்துகளில் சமைக்கிறீர்கள் சரி. உங்கள் வீட்டில் நீங்கள் சமைப்பீர்களா?"

"ஓ! நேரம் கிடைக்கிற போது சமைப்பேன். என் மனைவி, குழந்தைகள், அப்பா என்று அனைவருமே

திருப்பதிக்கு லட்டு

எனது சமையலை விரும்பிச் சாப்பிடுவார்கள். ஆனால் என் அம்மா மாத்திரம் அவ்வளவாக விரும்பிச் சாப்பிட மாட்டார்."

"ஏன்?"

"பூண்டு போன்ற மசாலா அயிட்டங்களை நான் அதிகம் உபயோகிப்பேன் என்பதால் அவருக்கு அது பிடிக்காது."

"பெரும்பாலும் நூறு பேர் இருநூறு பேர் என்று பெரிய பெரிய விருந்துகளுக்குச் சமைப்பவர்களால் நான்கைந்து பேருக்குச் சமைக்கத் தெரியாது என்று சொல்கிறார்களே, அது உண்மையா?"

"அப்படியெல்லாம் இல்லை. விருந்துச் சமையலின் சுவையை இரண்டு பேருக்குச் சமைக்கும் போதும் கொண்டு வர முடியும்."

"அப்படிச் சொல்வதற்குக் காரணம் உண்டு. விருந்துக்கான சமையல் என்றால், சமையலுக்குத் தேவையான அத்தனை அயிட்டங்களையும் ஒன்று விடாமல் வாங்கித் தருகிறார்கள். ஆனால் வீடுகளில் அப்படி யாரும் மளிகை வாங்குவதில்லை. முக்கியமான அயிட்டங்களை மட்டும்தான் வாங்குகிறார்கள். மற்றதெல்லாம், 'என்ன விருந்தா வைக்கிறோம்?' என்று ஒதுக்கி விடுவார்கள். அதனால்தான் எல்லா அயிட்டங்களையும் ஒன்றுவிடாமல் போட்டுச் சமைக்கிற விருந்துச் சமையலின் ருசி வீட்டுச் சமையலில் இருப்பதில்லை..."

"அது நிஜம்தான். விருந்துகளில் ருசி மட்டும்தான் முக்கியம். அப்போதுதான் சாப்பிடுபவர்கள் திருப்தியாவார்கள். அதனால்தான் மசாலா அயிட்டங்களை அதிகம் சேர்க்கிறோம். எண்ணெய் போன்றவற்றைத் தாராளமாக உபயோகிக்கிறோம். ஆனால் வீட்டுச் சமையலில் அப்படியில்லை. அம்மாவோ அல்லது மனைவியோ சமைக்கிறபோது ருசியை மட்டுமே மனத்தில் கொண்டு சமைப்பதில்லை; குடும்பத்திலுள்ளோரின் உடல் ஆரோக்கியத்தையும் மனத்தில் கொண்டுதான் சமைக்கிறார்கள். அதனால்தான் ருசியைக் கொடுக்கக்கூடிய சில பொருட்களை ஆரோக்கியம் கருதிக் குறைவாக உபயோகிக்கிறார்கள் அல்லது விலக்கியும் விடுகிறார்கள். எனவே, விருந்துச் சமையலின் ருசியையும் வீட்டுச் சமையலின் ருசியையும் ஒப்பிடுவதே தவறுதான்!" என்கிறார் ராகவன்.

— பிரின்ஸ்

படங்கள் : ஸ்ரீஹரி



'பாட்சா'வின் சாதனை!

இதுவரை மிக அதிக ரேட்டுக்கு தனியார் டி.வி.யால் வாங்கப்பட்ட படம் பாட்சா. ஒரே ஒரு முறைதான் ஒளிபரப்பலாம் என்றாலும் கொடுக்கப்பட்ட தொகை பன்னிரெண்டு லட்சம்.

டப்பிங் படங்களைத் தவிர்க்க முடியாதா?

பார்க்கவே முடியாத அளவுக்குச் சில டப்பாவான டப்பிங் படங்களை ஒளிபரப்பத்தான் வேண்டுமா? "வேறு வழி? இரண்டு ரஜினி படம், இரண்டு கமல் படம், இரண்டு புதிய ஹீரோக்கள் படம், இரண்டு பழைய படம் இவற்றோடு இரண்டு டப்பிங் படம். இப்படி பத்துப் படங்களையும் சேர்த்து ஒட்டு மொத்தமாகத்தான் விலை சொல்லுவார்கள். வேறு வழியில்லாததால் அப்படித்தான் நாங்கள் வாங்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் டப்பிங் படங்களைத் தவிர்க்க முடிவதில்லை!" என்றகிறார் ரபிபெர்னார்ட்!

பண்பாடு மீறாமல் ஒரு தொடர்!

கடந்த டிசம்பரில் தொடங்கி தினமும் டி.டி.1–ல் ஒளிபரப்பட்டு வரும் தொடர் ஃபார்ஸ். 1300 எபிசோடுகள் கொண்ட இதை தயாரிக்கும் அனைவரும் தேசிய நாடகப் பள்ளியின் மாணவ-மாணவிகள். "இன்றைய டி.வி. தொடர்களுக்கே உரிய சிகரெட் பிடிக்கும், மது அருந்தும் பெண், ஆண்–பெண் தவறான உறவுகள் போன்ற நமது பண்பாட்டுக்குப் புறம்பான எந்த விஷயமும் கண்டிப்பாய் இடம் பெறாது!" என்கிறார் இதன் டைரக்டர் சோஹில் ததாரி.

— சி.எம்.

வட்டமேஜை

தராசு சொன்னது முற்றிலும் சரி!

கூடையில் உள்ள நண்டுகளில் ஒரு நண்டு தப்பிக்க நினைத்துக் கூடையின் விளிம்பில் ஏறினால், மற்றொரு நண்டு, அதன் காலைப் பிடித்து இழுத்து மீண்டும் கூடைக்குள்ளேயே விட்டுக் கொள்ளுமாம். காரணம் பொறாமை. இந்தக் கதைதான் எனக்கு ஞாபகம் வந்தது 'தி.மு.க. – த.மா.கா.' கட்டுரையைப் படித்த போது.

தேவராயனேரி, மு. கருணாநிதி.

த.மா.கா. எம்.எல்.ஏ. 'இனி எங்கள் சத்தம் கொஞ்சம் அதிகமாகும்' என்று கூறியிருக்கிறார். யுத்தம் வராமல் இருந்தால், சந்தோஷம்தான்!

பூதப்பாண்டி, ஆ. அழகேஷ்.

'ஆபாசமா, நானா?' என்று நடிகை பூஜாபட் சொன்னதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? நம்ம ஊர் நடிகைகள் இதைக் காட்டிலும் கெட்டிக்காரத்தனமாய் 'கவர்ச்சி வேறு; ஆபாசம் வேறு' என்று சொல்லித் தப்பிப்பது உமக்குத் தெரியாதா?

திருப்பூர், ப. சங்கர்.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்பதற்கு பி.ஏ. ஜாய்க்குட்டியின் குடும்பம் ஓர் எடுத்துக்காட்டு. 'என் குழந்தைகளுக்கு நான்தான் ரோல் மாடல்' என்று கூறும் ஜாய்குட்டியினைப் போல் ஒவ்வொரு அப்பாவும் இருந்து விட்டால் போதும். நேருவும், விவேகானந்தரும் காணத் துடித்த நவ பாரதத்தை உருவாக்கி விடலாம்.

காவேரிப்பட்டணம்,

மு. கா. நெடுமாறன்.

இரா. முருகனின் 'ரட்சகன்' படித்தேன். கதையா அது? என்ன சொல்லிப் பாராட்ட! நகைச்சுவை, தேசபக்தி, தேசிய ஒருமைப்பாடு, சேவை மனப்பான்மை – இத்தனை நல்ல விஷயங்களையும் இயற்கையாக இணைத்துள்ளார்.

நெல்லை,

தி.க. பாலசுப்பிரமணியன்.

'கல்கி கன்ஸல்டன்ஸி' பகுதி மிகவும் உபயோகமானது. பங்குச் சந்தை, நாட்டு பொருளாதாரம், கம்பெனி விவகாரம் போன்றவற்றிலுள்ள சாதாரண மக்களுக்குப் புரியாத நுணுக்கங்களை ஒவ்வொரு வாரமும் பிட்டுப் பிட்டு வைப்பது சுவையாகவும் நேர்த்தியாகவும் பயனுள்ளதாகவுமிருக்கிறது.

எலந்தங்குடி, டி. முகம்மது வசீம்.

கல்கி மெமோரியல் ஷார்ட் ஸ்டோரி காம்படிஷனுக்கு ஸ்டோரி அனுப்ப லாஸ்ட் டேட் – 15 ஜூன் என்று ரிமைண்ட் செய்து, ஃபுல் டிடெயில்ஸ் நெக்ஸ்ட் இஷ்யூவில் பார்க்க என்றும் அறிவித்து, டமில் சிட்டிசனை (குடிமகன்) ஏன் ப்ரொவோக் செய்கிறீர்கள்? இதன் பலனாக இனி தமிழ்ப் பத்திரிகைகளில் ஒரு பக்கத்தில் குறிப்பிட்ட சதவிகிதத்துக்கு அதிகமாக பிறமொழி வார்த்தைகள் இருந்தால் அபராதம் என்றும் சட்டம் வரலாம்!

சிட்லபாக்கம்,

அ. ஷண்முகசுந்தரம்.

'சென்னையில் நவீன ரவுடி ராஜ்ஜியம்' கட்டுரை படித்தேன். படித்தவர்களே இப்படி கேவலமான வேலைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை அறிந்த போது மிகவும் வேதனையாக இருந்தது.

காப்பாரத்தாம்பட்டி,

கே. ராஜாதிருவேங்கடம்.

எது எதற்கோ கோடிக் கணக்கில் விரயம் செய்யும் அரசு, ஹோம் கார்டு பணியாளர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுத்து ஊக்கப்படுத்தினால் மக்களுக்குப் பாதுகாப்பளிக்க இன்னொரு காவல் படை கிடைக்குமே!

நெய்வேலி – 3,

ப. உத்தண்டராமன்.

பரிசு பெற்ற கேள்விக்குத் தராசு தந்திருக்கும் பதில் : 'முதல்வரின் ஆர்வமும், சுறுசுறுப்பும் அமைச்சர்கள், அதிகாரிகளிடமும் பரவ வேண்டும்' என்பது. இந்தப் பதில் சரியானது என்பதற்கு எனது அனுபவங்களே உதாரணம். கலைஞர் ஆட்சிக்கு வந்ததும், உடனே காரியங்கள் நடந்தன. இப்போது? பொதுப் பிரச்னைகளான, எங்கள் ஊர் மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டிக்குப் புதிய மோட்டார் பொருத்துவது குறித்தும், போக்குவரத்து மிகுந்த சாலையோரத்தில் உள்ள இரண்டு மொட்டைக் கிணறுகளுக்குப் பாதுகாப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றியும் எழுதினேன். அதுவும் சம்பந்தப்பட்ட அலுவலகத்தின் கவனத்திற்கு அனுப்பப்பட்டு, அதிகாரிகளும் நேரில் வந்து பார்வையிட்டனர். உடனடியாக ஆவன செய்யப்படும் என்று கூறியும் சென்றார்கள்... ஆறு மாதத்திற்கும் மேலாகிறது. இதுவரை அடுத்த நடவடிக்கை இல்லை. கப்சிப்தான்!

காட்டூர், எஸ். அருள்மொழி.


• ஒரே குட்டையில்...



• ...ஊறிய மட்டைகள்!



• கிஷ்கிந்தா காண்டம்!



• கட்டியச் செய்தி



• தமிழுணர்வைத் தேடி...



நக்கலடிக்கிறாரே அத்வானி?

● வி. சத்தியப்ரியன், சென்னை – 15.

? 'தமிழனுக்குப் பதவி இல்லையா?' என்று கேட்கிறார்கள். தமிழன் என்ற உணர்வை உருவாக்கியதே திராவிட முன்னேற்றக் கழகம்தான்...' என்று கருணாநிதி கூறுவது எதைக் காட்டுகிறது?

! அவர் எப்போதும் போல் சாமர்த்தியமாகப் பேசுகிறார் என்பதை... 'தமிழனுக்குப் பிரதமர் பதவி என்னும்போது அந்த உணர்வு எங்கே போய் ஒளிந்து கொண்டது?' என்றுதான் தமா.காவினர் கேட்கிறார்கள்.

● த. குணசேகரன், ஈரோடு.

? 'சென்னை அபிராமபுரம் வீட்டில் கைப்பற்றப்பட்ட பரிசுப் பொருள்கள் அனைத்தும் கட்சிக்குச் சொந்தமானவை' என்று ஜெயலலிதா சொல்கிறாரே?

! கட்சிக்குச் சொந்தமானவை கட்சி அலுவலகத்தில் அல்லவா இருக்க வேண்டும்!

● ஆர். பி. ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.

? நம் நாட்டின் தலைநகர் டெல்லி, தந்திர பூமியா...?

! நிச்சயமாக! ஆனால், அரசியல் தந்திரங்களை முறியடிக்க நீதிமன்றங்களும் தேர்தல் கமிஷனும் தீவிரமாக இருப்பதுதான் ஆறுதல். உட்கட்சித் தேர்தல் நடத்தாமலே பாவலா காட்ட நினைக்கும் காங்கிரஸுக்குத் தேர்தல் கமிஷன் நோட்டீஸ் அனுப்பியுள்ளது ஓர் உதாரணம். இந்த checks and balances தாம் நம் ஜனநாயகம் உயிர் விடாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

● என். அஸ்வின் குமார், புதுக்கோட்டை – 1.

? இந்தக் கோடை காலத்தில் தண்ணீர் தாகத்தால் நா வறண்டு போகிறது. தொண்டை காய்ந்து போகிறது. எது குடித்தாலும் தாகம் அடங்கவே மாட்டேன் என்கிறதே... நல்ல வழி ஒன்று கூறுங்களேன்...?

! லைட்டாக டீ – நல்ல சூடாக இருக்க வேண்டும். குடித்துப் பாருங்கள் – உடனடியாக தாகம் அடங்கும். விஞ்ஞானரீதியான காரணம் – சூடாகப் பருகும் போது, உடல் வியர்த்து, வியர்வையினால் உடல் உஷ்ணம் சமனப்படுகிறது.

● சி. பூங்கோதை, சென்னை – 78.

? ஜெயலலிதா – சென்னா ரெட்டி வழக்கு முடியும் வரை தமது வழக்கை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று லல்லு பிரசாத் யாதவ் கூறு வது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன...?

! எந்த அரசியல்வாதியும் வழக்கைச் சந்திக்கத் தயாராயில்லை என்பதிலிருந்து என்ன தெரிகிறது...? அரசியல்வாதிகள் (வெகு சிலர் தவிர) யோக்கியர்கள் இல்லை என்பது வெட்ட வெளிச்சமாகிறது!

● ச. தேவி, விருதுநகர்.

? இன்றைய கல்வி முறை எப்படி இருக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள்...?

! எழுபது ஆண்டுகளாக முழுமையான மாணவர்களை உருவாக்கிவரும் சாந்திநிகேதன், விச்வ பாரதி கல்வி முறையை ஆதர்சமாகச் சொல்லலாம் என்று பார்த்தால்... அங்கும் அரசியல் புகுந்து, மாணவர்களிடையே வன்முறை, போலீஸ் தலையீடு என்று ஏக கலாட்டா... தாகூரின் கனவுகளைக் காற்றில் பறக்க விட்டாயிற்று!

● எம். அசோக்ராஜா, திருச்சி - 15.

? 'காட்டுத் தீ – ஆடிக்காற்று சேர்ந்தது போல் இருக்கும். ம.(அ)தி.மு.க. கூட்டணி' என்கிறாரே காளிமுத்து...?

! அடக் கடவுளே! காட்டுத் தீ பரவினால் காடே அழிந்து நாசமாகி விடுமே!

● அ. ஷண்முகசுந்தரம், சென்னை - 64.

? எட்டயபுரம் பாரதி மணி மண்டபத்தைப் புதுப்பிக்க அரசு முன்வந்துள்ளது பற்றி...?

! கல்கி நூற்றாண்டை (9.9.1999) வரவேற்கும் கட்டியச் செய்தி. அவர் முனைப்பில் எழுந்த மண்டபம் புதுப் பொலிவு பெறுவது ஒரு நல்ல ஆரம்பம்.

● இரா. சந்திரசேகரன், விருதுநகர்.

? தி.மு.க. ஆட்சியில் லஞ்சம் இல்லாமல்

• 'அண்ணாமலை...



• ...கைதொழ'



• சாமர்த்தியம் எப்படி...?



• அழிக்கும் உவமை!



• அடங்கிய வாசிப்பு...



காரியம் நடக்கிறது என்று ஆர்க்காடு வீராசாமி கூறியிருப்பது பெருமிதத்திலா அல்லது ஏமாற்றத்தினாலா...?

! 'லஞ்சம் இல்லை' என்று தாமே கூறுவதற்குப் பதில், 'மக்கள் லஞ்சம் இல்லை என்று சொல்கிறார்கள்' எனப் பேச முடிந்திருந்தால் பெருமிதமாக இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு பேச முடியாமல் இருப்பது ஏமாற்றம் அளிக்கலாம்.

● ஹஸன் முஹம்மத் அஸனப்பா, சேலம் – 5.

? 'முஸ்லிம் விரோதம்; பாபர் மசூதி இடிப்பு...' போன்ற குற்றச்சாட்டுகள் எழுந்த பிறகுதான் பி.ஜே.பி. எம்.பிக்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது' என்று இல. கணேசன் சொல்வது, என் போன்று மத நெறியுடன் நடந்து கொள்ளும் முஸ்லிம்களின் மனத்தை வேதனைப் படுத்தியிருக்கிறதே?

! இல. கணேசனும் சரி, இதர பி.ஜே.பிக்காரர்களும் சரி... இப்படிப் பொறுப்பில்லாமல் பேசுவது முதல் முறையல்ல. அடுத்து ஆட்சிக்கு வர பலமான வாய்ப்பு பெற்றுள்ள ஒரு கட்சி, அனைத்துத் தரப்பினரின் உணர்வுகளையும் மதிக்கக் கற்பதே புத்திசாலித்தனம்.

● த. சேக் முகம்மது, சிதம்பரம் – 1.

? ஜனாதிபதி தேர்தலில் சேஷன் போட்டியிட்டால் வெற்றி வாய்ப்பு உண்டா?

! சேஷனை ஆதரிக்கிற அளவுக்கு அரசியல் கட்சிகள் அசடர்கள் அல்ல...

● லெ. நா. சிவகுமார், போரூர். ☐

? இங்கிலாந்தில் 'லேபர்' கட்சி என்கிறார்களே – அக் கட்சியினர் உழைப்பாளிகளா...?

! பாட்டாளிகள்! கடந்த மேஜர் ஆட்சியில், பெரும்பாலான அமைச்சர்கள் ஆக்ஸ்ஃபோர்டு, கேம்ப்ரிட்ஜில் படித்தவர்கள். தனியார் பள்ளிகளுக்குப் போனவர்கள். டோனி ப்ளேர் அமைச்சரவையிலோ நேர் மாறுதல். பெரும்பாலோர் சாதாரண அரசாங்கப் பள்ளிகளில் படித்தவர்கள்; சராசரி கல்லூரிகளில் பயின்றவர்கள். பிரதமர் மட்டும் விதிவிலக்கு!

● ஏ. என். நிலவர்னிஷா நஸீர், சென்னை - 4.

? மாட்டுத் தீவன ஊழல் குஜ்ராலின் ஆட்சியை ஆட்டி விடுமா...?

! இப்போதைக்கு பார்லிமெண்டை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறது... 'லல்லுவின் ஆட்சியை ஆட்டுமா? குஜ்ராலின் ஆட்சியை ஆட்டுமா?' என்பது பீஹார் ஆளுநரின் நெஞ்சுரத்தையும் பிரதமரின் சாமர்த்தியத்தையும் பொறுத்தது.

● பி. பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி.

? கருணாநிதி தமக்குத் துரோகம் செய்து விட்டார் என்று கூற மூப்பனார் தயங்குவது ஏன்...?

! அதுதான் அரசியல்! எதிர்காலத்தை உத்தேசித்து, கசப்புணர்வை விழுங்க வேண்டியிருக்கிறது. தி.மு.க. – த.மா.கா. உறவைத் துண்டித்துக் கொள்ள இருதரப்புத் தலைவர்களுக்குமே விருப்பமில்லை என்பதால் இருவருமே அடக்கி வாசிக்கிறார்கள்...

● ஆரார் ஜேந்திரர், குடந்தை.

? 'ஜப்பானியரால் மூன்று நாட்களில் பீஹாரை ஜப்பானாக ஆக்கிக் காட்ட முடியும். லல்லு பிரசாத்தோ, அதே மூன்று நாட்களில் ஜப்பானையே பீஹாராக்கி விடுவார்...' என்று அத்வானி நக்கலடிக்கலாமா...?

! 'ஒரே நாளில் அயோத்தியை கிஷ்கிந்தாவாக்கியவர்களின் திறமை நமக்குத் தெரியாதா என்ன...?' என்று லல்லு பதிலுக்கு நக்கலடிக்கலாம்.

● ஏ. எஸ். பட்டப்பா, ஸ்ரீரங்கம்.

? பழைமையில் புதுமைகள் தங்குதடையின்றிக் கலப்பதற்கு ஏன் தடை சொல்ல வேண்டும்...?

! கலையுணர்வுடன், அழகுணர்ச்சி குன்றாமல் கலப்பதைத் தடையே சொல்ல முடியாது. உதாரணமாக, எச்.எம்.வி. நிறுவனம் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் இரட்டை காஸெட் – 'அண்ணாமலை கைதொழு...' தேவார, திருவாசகங்களை எம்.எஸ். விச்வநாதன் புதிய மெட்டுகளில் அமைக்க, பலர் பாடியிருக்கிறார்கள் – பின்னணி இசையுடன். அங்கங்கே துளி 'சினிமாத்தனம்' எட்டிப் பார்க்கத்தான் செய்கிறது என்றாலும் சிறந்த முயற்சி. அ.ச.ஞானசம்பந்தத்தின் இணைப்புரையுடன் கேட்கையில் அமைதியும் மனநிறைவும் உண்டாகிறது.

☐ ரூ. 50 பரிசு பெறுபவர் : லெ. நா. சிவகுமார், 8, பத்மாவதி தெரு, சந்தோஷ் நகர், மதனந்தபுரம், போரூர் - 600 116.

ஸ்டார் ப்ளஸ்ஸில் நமக்குப் பரிச்சயமான பல இந்தித் தொடர்கள்; இந்தி டப்பிங்கில் ஆங்கிலத் தொடர்கள்; ஸ்டார் மூவீஸில் ஆங்கிலப் படங்களுக்கு இந்தி சப்–டைட்டில்கள்; ஸ்டார் ஸ்போர்ட்ஸில் கூட இந்தி காமெண்ட்ரி... இந்நிலையில் ஏ.டி.என், ஜீ டீவி, ஹோம் டீவி போன்ற சாட்டிலைட் சானல்கள் படுத்துவிட்டனவா? அல்லது ஸ்டாருடன் போட்டி போடுகின்றனவா? இது பற்றி மும்பையிலுள்ள சிலரிடம் கேட்ட போது...

'ஸ்டார்' வால்யூ எப்படி இருக்கிறது?

– ஒரு சர்வே!



அல[illegible]ராபால் (பி.எஸ்சி. மாணவர்): பேவாட்சுக்கும், 'போல்ட் அண்ட் ப்யூட்டி ஃபுல்'லுக்குமாக ஸ்டாரைப் பார்ப்பவர்கள், அது எந்த மொழியிலிருந்தாலும், –இரேக்கமோ இலத்தீனோ கூட– பார்த்துக் கொண்டிருப்பார்கள். கவர்ச்சியை விட்டுவிட்டு தரத்தை நோக்கும்போது எல்லாவற்றையும் இந்திப் படுத்தி, ஸ்டார் தன் நட்சத்திர அந்தஸ்தை இழந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்! என்னுடைய ஃபேவரிட்டான 'V'சானலில், 'லோகலைஸேஷன்' என்ற பெயரில் இந்தி இணிக்கப்பட்டிருப்பதையே, இசைக்கு மொழி வரம்பு இடையாது என்ற நோக்கில்தான் சகித்துக் கொள்ள முடிகிறது... அதே கதி சினிமா, நாடகம் எல்லாவற்றுக்குமென்றால்.. நோ! நோ!




அல்பா வோஹ்ரா (குடும்பத் தலைவி): நான் கூட்டுக் குடும்பத்தில் வசிப்பவள். 'என் குழந்தைகளும் உன் குழந்தைகளும் நம் குழந்தைகளோடு விளையாடுகின்றன' என்ற ரீதியில் கணவனும் மனைவியும் பேசிக் கொள்ளக் கூடிய ஆபாச வசனங்கள், குழுக்கள் நிறைந்த இந்தித் தொடர்களை, எல்லோருடனும் உட்கார்ந்து பார்க்கவே கூசும். இந்த அழகில், புரியாத ஆங்கிலத்தில் வசனங்கள்

இருக்கும் போது ஏற்படாத அவமானம், இந்தி சப்-டைட்டில்கள் மூலம் புரியும்போது, அதிகக் கூச்சமேற்படுகிறது. குடும்பத்துடன் ரசிக்கக் கூடிய அந்தாக்ஷரி, சரிகம.. போன்ற நிகழ்ச்சிகளைத்தான் பார்ப்போம். எங்கள் ஓட்டு 'ஜீ' டீவிக்கே.



வினோத் (பொறியியல் மாணவர்): கேஷுவல் கேம்ஸுக்கு ஹோம் டீவி - 'ஆவோ கெஸ்கரே', 'பார்ன் லக்கி' போன்றவை நல்ல பொழுது போக்கு; அறிவு பூர்வமான நிகழ்ச்சிகளுக்குத்தான் டிஸ்கவரி சானல் இருக்கவே இருக்கிறதே! 'ஸ்டார்' எல்லாம் 'மாஸ்க்', 'ஸ்பீட்' போன்ற க்ளீனான இங்கிலீஷ் படங்களுக்குத்தான். இந்திக்காக இல்லை.

மஞ்சு ஜேவானி (அரசு ஊழியர்): ஸ்டாருக்கென்று புதிதாக முளைத்திருக்கும் ஆடியன்ஸ் பழைய தூர்தர்ஷன் ஆடியன்ஸ் தான். அங்கேயிருந்த தொடர்களே இங்கே வந்திருப்பதால் ஏற்பட்டிருக்கும் தாற்காலிக மாற்றம் இது. டி.டி.தன் பாலிஸியை மாற்றிக் கொண்டால், இந்த ஆடியன்ஸ் திரும்பி விடுவார்கள். இந்திப்படுத்தப்பட்ட ஆங்கிலத் தொடர்களுக்கு வரவேற்பு அதிகமில்லை. சப்-டைட்டில்களைப் படித்துக் கொண்டு சினிமா பார்ப்பது நரகம். இந்தியில் ஸ்போர்ட்ஸ் வர்ணனை ஒரு கேலிக் கூத்து!





ஜெய்சங்கர் (மெடிகல் ரெப்): சுவாபிமான், ஹஸரத்தேய்ன், சாந்தி, ஜுனூன், தாரா, இப்படி வருஷக் கணக்கில் ஓடி கொட்டாவி வரவழைக்கும். சமூக இலக்கில்லாத வளவள தொடர்கள்; இதை விட்டால் ஒரே மாதிரியான மர்டர் மிஸ்ட்ரிகள்; அல்லது ஹாஸ்யம் என்ற பெயரில் இரண்டாந்தரக் குதறல்கள்; விட்டால் 'கௌண்ட் டௌன்' என்ற போர்வையில் நாலாந்தர நடனங்கள்- இந்தத் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கத் தானே ஸ்டாரும், டிஸ்கவரியும், பி.பி.சி.யும்! அங்கேயும் இதே என்றால்... பேசாமல் ஜீ டீவியில் ஆஷாராம் செய்யும் உபன்யாசத்தையும், செய்திகளையும் பார்த்துவிட்டு, டீ.வி.யை மூடிவிடுவதுதான் உத்தமம்!



தினேஷ் ஜெயின் (பிஸினஸ்மேன்) இப்போதெல்லாம் சானல்களும் நிகழ்ச்சிகளும் 'ம்யூசிகல் சேர்' மாதிரி ஆகி விட்டன. ரு -பரு, ஜுன்தா கீ அதாலத், ப்ரியா டெண்டுல்கரின் டாக் ஷோ, ஹெட்ஸ் அண்ட் டெய்ல்ஸ் போன்ற நிகழ்ச்சிகள் எந்தச் சானலில் எந்த மொழியில் வந்தாலும் 'ஜிந்தா பாத்!' தரக் குறைவானவை- நம் கலாசாரத்துக்கு ஒவ்வாதவை எதில் வந்தாலும் 'முர்தா பாத்!' இதுதான் என் டீ.வி. பாலிஸி.

மும்பையிலிருந்து: **ஜெ.ஆர்.**

"**வ**ரவர இந்தக் கேபிள் டீ.வி. ஆப்பரேட்டர்களின் லொள்ளு தாங்க முடியலே..." என்று புலம்பித் தள்ளிக் கொண்டிருந்த சகபாடியை விசாரித்தபோது, அவரது விரிவாக்கப்பட்ட பிரலாபம்–

"ஜெமினி டீ.வி.யிலேயோ சன் டீ.வி.யிலேயோ நடு நிசிக்கு நல்ல நல்ல சினிமாப் பாட்டா பாத்துக்கிட்டு இருக் கறபோது லோக்கல் மளிகைக் கடை விளம்பரம், டியூ டோரியல் காலேஜ், தையல்கடை, கம்ப்யூட்டர் சென்டர் அட்வர்டைஸ்மெண்ட்... சகலமும் டீ.வி. திரையைப் பாதி அடைச்சுக்கற மாதிரி ஓடிட்டுக் கிடக்கு... எல்லாம் நம்ப கேபிள் ஆப்பரேட்டர் உபயம்..."

மெய்யாலுமே கஷ்டம்தான்!

கேபிள் டீ.வி. கம்பெனிகள் செயற்கைக் கோள் டிரான்ஸ்பாண்டர் வாடகை, தயாரிப்புச் செலவு அது இது என்று கோடி கோடியாகச் செலவு செய்து ஏக சிரத் தையோடு புதுப்புது நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி என்ன பிரயோஜனம்? அவை எல்லாம் தெருக்கோடி கேபிள் ஆப்பரேட்டரின் டிஷ் ஆண்டெனா மூலமாகத்தான் சந்தாதாரர்களின் வீட்டுத் தொலைக்காட்சிப் பெட்டிக்குப் போக முடியும். வருவதை அப்படியே ஒளிபரப்பிவிட்டுப் போகாமல் கைச் சரக்கையும் சேர்த்துக் கொடுக்கிற கேபிள் ஆப்பரேட்டர்களைக் கேபிள் டீ.வி. ரசிகர்கள் பார்க்கிற பார்வை கேசரியைத் தேவேகௌடா பார்ப்பதற்கு இணையானது.

புதுசாக சாட்டிலைட் சானல் ஆரம்பிக்கும் யாரும் கேபிள் ஆப்பரேட்டர்களின் ஒத்தாசை இல்லாமல் இங்கே குப்பை கொட்ட முடியாது. இவர்கள் 'டிஷ்'ஷில் பிடித்து ஒளிபரப்பாத வரை புது சானல் நிகழ்ச்சி எல்லாம் காற்றில் கலந்து வெறுமனே கரைய வேண்டியதுதான்.

நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப கேபிள் டீ.வி. கம்பெனி என்ற சாட்டிலைட் டீ.வி. கம்பெனிகள்... இருபத்து நாலு மணிநேரமும் பார்த்து ரசித்து போஸ்ட் கார்டில் கேள்விக்கு பதில் எழுதிப் போட ரசிகர்கள் கோடிக் கணக்கில். நடுவில் எதுக்கு கேபிள் ஆப்பரேட்டர் நந்தி மாதிரி?

வேண்டாம் என்று விலக்க வந்து விட்டது டி.டி.எச். (DTH-Direct to Home)) செயற்கைக் கோளிலிருந்து நேராக வீட்டுக்கு வரும் ஒளிபரப்பு. மேல் நாடுகளில் ஏகப் பிரபலமாகி விட்ட டி.டி.எச். சீக்கிரம் நம் பேட்டையிலும் நுழைந்துவிட பிரகாசமான சாத்தியக் கூறுகள். இதற்குத்தான் கேபிள் ஆப்பரேட் டர்கள் ஒரு நாள் அடையாள எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

டி.டி.எச். எப்படி செயல் படுகிறது?

நல்ல தரமான ஒலி–ஒளி யோடு தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி களை டி.டி.எச். டீ.வி. கம்பெனி செயற்கைக் கோளுக்கு அனுப் பும். இது வழக்கமான சாட்டி லைட் சானல் டீ.வி. கம்பெனி கள் செய்வது போலத்தான்.

டி.டி.எச். டீ.வியைக் கண்டு களிக்க வீடுகளில் டி.எஸ்.எஸ். (DSS) என்ற அமைப்பு இருந்தால் போதும். என்ன அது?


கத்தரிக்காய்



சமையல் செய்ய உபயோகிக்கும் இரும்புச் சட்டி (வாணலி என்றால் ரேடியோ ஞாபகம் வருகிறது) சைஸில், அதாவது பதினெட்டு அங்குலம் விட்டமுள்ள டிஷ் ஆண் டென்னா, மற்றும் தொலைக்காட்சிப் பெட்டியின் மேல் வைக்க டிகோடர் பாக்ஸ் (Decoder Box) என்ற சிறிய உபகரணம்.

டிஷ் ஆண்டென்னா ஒளியலைகளைப் பிடிக் கத்தானே? ரொம்ப சரி. அப்ப டிகோடர் பாக்ஸ்?

டி.டி.எச். கம்பெனி அப் படியே நிகழ்ச்சிகளை செயற் கைக்கோள் மூலமாக ஒளி





கேபிள் ஆபரேட்டர்!

பரப்பினால், டிஷ் உள்ள மகா ஜனங்கள் யாவரும் சுலபமாக அதைப் பிடித்து டீ.வி.யில் பார்க்கலாம். பாராட்டு வரலாம். பைசா வர வேண்டுமே டீ.வி. கம்பெனிக்கு!

காசு வசூலிக்க ஒரே வழி நிகழ்ச்சியை ஒளிபரப்பும்போது ஒளியலைகளைப் பூடகமாக உருமாற்றி அனுப்புவது. 'கோடிங்' (Coding) என்ற இந்த முறையில்தான் ஸ்டார் மூவிஸ் படங்களும் ஜீ மூவிஸ் படங்களும் ஒளிபரப்பப்படுகின்றன. (இதற்கான டிகோடர் பாக்ஸை கேபிள் ஆபரேட்டர் வைத்திருப்பார்.)

பூடகமாக டிஷ்ஷில் பிடித்த டி.டி.எச். ஒளியலையை மாற்றி டீ.வி.யில் சாதாரணமாகத் தெரிய வைக்க உபயோகப்படுத்தப்படும் கருவிதான் டிகோடர் பெட்டி. இதன் உள்ளே அமைந்திருக்கும் தொழில்நுட்பம் இந்த பூட்டுத் திறக்கும் வேலையைக் கனகச்சிதமாக நிறைவேற்றுகிறது. டி.எஸ்.எஸ்.ஸில் உள்ள மைக்ரோ சில்லு அடிப்படையில் இயங்கும் தொழில்நுட்பம் இது. இப்படி சாட்டிலைட் சானல்கள் கேபிள் வொயர்கள் மூலம் வராமல் நேரடியாகவே நமது வீட்டுக்கு வருவதால் ஒலி-ஒளியின் தரம் துல்லியமாக இருக்கும் என்பது இன்னும் விசேஷம்!

டிகோடர் பாக்ஸ் உபயோகிக்க வருடம் ஒரு முறையோ இல்லை குறிப்பிட்ட தவணைகளிலோ டி.டி.எச்-டீவி கம்பெனிக்குப் பணம் கட்ட வேண்டும் என்பதால், அந்த டீவி கம்பெனிகளுக்குச் சீரான மாதவருமானம் என்று ஜாதகத்தில் எழுதியிருக்கிறது. மேலும் சின்ன டிஷ் விற்ற வகையிலும் கொள்ளை லாபம்தான்.

இந்த டி.டி.எச். கனெக்ஷன் பெறுவதற்குச் சுமார் பதினைந்தாயிரம் வரை ஆரம்பச் செலவு ஆகலாம். அதன் பிறகு மாதா மாதம் நூற்றைம்பதோ இருநூறோ கட்ட வேண்டும்.

அமெரிக்காவில் டிரக்ட்டீவி (DIRECTV) போன்ற டி.டி.எச் கம்பெனிகள் சக்கைப்போடு போடுகின்றன. 175 சானல்களில் வந்து விழும் நிகழ்ச்சிகள், இரண்டு கோடிக்கு மேல் ரசிகர்கள்... குதூகலத்துக்குக் குறையேது? நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவே மூன்று செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவியுள்ளது டிரக்ட்டீவியின் உரிமையாளரான ஹ்யூஸ் எலக்ட்ரானிக்ஸ்!

'டி.டி.எச்'சில் இன்னொரு சிறப்பு. சினிமா, விளையாட்டு நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் பணம் கட்டிப் பார்த்துக் கொள்ளலாம். அதாவது, 175 சானல் நிகழ்ச்சி போக, உங்களுக்கு விசேஷமாக வேறு நிகழ்ச்சி பார்க்க வேண்டுமா? காசு கொடுங்கள். காட்டப்படும். இதற்காக வீட்டுத் தொலைபேசியும் டி.எஸ்.எஸ்ஸோடு இணைக்கப்படும். இது எத்தனை மணி நேரம் விசேஷ நிகழ்ச்சி

அருள்வாக்கு



கள்ளனைக் கண்டுபிடிக்க மண்ணில் பதிந்த காலடிச் சுவடு இருக்கிறது போல், உள்ளம் கவர் கள்வனான ஸ்வாமியின் காலடி பிரபஞ்சத்தின் எல்லா இடத்திலும் பதிந்து கிடக்கிறது. நம் கெட்டிக்காரத்தனமும் அவனது காலடி அடையாளம்தான். இந்தக் கெட்டிக்காரத்தனத்துக்கெல்லாம் ஓர் ஆதாரம் இருக்க வேண்டும் என்று அது காட்டிக் கொடுப்பதால் அதுவே காலடியாகிறது.

சிருஷ்டிகர்த்தனாக ஒரு ஸ்வாமி இருப்பதற்கு நாமே அடையாளம். நம் ஒவ்வொருவர் உள்ளங்கையிலும் அவன் நுணுக்கம் நுணுக்கமாகப் போட்டுள்ள ரேகை மாதிரி நம்மால் போட முடியுமா? இந்தப் பட்டணம் முழுவதிலும் அநேகம் மனிதர்களின் கெட்டிக்காரத்தனத்தால் செய்துள்ள காரியங்களைவிட அதிகமாக ஒரு சிறு இலையில் போட்டிருக்கிற ரேகைகளில் விசித்திரம் செய்திருக்கிறான் அவன். பிரபஞ்ச வஸ்து எல்லாமே அந்த மகாதிருடனின் ரேகை அடையாளம்தான். திருடன் பதுங்கியிருப்பதுபோல் இவனும் பதுங்கியிருப்பவன்தான். அவன் குகைக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்றே வேதம் திரும்பத் திரும்பச் சொல்லும்.

நம் இதயம்தான் அந்தக் குகை. நமக்குள்ளேயே ஒளிந்து கொண்டு நமக்கு வெளியே இத்தனை அற்புதங்களைச் செய்து, நம்மை ஆச்சரியப்படுத்தித் தன்னைத் தேட வைக்கிறான் ஸ்வாமி. அப்படி அவனைத் தேடுகிறதுதான் பக்தி.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

பார்த்தீர்கள் என்று கணக்கிட்டு பில் அனுப்ப வேண்டியதுதான். தொலைபேசி இப்படி டீவியோடு இணைக்கப்பட்டாலும், அந்த நேரத்தில் அதைப் பேசவும் கேட்கவும் தாராளமாகப் பயன்படுத்தலாம்.

டிகோடர் பாக்ஸ்தான் டி.டி.எச்.சில் முக்கியமான அம்சம் என்பதால் (செல்லுலர் தொலைபேசிக்கு சிம் கார்டு போல) அதையும் போலியாகத் தயாரிக்க அங்கே இங்கே மும்முரமாக ஆசாமிகள் புறப்பட்டு விட்டார்கள். இவர்களைப் பிடிக்க ஏகப்பட்ட பணம் செலவு செய்ய வேண்டியிருப்பதாக டி.டி.எச் கம்பெனிகள் அங்கலாய்க்கின்றன.

இது தவிரவும், 'வீடுகளுக்கு வரும் சானல்கள்', 'விடுதி மற்றும் ஹோட்டல்களுக்கான சானல்கள்' என்று இரண்டு விதமான சானல் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி (வேறுவேறு டிகோடர் பாக்ஸ் அமைப்புகள் இரண்டுக்கும்) தனித் தனிக் கட்டண விகிதங்களில் வசூல் நடப்பதால், வீட்டு கனெக்ஷனை விடுதி கனெக்ஷனாகப் பயன்படுத்துகிறவர்களால் (இரண்டாவதற்கு அதிகக் கட்டணம்) மேலும் பண நஷ்டம். மாய்ந்து மாய்ந்து பிடித்து இன்டர்நெட்டில் விவரம் அறிவித்து டி.டி.எச் கம்பெனிகள் மற்ற குறும்பர்களையும் மிரட்டி வைக்கிறார்கள்.

பர்சனல் கம்ப்யூட்டரில் டியூனர் கார்டு என்ற சமாசாரத்தையும், டிகோடர் பெட்டியையும் இணைத்து கம்ப்யூட்டரிலேயே டி.டி.எச். டீவி பார்க்க வசதி செய்யவும் ஏற்பாடு நடந்து வருகிறது.

(இன்னொரு பக்கம் டீவி பெட்டியைக் கம்ப்யூட்டராக இயக்கி, இன்டர்நெட்டில் மேய வழி வகுக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன!)

'சிவா பர்சனல் கம்ப்யூட்டர்' தயாரிக்கும் ஸ்டெர்லிங் கம்ப்யூட்டர் கம்பெனி அதிபர் சிவசங்கரன் இந்தியாவில் டி.டி.எச். டீவி அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு இருக்கிறதாகத் தகவல். இதற்காக இவர் பலகோடி ரூபாய் செலவில் செயற்கைக் கோள்களைப் பறக்க விடப் போகிறாராம். முதல் டி.டி.எச். காரர் தமிழர் என்ற பெருமை நமக்கெல்லாம்!

"இவர் இப்படித்தான்... செல்போன் சேனலுக்கு லைசன்ஸ் எடுத்து உடனே வேறே ஒருத்தர்கிட்டே விற்று நல்ல வருமானம் பார்த்தார். இந்த டி.டி.எச். கூட அந்த மாதிரியா?" என்று நமுட்டுச் சிரிப்பு சிரிக்கிறவர்களை தமிழ் இனத் துரோகிகள் என்று தள்ளி வைத்து விடலாம்.

— இரா. முருகன்

டீ.வி.யில் ஆடுவது ஒரு தனிக் கலை!

ராதிகா, காயத்ரி, ஷோபனா சகோதரிகள், தனஞ்சயன் தம்பதியின் சீனியர் சிஷ்யைகள். இவர்களில் ராதிகா சூரஜித் பல தொலைக்காட்சி நடன நிகழ்ச்சிகளுக்கு 'கொரியாகிராஃபி செய்திருக்கிறார். ஓம் சரவண பவ, இந்திரா (நிலா காய்கிறது பாடல்) ஆகிய திரைப்படங்களின் நடன இயக்குனரும் கூட.


“மேடை நடனத்துக்கும், தொலைக் காட்சி நடனத்துக்கும் உள்ள வித்தியாசங்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல!'' என்று கூறும் ராதிகா, மேடை-தொலைக்காட்சி நடனங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைத் துல்லியமாகப் பட்டியலிடுகிறார்.

''மேடையில் சில நடனங்கள் அற்புதமாக இருக்கும். காரணம் ஆடும் மேடையின் பரப்புதான்! பரந்த மேடையில் அதன் பரப்பு முழுவதும் படர்ந்து சீராக ஆடும்போது பார்க்க நிறைவாக இருக்கும். ஆனால் டீ.வி. நடன நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்படும் பரப்பு, மேடையில் நாலில் ஒரு பங்குதான் இருக்கும் என்பதால் சோபிப்பது கடினம்! எனவே 'ஆடத் தெரியாதவளுக்கு மேடை கோணல்' என்கிற பழமொழி டீ.வி.யைப் பொறுத்தவரை பொய்யாகி விடும்!



• ராதிகா, காயத்ரி, ஷோபனா

''மேடையில் ஆடும்போது சில பாவங்களை, நாற்பதாவது வரிசையில் உட்கார்ந்திருப்பவரும் அறிய வேண்டும் என்பதற்காக,



கல்கி - பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

ரூ. 50,000 நகை பரிசு!

சிரிக்க வையுங்கள்; ஓர் ஏழைக் குடும்பம் சிறக்க வையுங்கள்!

'கல்யாண 'ரிசப்ஷன்-கச்சேரி' என்ற தலைப்பில் கீழுள்ள கூப்பனில் ஜோக் எழுதி யனுப்புங்கள். பிரசுரத்திற்குத் தேர்வாகும் ஒவ்வொரு ஜோக்கும் 100 ரூபாய் சன்மானம் பெறும். இன்னும் ஆறு வாரங்களுக்குத் தொடரும் இப்போட்டியில் யார் அதிக அளவில் வெற்றி பெறுகிறாரோ அவர் சுட்டிக் காட்டும் ஓர் ஏழைக் குடும்பத்துக்கு - அதாவது திருமணத் துக்குத் தயாராக உள்ள வசதியற்ற குடும்பத்துப் பெண்ணுக்கு ரூ.50,000 மதிப்புள்ள தங்க நகைகள் பரிசு! வெற்றி பெறும் வாசகரே வசதி யற்றவராக இருந்து அவரது மகளோ சகோதரி களோ திருமண வயதில் இருந்தால் அவரே இப்பரிசைப் பெறலாம். கடைசி தேதி : 26.5.97

ரிசப்ஷன் – கச்சேரி ஜோக்; போட்டி – 6

பெயர்:..

முகவரி:..

....

....

அதிகப்படுத்திக் காட்டுவோம். தொலைக் காட்சியில் இது போன்ற பாவனையை க்ளோசப்பில் பார்த்தால் நன்றாக இருக்காது. ஏதோ கதகளி போலத் தோற்றமளிக்கும் என்ப தால் அதற்குத் தகுந்தாற்போல் பாவம் காட்ட வேண்டும்.


''சர்ப்ப நடைபோட்டு, 'S' வடிவில் மேடையில் வருவது பார்ப்பவர்களுக்கு வெகு நிறைவாக இருக்கும். ஆனால் டீ.வி. திரையில் இது ஏனோ அபத்தமாகத் தெரியும்!

''டீ.வி. நடனம் என்பது ஒரு தனி கலை. அந்த மீடியாவை உணர்ந்து செயல்பட்டால் தான், நடனம் எடுபடும். நுழைவு, வெளியேறல் இவையெல்லாம் மேடையில் கொடுக்கும் பொலிவை டீ.வி.யில் கொடுப்பதில்லை.

''எனவே, ஓரிரு முறையாவது முழு ஒத்திகை பார்த்துக் கொண்ட பிறகுதான் டீ.வி. நடனத்தை ஷூட் செய்ய வேண்டும். கார ணம், சபாவுக்கு வரும் ரசிகர்கள் நடனத்தை ரசிக்கும் மனோபாவத்துடன் வருவார்கள். ஆனால் டீ.வி. ரசிகர்கள் நடனம் பிடிக்க வில்லை என்றால் சட்டென்று வேறு சானலில் இன்னொரு நிகழ்ச்சியைப் பார்க்கத் தயாராகி விடுவார்கள் என்பதால் டீ.வி. நடன நிகழ்ச்சியில் வேகமும், புதுமையும் வேண்டும். என் நடன இயக்கத்தில் உருவாகி, சமீபத்திய தமிழ் புத்தாண்டு அன்று டி.டி.யில் ஒளி பரப்பப்பட்ட 'நீல கமலம்' கூட அப்படிப் பட்ட ஒரு முயற்சிதான். சுற்றுப்புறச் சூழல் பாதிப்பால் உலகுக்கு ஏற்படும் தீமைகளைச் சுட்டிக்காட்டிய நிகழ்ச்சி அது.

''டீ.வி.க்காக ஆடும்போது 'கேமிரா 1 லாங்-ஷாட்டுக்கு, கேமிரா 2 க்ளோசப்புக்கு' என்றெல்லாம் நினைவில் கொண்டு ஆட வேண்டும். ஒவ்வொரு 'நடன பிட்'டிற்கும் ஒவ்வொரு உடை, முழுவதும் ஷூட் செய்த பிறகு, எடிடிங்கில் நிகழ்ச்சியை மேலும் மெருகேற்றலாம்; ஒரே பாடலை நடுநடுவே இடைவெளி கொடுத்து படமாக்கிக் கொள்ள லாம்- இவையெல்லாம் தொலைக் காட்சி நடனங்களுக்கு உள்ள சாதகமான விஷயங் கள். இதையெல்லாம் உணர்ந்து செயல்படு வதால்தான் பல சீனியர் நடன மணிகளின் டீ.வி. நடனங்கள் பொருத்தமாக இருக்கின் றன. இதை உணராததால்தான் கணிசமான ஜூனியர் டான்ஸர்களின் டீ.வி. நடனம், அவர்களின் மேடை நடனத்தைவிட பல மாற்று குறைந்து 'சோபை இழந்து விடு கிறது!''

சந்திப்பு: **குல்லூ**



எம் ஐ பி 97 (II).
ஆண்டுக்கு 14% டிவிடெண்ட்
வழங்க உறுதி தருகிறது.
திட்ட காலம் 5 ஆண்டு முழுவதும்.

அதோடு செக்ஷன் 54 இ ஏ-ன் கீழ் மூலதன லாப வரி விலக்கு

மன்த்லி
பிளான் 97 (II)

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் வளமான எதிர்காலத்திற்காக

மேலும் விவரங்களுக்கு 044-825 1888 தொடர்பு கொள்ளவும்.

முதலீடு குறிக்கோள்கள், முதலீட்டின் மதிப்பீடு முறை மற்றும் காலம், விற்பனை மற்றும் திரும்பப்பெறுதல் அனைத்தும் செபி விதிமுறைகளின்படி.

CWPL/ UTI/ TAM/ 115/ 97

''இதுவரையில் இல்லாதது— ஆனால்
எப்பொழுதுமே இருப்பது...
யாருமே பாராததும் கூட...
'நாளை' என்னும் அதன் பிடியில் என் வாழ்க்கை
எப்படிச் செல்லும்... தெரியவில்லையே...
பானுவின் கலக்கத்தில் மட்டுமா விடுகதை?
வாழ்க்கையே அப்படித்தானே இருக்கிறது...''

ஆஸ்ரமம் பார்க்க ஏனோ இருண்டு கிடக்கிற மாதிரி தெரிந்தது. காற்று வீச்சும், பறவைக் கத்தலுமாய் இருக்கும் ஆலமரத்தடி முதல், சதா கழியைச் சுழற்றியபடி இருக்கும் களரி மைதானம் வரை எல்லா இடத்திலுமே பந்த் நடத்துகிற மாதிரி ஒரு வகை இறுக்கமான அமைதி.

வேட்டி நுனியைப் பிடித்தபடி ஆஸ்ரம வாயிலில் நிற்கும் மோகன்ராம் வழக்கமாய் அங்கு வந்தாலே அடையும் பரவசத்தை யாரோ பிடுங்கிக் கொண்டது போல உணர்கிறான்.

''வா மோகன்ராம்... உள்ளவா!''– உள்ளிருந்து தேசிகாச்சாரியின் குரல் மட்டும் கேட்கிறது. அவர் வழக்கமான தனது மாம்பலகை ஆசனம் மேல் வழக்கத்திற்கு மாறாக என்ணெய் பூசிய திருமேனியாக விவசாயக் கச்சு உடுத்தி அமர்ந்திருக்கிறார்.

''என்ன குரு இது... நம்ம ஆஸ்ரமம்தானா இது?''

''ஏன் அப்படி கேக்கறே...?''

''சொல்லத் தெரியலை. ஒரே சோம்பலா, இருட்டா இருக்கே...''

– எதிரில் அமருகிறான்.

ஆசை நெசவு

''சுசீலா இல்லையில்லையா அதான்...''

''இல்ல குரு.. அக்கா இப்ப வந்தது தானே? ஆனா அக்கா இல்லாத நிலையிலையும் ஆகாங்கற மாதிரி இருந்த இடமாச்சே இது..?''

–தேசிகாச்சாரி முகத்தில் மிக அதிசயமாக கவலை ரேகை ஓடுவதைப் பார்க்கிறான். கூடவே ஒரு கொத்து மௌனம்.

''வரச் சொன்னீங்களாமே என்ன விஷயம்?''

''ஆமாம்... நான் கொஞ்ச நாள் தேசாந்திரம் போய் வரலாம்னு நினைக்கறேன். அதுவரை இந்த ஆஸ்ரமத்தை நீதான் பாத்துக்கணும்.''

''நானா?''

இந்திரா சௌந்தர்ராஜன்

''ஏன் அப்படி கேக்கறே.. பாத்துக்கக் கூடாதா?''

''என்ன குரு இது திடீர் முடிவு?''

''திடீர் முடிவில்லை மோகன். புது ஆசை...''

''அப்படின்னா..?''

''ஒரு உள்ளுணர்ச்சி



யோட தூண்டல்னு வெச்சுக்கோயேன்..."

"எதுவா இருந்தாலும் நீங்க இந்த ஆஸ்ரமத்தைவிட்டுப் போகக் கூடாது குரு..."

"ஏன், உன்னால பாத்துக்க முடியாதா?"

"அதுவும் ஒரு காரணம். படிப்பு ஒரு பக்கம். நெசவு இன்னொரு பக்கம். புதுசா பானுரூபத்துல இப்ப இன்னொரு பிரச்னை.."

"தெரியும்... என் காதுக்கும் வந்தது. என்ன பண்ணப் போறே?"

"தெரியலை... ஆனா பானுவை அந்த தாமு பாழாக்கிடக் கூடாதுன்னு மட்டும் நினைக்கறேன்."

"அந்த நினைப்பை எப்படி செயல்படுத்தப் போறே?"

19



"..............."

"எப்படிச் செயல்படுத்தறதுன்னு கூட தெரியாத குழப்பத்துல இருந்துக்கிட்டா செயல்படப் போறே...?"

"அவனுக்கு யாரும் இல்லைங்கற காரணத்தாலதான் அந்த தாமு அவளைத் தன் விருப்பப்படி நடத்தப் பார்க்கறான். நான் இருக்கேன்னா ஒதுங்கிப் போயிருவான் இல்லையா?"

-தேசிகாச்சாரி உடனேயே அந்த பதிலுக்குச் சிரித்து விட்டார்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"இல்லே... நீ எப்படிப்பட்டவனா இருக்கேன்னு ஒரு கேள்வி இருக்கு இல்லியா?"

"................"

"திரும்பவும் குழப்பம், தயக்கம். நான் சொல்லட்டுமா? நீ அவளை மனசார விரும்பறே. ஆனா உன் காதலை உனக்குள்ளேயே பூட்டி வெச்சிருக்கே. அதைக்காட்டி இப்ப கல்யாணம் பண்ணிக்கலாம்னா அதுக்கும் நீ தயாரில்லை. படிச்சு முடிச்சு ஒரு நல்ல நிலைக்கு வந்த பிறகு கல்யாணம் பண்ணிக்கலாம்கறது தான் உன் எண்ணம். ஆனா காலம் தாமு ரூபத்துல உன் முன்ன மல்லுக்கு நிக்குது. பத்தாததுக்கு வீட்லையே ஒரு பொண்ணும் வேற..."

"குரு... கனகாகிட்ட நான் ஒரு நாள் கூட ஒரு ஆசைவார்த்தை பேசினதில்லை.."

"அது சரி... ஆனா நீ அவளை நேசிக் கறதை அவளுக்குத் திடமா தெரியுமா?"

"நான் ஒதுங்கிப் போறத வெச்சு, தெரிஞ்சிக்கிட்டிருக்கமாட்டாளா என்ன?"

–திரும்பவும் சிரிக்கிறார் தேசிக்காச்சாரி.

"என்ன குரு... இப்படி சிரிச்சா என்ன அர்த்தம்?"

"போய் அதை தெரிஞ்சிக்கிட்டிருக் காளான்னு முதல்ல உறுதி செய். பிறகு மற்ற காரியங்களைப் பார்..."

"கனகாவே போய் பானுவுக்கு உதவி செய்யச் சொன்னா குரு.."

"அது மனிதாபிமானம் காரணமா கூட இருக்கலாம். நீ உன் எண்ணத்த அவகிட்ட சொல்லிடு. பானுவை நான் பாத்துக்கறேன்."

"குரு..."

"ஆமாம் மோகன்.. பானுவை நான் ஆஸ்ரமத்துக்குக் கூட்டிக்கிட்டு வந்து வெச்சுக் கறேன். நீ உன் படிப்பை முடி. லட்சியப் பாதைல வேகமா நட. நானே உங்களுக்கு ஒரு நல்ல நாளில் கல்யாணம் பண்ணி வைக் கறேன். ஆனா நடுவுல வேற எதுவும் நடந் துடாம இருக்கணும்."

"அப்படின்னா...?"

"ஆசைப்பட மட்டும்தான் நம்மால முடியும். ஈடேற்றித் தருவது தெய்வம்தானே?"

"நீங்களா இப்படி சந்தேகத்தோட பேசறீங்க?"

"திரும்பவும் சொல்றேன். என் திடசித்தம் சில நாளா கலங்கி இருக்கு. சராசரி மனுஷர் களைப் போல கவலை, குழப்பம்னு ஏற்பட்டு ஏற்பட்டுத் தெளியறேன். என் மனம் என் வசப்பட்டுட்டதா நம்பியிருந்தேன். இல் லைன்னு இப்ப உணர்றேன். அதனாலதான் திரும்பவும் தேசாந்திரம் போகணும்னு முடிவுக்கு வந்தேன்."

"வேண்டாம் குரு... எனக்கு சமூகத்துல யாரைப் பார்த்தாலும் கோபமா வருது. உங் களைப் போல ஒரு சிலராவது இருக்கறதாலதான் நான் கோபத்துல எரிஞ்சுடாம இருக்கேன்.."

"நல்லது மோகன்.. அப்படியே இனி யோகப் பயிற்சிகள் சிலதுக்கும் நேரம் ஒதுக்கு. இனி இந்த ஆஸ்ரமம் உன்னுடையது."

– மோகன் எழுந்து கொண்டான்.

"அப்ப நான் கிளம்பறேன்."

"தேசிகாச்சாரியும் எழுந்து கொண்டார்.

"உனக்குச் சிலம்புல அடித்தார் வரிசை தெரியும்தானே?"

"உம்..."

"வா.... அதுல கவுக்கட்டுன்னு ஒண்ணு போட்டா அதைத் திறக்கறது எப்படின்னு சொல்லித் தரேன்..."

"இப்பவா?"

"இப்பவே..."

"அங்க பானு..."

"ஒண்ணும் ஆயிடாது- வா-சட்டையக் கழற்று..."

"என்ன குரு இது.. சாயந்திரமா வெச்சுக்க லாமே.."

"சாயந்திரம் பயிற்சி. இப்ப பாடம், வா..."

– மோகன் ஏழுக்கு அந்த ஞானக் கிழவரின் பிடிவாதம் சற்று எரிச்சலைத் தந்த போதிலும் வேறு வழியின்றி சட்டையைக் கழற்றிவிட்டு கைகளில் மூங்கில் கழியை எடுத்துக் கொள்கிறான்.

இஸ்மாயிலின் பிரவேசத்தைப் பார்த்து ஆச்சரியம் மட்டுமல்ல; அதிர்ச்சிக்கும் உள்ளாகிறான் தாமு.

"ஏய்... நீ எதுக்கு இங்கல்லாம் வர்றே?"

"அதை நான் உன்னைப் பார்த்துக் கேட் கணும். பானு கிளம்பு. அம்மா உன்னைக் கையோட அழைச்சிக்கிட்டு வரச் சொன் னாங்க..."

"இவ்வளவு நாளா இல்லாத சொந்தம் இப்ப என்னடா திடீர்னு?"

"நீ யாருடா இதைக் கேக்க? சாராயக்கார



பெரியார் கொடுத்த விளக்கம்!

“நீங்கள் அடிக்கடி பொதுநலம், சுயநலம் என்று பேசுகிறீர்களே... இதற்கு விளக்கம் தர முடியுமா?” என்று பெரியாரிடம் கேட்டார் ஒருவர்.

சிறிதும் யோசிக்காமல் தந்தை பெரியார் உடனே பதில் சொன்னார்: “இதுக்கு என்ன பெரிய விளக்கமெல்லாம்? மழை பெய்யறது பொது நலம்; குடை பிடிக்கிறது சுயநலம்!”

ஆதாரம்: தினகரன்– கலைமலர்
தகவல்: காதர்ஸ்

நாயே, முதல்ல போடா வெளிய...”

“என்னடா சொன்னே?”– தாமு பாய்ந்து இஸ்மாயிலை தாக்கத் தொடங்க, பதிலுக்கு இஸ்மாயிலும் தாக்கத் தொடங்க, தன்னை உத்தேசித்துத் தன எதிரில் நடக்கும் அந்த யுத்தத்தைப் பார்த்து, அந்த குச்சு வீட்டின் மூலையில் நொறுங்கி அமருகிறாள் பானு.

‘தெய்வமே... இன்னும் என்னவெல்லாம் நடந்து அதை நான் பார்க்க வேண்டும்? இது என்ன சாகவும் முடியாமல் வாழவும் முடியாமல்...’

– அவள் காதுபொத்தி, கண் மூடி, நெஞ்சு பதறக் கதறிய போது, நல்ல வேளையாக தேசிகாச்சாரி அந்த இடத்திற்கு வந்து விட்டிருந்தார். அவரைப் பார்த்த நொடியில் இருவரும் பிடியைத் தளர்த்திக் கொண்டு நிமிர்கின்றனர்.

தேசிகாச்சாரி தோளில் பரவிய துண்டை எடுத்து இடுப்பில் முறுக்கிக் கட்டிக் கொள்கிறார். தரை தடவி நிற்கும் வேட்டி முனையும் கச்சக்கட்டாக மாற ஆரம்பிக்கிறது.

புரிந்து கொள்கிறான் தாமு.

தேசிகாச்சாரி தாக்கத் தயாராகி விட்டார்.

இந்தக் கிழவனோடு மோதினால் ஜவஹருக்கு ஏற்பட்ட கதியை விட மோசமாகவே எதாவது நேரலாம்.

– விவேகமாக, திறந்துகிடக்கும் கதவு வழியாக மெல்ல நழுவ ஆரம்பிக்கிறான்.

இஸ்மாயில் மட்டும் அகலாமல்...

தேசிகாச்சாரி அவனை ஊன்றிப் பார்க்கிறார். கேட்கிறார்.

“எங்கப்பா வந்தே?”

“அம்மா, பானுவை அழைச்சுட்டு வரச் சொன்னாங்க...”

“சந்தோஷம்... ரொம்ப சந்தோஷம். இந்த ஜனங்களைப் போல எனக்கென்னன்னு இருந்துடாம, சாதிமதங்கற இடைஞ்சல்களையும் பொருட்படுத்தாம இவளைப் பாதுகாக்கணும்னு நினைச்சு அனுப்பி இருக்காங்க பாரு, அதுக்கு ஆயிரம் சலாம்.”

“அப்ப நான் அழைச்சிட்டுப் போறேன். வா, பானு...”

– அவன் அழைப்பின் முன் தேங்குகிறாள் பானு. தேசிகாச்சாரியையும் இஸ்மாயிலையும் மாறி மாறிப் பார்க்கிறாள்.

வாசப்புறமும் உள்ளே இருள் கட்டும் அளவு வீதிக் கூட்டம். அதில் மோகன்ராம் இருக்கிறானா என்று ஒரு பார்வை பார்க்கிறாள். இல்லை அவன். அதன் நிமித்தம் கண்ணிரண்டும் கலங்கிக் கசிகின்றன.

“இப்படி அழுதுக்கிட்டு நின்னா எப்படி... தம்பி கூப்பிடுதுல்ல, போறியா? இல்லை...”

– மறுப்பாகத் தலையை அசைக்கிறாள்.

“அப்ப என் கூட ஆஸ்ரமத்துக்கு வந்திடறியா?”

“வரேன்... வந்துட்றேன்...” – படுவேகமான சொற்கள், அந்த வீட்டை விட்டு விலகினால் போதும் என்கிற அவள் துடிப்பை நன்கு வெளிக்காட்டுகின்றன.

“மன்னிச்சுக்க தம்பி...அவளுக்கு இஷ்டமில்லை. அதனால நான் அழைச்சுட்டுப் போறேன். ஆனா எப்ப அவ விரும்பினாலும் அனுப்பி வைப்பேன். உன் அம்மாவும், நீயும் பாக்கணும்னாலும் ஆஸ்ரமத்துக்கு வரலாம். வரட்டுமா?”

பானுவை அழைத்துக் கொண்டு, வீட்டையும் பூட்டிக் கொண்டு வீதியில் இறங்குகிறார். எல்லோரும் வெறிக்கின்றனர். சிலருக்கு வெட்கமாக இருக்கிறதோ என்னவோ, தலையைத் தாழ்த்திக் கொள்கின்றனர்.

“பானுவை நான் அழைச்சுட்டுப் போறேன்... போகலாமில்லியா?”

– வீதியின் மையத்தில் நின்று கேட்கிறார். தெருச்சபை மௌனமாய் அங்கீகாரம் தரு

கிறது.

– தன்னையும் மீறி உணர்ச்சிப் பெருக்கேறி, நடு வீதியை ஆக்ரமித்து நிற்கும் ரேணுகா அம்மன் திருவிழாப் பந்தலைப் பார்க்கிறார்.

"எந்த கடவுளும் பூஜை புனஸ்காரம் தேங்கா பழம் பொங்கலுக்கு மயங்கி அருள் செய்திடாது. பயமும் தன்னலமும் இல்லாதவன் இதை எல்லாம் செய்யலேன்னாலும் அருள்தராம விடாது.

வீதியையே கோயிலாக்கிப் பாக்கற ஆசை கொண்ட நாம், ஒவ்வொரு பொண்ணும் ஒரு கோயில்ங்கறதை ஏனோ மறந்துட்டோம்..."

–தேசிக்காச்சாரி பேசப் பேச, வீதி இளக ஆரம்பிக்கிறது.

"போதும் குரு... பானுவை இனி நாங்க பாத்துக்கறோம்" என்று அந்தப் பேச்சின் பலனாக ஒருவன் முன் வருகிறான்.

"பானு நீ இங்கேயே இரு. கடையைத் தொடர்ந்து நடத்து. யார் வந்தாலும் நான் பாத்துக்கறேன்" என்று அடுத்தவன் முன் வருகிறான்.

தேசிகாச்சாரி சற்று நெகிழ்கிறார். ஆஸ்ரமம் நோக்கி நடக்க ஆரம்பிக்கிறார். பின் தொடருகிறாள் பானு.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கனகா 'அப்பாடா' என்று பெருமூச்செறிகிறான்.

நல்லவேளை! ரேணுகா அம்மனிடம் பானுவுக்காகச் செய்த பிரார்த்தனை வீண் போகவில்லை!

புழுக்கத்தில் இருக்கிறான் தாமு. இந்த மாதிரி ஜென்மங்கள் புழுங்க ஆரம்பித்தாலே சாராயத்துக்குத்தான் கேடு. முதல் பாட்டில் முடிந்து, இரண்டாவது பாட்டிலில் ஒரு பாதி குறைந்திருந்தது. கண்ணிரண்டும் கலங்கி செவ்வரியோடி புஸ் புஸ் என்று மூச்சிலும் ஒழுங்கு செத்திருந்தது.

எத்தனை தான் டின்டின்னாக சாராயம் கடத்தி விற்றாலும் அதில் ஒரு சொட்டைக் கூட குடித்திராத பாம்பே மணியம் கூட ஒரு கிளாஸ் குடித்திருக்கிறான்.

பக்கத்தில் கயிற்றுக் கட்டிலில் இடிவிழுந்த மாதிரி கிடக்கிறான் ஜவஹர் பாபு. அதிசயமாக அந்தக் கூட்டத்தில் ரேஷன் கடைக்காரனும் இருக்கிறான். பொறுமலோடு உட்கார்ந்திருப்பவர்கள் நெடுநேரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

வெளியில் ரேடியோவின் அலறல். அதில் பொருத்தமான பழைய சினிமா. எரிச்சலைப் பெருக்குகிறது. "டேய், போய் அருணாசலத்தை போடச் சொல்லுடா... எந்த நேரம் எந்தப் பாட்டு வைக்கறதுன்னு இல்லாம..." மணியம் ஒருவனை முடுக்கிவிட்டுவிட்டு தாமுவை பார்க்கிறான்.

"டேய்... இந்தாடா போகட்டும், விடுடா. இந்த பானு இல்லாட்டி இன்னொரு தேனு, மீனு.. இப்போதைக்கு நிலைமை சரியில்லை. வேற ஆகவேண்டியதப் பாரு..."

"என்னத்த ஆகவேண்டியதப்பாரு... ஒண்ணத்தொட்டு ஒண்ணத்தொட்டு அவன் நம்மளை அடிச்சிக்கிட்டே வரான். இதுக்கு ஒரு கிழட்டுப் பய வக்காலத்து. நடுத்தெருவுல நின்று உபதேசம் வேற... முதல்ல அந்த கிழவனை ரெண்டுல ஒண்ணு பாக்கணும்."

"அப்ப பாத்துட்டு வா... அடுத்து என்ன பண்றதுன்னு யோசிப்போம்."

"இங்க யோசிக்கல்லாம் நேரமில்லை. மாமா, நீ சாராயம் வித்தாலும் விக்காட்டியும் ஸ்டேஷனுக்கு வாரம் தவறாம மாமூல் வெட்டணும். நான் நிக்கறதில்லேன்னாக் கூட அவனுங்க விடமாட்டானுங்க. அதே மாதிரி தான் நம்ம ஜான் ஆசிர்வாதம் தனக்கு வர்ற தொண்ணூத்தைந்து கிலோ மூட்டை அரிசியை நூறுக்குக் கணக்குக் காட்டியாகணும். நாம பிடிச்சிருக்கறது புலியோட வாலை. அப்படி எல்லாம் விட்ற முடியாது..."

"அப்ப என்ன பண்ணணும்கறே?"

"நான் பண்ண வேண்டியதைப் பண்ணிடுவேன். ஆனா நீ எனக்கென்னன்னு கழண்டுக்கக் கூடாது. நான் தூக்குக்குப் போற நிலை வந்தா, நீயும் கூட வரணும். வருவியா?"

"நம்ம பலமே, ஒத்துமையும் ஒருத்தருக்கொருத்தர் உயிரையே கொடுத்துக்கறதும் தானே? விஷயத்துக்கு வாடா..."

– விஷயத்துக்கு வந்தான் தாமு. மணியமும் ஜவஹர்பாபுவும் ரேஷன் கடைக்காரனும் அதைக்கேட்டனர். அகன்ற அவர்களின் விழிகளில் அதிர்ச்சி, ஆச்சரியம் என்று எல்லாம் கலந்த கலவையின் வியாபிப்பு!

(தொடரும்)



"நான் மெதுவடையும், கெட்டி ஸ்பூனும் கேட்டேன்; இந்த சர்வர் மெது ஸ்பூனும் கெட்டி வடையும் கொடுத்துட்டாரு!"

– வலங்கைமான் நூர்தீன்

இல்லத்தரசிகள், எல்ஐசி / யுடிஐ ஏஜண்டுகள் & மற்றவர்கள்

ஓய்வு நேரத்தில் சம்பாதியுங்கள்

புகழ்மிக்க டிஎல்வி குரூப் வழங்கும் டிஎல்வி சிட்ஸின் சீட்டு குரூப்புகளுக்கு கேன்வாஸ் செய்வதற்கு பகுதிநேர அல்லது முழுநேர ஏஜண்டாக / வளர்ச்சி அலுவலராக பணிபுரிய உங்களுக்கோர் அரிய வாய்ப்பு. அதன் மூலம் **மாதந்தோறும் கணிசமான கமிஷன் பெறலாம்.** விருப்பமுள்ளோர் கீழ்க்காணும் கிளைகளில் ஏதேனும் ஒன்றில், உங்கள் முந்தைய அனுபவம் மற்றும் முழு விபரத்துடன் விண்ணப்பியுங்கள்.

TLV

Quality is Our Strength

டிஎல்வி சிட்ஸ் பிரைவேட் லிமிடெட்

(மெம்பர், டிஎல்வி குரூப்)

54, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, சென்னை - 7. போன் : 5325311 / 12 / 13.

- மாயாஸ் பிளாசா, 71 பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 17. போன் : 8280036 / 8232721.
- அல்சா ரீஜென்ஸி, 165 எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18. போன் : 459473 / 458789.
- 142, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 10 போன் : 6420506 / 07 / 08.

NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT

NOTIFICATION No. 13/96

Offers the following Diploma Courses by Correspondence.

BUSINESS MANAGEMENT	(1 Year)
FINANCIAL MANAGEMENT	(1 Year)
MARKETING MANAGEMENT	(1 Year)
HUMAN RESOURCES DEVELOPMENT	(1 Year)
ADVERTISING & PUBLIC RELATIONS	(1 Year)
TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000	(1 Year)
PORTFOLIO ANALYSIS & INVESTMENT MANAGEMENT	(1 Year)
BUSINESS ADMINISTRATION	(6 Months)
OFFICE ADMINISTRATION	(6 Months)
SALES & MARKETING	(6 Months)
INDUSTRIAL RELATIONS & PERSONNEL MGMT.	(6 Months)
LABOUR LAWS	(6 Months)
QUALITY ASSURANCE & ISO 9000	(6 Months)
PRODUCTION MANAGEMENT	(6 Months)
INDUSTRIAL SAFETY	(6 Months)
ENVIRONMENTAL MANAGEMENT	(6 Months)
QUALITY CONTROL & ISO 9000	(6 Months)

No formal qualifications is required. Course Fee Rs. 1200/- (1 Year) & Rs. 600/- (6 Months). Examination centre at all major cities. For registration form and prospectus, kindly send Rs. 3/- postal stamp to **NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT** 23/13, Rameswaram Road, Narayana Apartments, Second Floor, T. Nagar, Madras - 600 017. Phone : 044-4851854 Fax : 044-4933259.

ஆந்திர மாநிலத்திற்கு சுற்றுலா

கோடைநாட்களை குதூகலிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வெள்ளிக்கிழமையில் இருந்து மறு வெள்ளிக்கிழமை முடிய ஆந்திராவில் சுற்றுலா செல்ல கீழ்க்கண்ட இடங்களைத் தெரிந்தெடுத்திருக்கிறது.






முதல் நாள்: நாகலாபுரம்-கோனை நீர்வீழ்ச்சி-நாராயணவனம் -ஸ்ரீகாளஹஸ்தி இரவு-நெல்லூர்

இரண்டாம் நாள்: குகைக்கோயில், கிருஷ்ணா ஆற்றில் குளித்தல், மல்லீஸ்வரசுவாமி கோயில், கனகதுர்கா கோயில்-இரவு-விஜயவாடா.

மூன்றாம் நாள்: மங்களகிரி, அமராவதி, நாகார்ஜுன சாகர் அணை, அருங்காட்சியகம், இரவு-நாகார்ஜுன சாகர் அணை.

நான்காம் நாள்: பிர்லா மந்திர், சார்மினார், மெக்கா மஸ்ஜித், செகந்திராபாத் வளையல் கடைகள், இரவு-செகந்திராபாத்.





ஐந்தாம் நாள்: புத்தபூர்ணிமா (ஹுசைன் சாகர் ஏரி), கோல் கொண்டா கோட்டை, உயிரியல் பூங்கா, இரவு-கர்னூல்.

ஆறாம்நாள்: பிரசாந்தி நிலையம் புட்டப்பர்த்தி மற்றும் கடைகள், இரவு-புட்டப்பர்த்தி

ஏழாம் நாள்: லேபாக்சி, பெரியநந்தி, இரவு-ஹார்ஸ்லி ஹில்ஸ்.

எட்டாம் நாள்: வன இலாகாத் துறையின் தோட்டம், திருத்தணி, சென்னை வருதல்.

கட்டண விகிதம்

அறை மற்றும் நபர்	குளிர்சாதன வசதியற்ற தங்குமிடம் மற்றும் பேருந்து	குளிர்சாதன வசதியுடன் தங்குமிடம் குளிர்சாதன பேருந்து	குளிர்சாதன பேருந்து குளிர்சாதன வசதியற்ற தங்குமிடம்
தனி அறை - தனி நபருக்கு	ரூ. 2800/-	ரூ. 5000/-	ரூ. 4000/-
இருவர் தங்க நபர் ஒன்றுக்கு	ரூ. 2300/-	ரூ. 4000/-	ரூ. 3400/-
குழந்தைகள் (5 முதல் 12 வரை)	ரூ. 2000/-	ரூ. 3500/-	ரூ. 2800/-

சென்னை-திருப்பதி (விடியற்காலை தரிசனம்):



திருப்பதி-திருமலை-திருச்சானூர்

இரவு 10.30 மணிக்குப் புறப்படுதல், டிக்கெட் விலை ரூ. 300/-
(சிற்றுண்டி, குளியல் வசதி, மதிய உணவு மற்றும் சிறப்பு வழிபாடு உட்பட)

மேலும் விபரங்களுக்கு :

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்,
விற்பனை பிரிவு: 4, ஈ.வெ.ரா. சாலை,
(சென்ட்ரல் ஸ்டேஷன் கணிப்பொறி முன்பதிவுக்கு எதிரில்)
பூங்காநகர், சென்னை-600 003.
தொலைபேசி : 560294, 582916, தொலைநகல்: 044-561385.

DIPR. CNI. 97



• கோபுலு, நடனம், சுஜாதா, சோ, கல்கி ராஜேந்திரன், ரா.கி.ரங்கராஜன்

தேவனின் கதாபாத்திரங்களும் ஐக்கிய முன்னணி அமைச்சரவையும்!

போன வாரம் பத்திரிகையில் அச்சடித்து வந்த கதையை இந்த வாரம் வாசகர்கள் மறப்பதும், போன மாதம் வெளியானதை இந்த மாதம் எழுதியவரே மறந்து போகும் நடைமுறையான, நிகழும் ஈசுவர வருடத்தில், நாற்பது ஆண்டுகள் முன்னால் கதை எழுதி, இன்னும் வெகுவாக நினைக்கப்படும், படிக்கப்படும் எழுத்தாளர்களின் சின்னஞ்சிறு பட்டியலில் புதுமைப்பித்தன், கல்கி, அப்புறம் தேவன்.

கத்திரி வெயில் ஆரம்பமான ஞாயிற்றுக் கிழமை சாயந்திரம். பதினேழரைப் பேர் மட்டும் சௌகரியமாக உட்கார்ந்து ரசிக்கக்கூடிய அரங்கில் தேவன் அறக்கட்டளையினர் ஏற்பாடு செய்த விழாவில் வெளியிலும் பெருங்கூட்டம். தேவனை நினைவு கூர்வதோடு, சுஜாதாவுக்கும் ஓவியர் நடனத்துக்கும் தங்கப் பதக்கம். பிரமுகர்கள் பாராட்டு. விஜய் சிவா கச்சேரி. கூட்டத்துக்குக் கேட்பானேன்!

முன்னால் நின்ற எழுத்தாளர் இருப்பூர் கிருஷ்ணனின் குறுந்தாடி மறைக்காத தருணத்தில் எக்கிப் பார்த்தபோது, உள்ளே கல்கி ராஜேந்திரன் பேசிக் கொண்டிருந்தார். தேவனின் அலாதியான நகைச்சுவையோடு, அவரின் பயந்த சுபாவத்தையும் அவர் நினைவு படுத்தியபோது, நாவல், சிறுகதை, கட்டுரை என்று அறுபதுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியரான தேவனுக்கு என்ன பயம் என்று மனத்தில் கேள்வி. பத்திரிகை உத்தியோகம் சர்க்கார் உத்தியோகம் போல நிரந்தரமில்லை என்ற நினைப்பால் வந்த பயமாம் அது. வாழ்க்கைப் பிரச்னை!

தேவனின் 'ராஜத்தின் மனோரதத்தில்' வரும் வாசாலகமும் இடசித்தமும் உடைய நண்பர் ராஜம் யார்? அது கம்பராமாயணத்தை அழகாகப் பதிப்பித்த முர்ரே ராஜம் என்று கோபுலு சொன்னார். தம் ஆயுசுக்காலத்தில் தாம் எழுதியது புத்தகமாக வர வேண்டும் என்ற தேவனின் மனோரதம் நிறைவேறாமல் அவர் இறந்தபோது, வயது 44 தான் என்றார் கோபுலு. காப்பிரைட் பிரச்னை!

ஓவியர் நடனத்தைப் பாராட்டியபோது "அவர் அழுவதுபோல் ஒரு கார்ட்டூன் முகம் போட்டால்கூட அது நம்மைச் சிரிக்க வைக்கிறது," என்றார் கோபாலு. ஓவியரின் கை ஓவியர் அறிவார்!

முண்டியடித்த விடியோக்காரர்களின் வெளிச்சத்துக்குப் போட்டியாகப் பளிச்சிட்டபடி பேசிய துக்ளக் சோ, தேவனை ஆங்கில நகைச்சுவை எழுத்தாளர் பி.ஜி. உட்ஹௌஸோடு ஒப்பிடுவது தவறு என்றார். "உட்ஹௌஸின் கதைகளில் சில பாத்திரங்களே திரும்பத் திரும்ப வருவது வழக்கம். தேவன் கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரி. பாத்திர வார்ப்பும் முழுக்க வேறுபட்டு இருக்கும்" என்றார் சோ. ஐக்கிய முன்னணி அமைச்சரவை போலவா?

ரா.கி. ரங்கராஜன் தேவனைத் தொட்டு விட்டு சுஜாதாவின் தொடக்கக் கால எழுத்துக்களைப் பற்றி (கம்ப்யூட்டர் உபயோகிக்காமல் கையால் எழுதப்பட்டவையும், அவரை சரித்திரக் கதை எழுத வைக்கத் தாம் தூண்டியது பற்றியும் - 'பூனைக்குட்டிகள்' வர்ணனையை யார் மறந்தாலும் ரா.கி.ர மறக்கவில்லை - விஸ்தாரமாகச் சொன்னார். Letting the cat out of the bag?

பின்னால் கூட்டம் நெருக்க, பதிப்பாளர் அலைன் கண்ணனின் காலை மிதித்து 'சாரி' சொல்லியபோது, உள்ளே சுஜாதா பேச்சு. நகைச்சுவையாக எழுதுவதுதான் கடினமான காரியம் என்றவர், தேவன் அறக்கட்டளையும், 'கல்கி'யும் இணைந்து நகைச்சுவைக் கதை எழுதக் கற்றுக் கொடுக்க எழுத்துப் பட்டறை நடத்த ஏற்பாடு செய்தால், தாம் நிச்சயம் பங்கேற்பதாக வாக்களிக்க, நிறையக் கைதட்டல். இளசுகள்.

"செஞ்சுட்டாப் போச்சு" என்று கல்கி ராஜேந்திரன் உடனடியாக அறிவிக்க, இன்னும் கைதட்டல். கேட்டபடியே விஜய்சிவா பாடத் தொடங்கினார்.

முதலில் சிரிக்க சிரிக்க பேச்சு; முடிவில் உருக உருகப் பாட்டு! தேவனின் இஷ்ட தெய்வமான முருகனின் பேரிலேயே அனைத்துப் பாடல்களும்.

— அச்வின்

படம்: **யோகா**

நைல் நதி நடப்பதும் நடனம் ஆடுவதுமாக இருந்தது. நீராட வந்த பாரவோனின் மகள் நாணல்களுக்குள்ளிருந்து குழந்தை ஒன்று அழுகிற குரலைக் கேட்டாள். அருகில் வந்து பார்த்தபோது, அது எபிரேய இனத்தைச் சார்ந்த குழந்தை என்று அறிந்து கொள்ள அவளுக்கு அதிக நேரம் ஆகவில்லை.

யாக்கோபின் சந்ததிகளான இஸ்ராயேலர்கள் எபிரேய இனத்தைச் சேர்ந்தவர்கள். யோசேப்பின் காலத்தில் எபிரேயர்களுக்கு எகிப்தில் செல்வாக்கு இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு வந்த பாரவோன் மன்னன் தனது எகிப்திய மக்களைவிட பெருகி வந்த எபிரேயர்களை அடக்கி வைப்பதில் ஆர்வம் கொண்டான். ஆகவே எபிரேயர்களுக்குப் பிறக்கிற ஆண் குழந்தைகளை அவர்களே கொன்றுவிட வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருந்தான். ஒரு எபிரேயத் தாய் தனது குழந்தையைக் கொல்ல மனமில்லாது சில நாள் வைத்திருந்து, பிறகு மூங்கில் தொட்டி ஒன்றைச் செய்து அதில் அந்தக் குழந்தையை வைத்து நைல் நதியில் விட்டு விட்டாள்.

நீராடப் போன இடத்தில் தனக்குக் கிடைத்த குழந்தைக்கு இளவரசி மோசே (நீரிலிருந்து கிடைத்தவன்) என்று பெயரிட்டாள். தனது தந்தையான பாரவோனுக்குத் தெரியாமல் அந்தக் குழந்தை பால்குடியை மறக்கிற வரையில் அதன் தாயிடமே இளவரசி விட்டு வைத்திருந்தாள். மோசே வளர்ந்து பெரியவர் ஆனார். தமது எபிரேய இனத்து மக்கள் எகிப்தில் அடிமைகளாக நடத்தப்படுவதைப் பார்த்து மனம் கொதித்தார். ஒருநாள் எபிரேயன் ஒருவனை எகிப்தியன் ஒருவன் காரணமே இல்லாமல் அடித்துக் கொடுமைப் படுத்துவதைப் பார்த்தார். ஆத்திரத்தில் மோசே அந்த எகிப்தியனை அடித்துக் கொன்று மணலுக்குள் புதைத்து விட்டார். மறுநாள் அவர் வெளியே சென்றபோது எபிரேயர்கள் இருவர் ஒருவரோடு ஒருவர் கைகலப்பில் ஈடுபட்டிருந்ததைப் பார்த்தார். "உன் இனத்தானையே நீ ஏன் அடிக்கிறாய்?" என்று கேட்டார். அவர்களோ "எங்களுக்கு மேலதிகாரியாக உன்னை நியமித்தது யார்? நீ அன்று அந்த எகிப்தியனைக் கொன்று புதைத்தது போல எங்களையும் செய்து விடலாம் என்று நினைக்கிறாயோ?" என்று கேட்டனர். எவரும் அறியாமல் தான் செய்த கொலை இவ்வளவு விரைவாக வெளிப்பட்டு விட்டதில் மோசே அதிர்ச்சி அடைந்தார். இதற்குள்ளாக பாரவோனுக்கு இந்தச் செய்தி எட்டவே அவன் மோசேயைக் கொலை செய்யத் தேடினான். மோசே மிதியான் என்கிற நாட்டிற்குத் தப்பி ஓடினார்.

அங்கே அவர் ஒரு கிணற்றருகில் அமர்ந்திருந்தபோது, மிதியான் நாட்டின் அர்ச்சகருடைய வனதேவதைகளைப் போன்ற ஏழு புதல்விகளும் தங்கள் தந்தையின் ஆட்டு மந்தைகளோடு அவ்விடம் வந்தார்கள். அவர்கள் தங்கள் மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டுவதைத் தடுத்த இடையர்களிடமிருந்து மோசே அவர்களைக் காப்பாற்றினார். இதைக் கேள்விப்பட்ட குருக்கள் மகிழ்ந்து, மோசே தம்மோடு தங்குவதற்கு அனுமதி அளித்தார். பிறகு தமது மகள் சிப்போராளை அவருக்கு மணம் முடித்துக் கொடுத்தார்.

எகிப்தில் இஸ்ராயேலர்கள் எழுதில் வடிக்க முடியாத கொடுமைகளுக்கு ஆளானார்கள்.



வலம்புரி ஜான்

அவர்களது அழுகையும், கூக்குரலும் ஆண்டவராகிய கர்த்தரை எட்டியது. மோசே தமது மாமனாரின் ஆட்டு மந்தைகளை ஓட்டிக் கொண்டு கடவுளின் மலையாகிய ஓரேபை வந்து அடைந்தார். அவ்விடத்தில் பச்சையான முட்புதர் ஒன்று எரிவதையும், ஆனாலும் அது தீய்ந்து போகாமல் இருந்ததையும் கண்டு அவர் அதிசயித்தார். 'இந்த அற்புதத்தை அருகிலிருந்து பார்ப்பதற்காக மோசே முயற்சி செய்தபோது, "நான் உங்கள் முன்னோர்களின் கடவுள்; இது புனிதமான இடம்; உனது காலணிகளைக் கழற்றி விட்டு இவ்விடம் வா" என்று கடவுள் குரல் கொடுத்தார். மோசே கடவுளை உற்றுப் பார்க்க அச்சப்பட்டு தமது முகத்தை மூடிக் கொண்டார். அப்போது மோசேயிடம் கடவுள் பேசலானார். "எகிப்து தேசத்தில் அடிமைப் பட்டிருக்கிற எனது மக்களின் கூக்குரல் எனக்குக் கேட்டுக் கொண்டே இருக்கிறது; நீதான் அங்கே சென்று அவர்களை மீட்டு வர வேண்டும்" என்றார். அதற்கு மோசே "நான் ஆண்டவராகிய உம்மால் அனுப்பப்பட்டவன் என்று அவர்கள் எவ்வாறு நம்புவார்கள்?" என்று கேட்டார். அதற்கு ஆண்டவர் "இம் மலையில் ஒரே இறைவனான என்னை வழிபடுவதற்காக எங்கள் மக்களைப் போக விடு என்று பாரவோனிடம் கேள்; அவன் உங்களைப் போக விட மாட்டான். நான் அவனது மனதைக் கடினமாக்குவேன்; நீ அற்புதங்களைச் செய்து காட்டி, நான்தான் உன்னை அனுப்பினேன் என்பதை உறுதிப்படுத்து; பிறகு இஸ்ராயேல் மக்களைப் பாலும் தேனும் பெருகி ஓடுகிற வாக்குத்தத்தத்தின் பூமிக்கு அழைத்துச் செல்லுவேன்" என்றார்.

மோசே ஆண்டவரைப் பார்த்து "உமது பெயர் என்ன?" என்று கேட்டார். அதற்கு ஆண்டவர் "நானே இருக்கின்றவராக இருக்கின்றவர்" என்றார். உடனே மோசே "ஆண்டவரே! உம்மைச் சந்திப்பதற்கு முன்னர் நான் திக்கு வாயனாக இருந்தேன். நான் எப்படி பாரவோன் மன்னனிடம் சென்று பேச முடியும்?" என்று கேட்டார். அதற்கு ஆண்டவர், "உனது உறவினனான ஆரோன் உன்னைச் சந்திக்க வந்து கொண்டிருக்கிறான்; நீங்கள் இருவருமாகப் பாரவோனின் அரண்மனைக்குப் புறப்படுங்கள். நீ கடவுளாக இருப்பாய்; ஆரோன் உனது வாயாக இருப்பான்" என்றார். எகிப்திய மன்னனிடமிருந்து இஸ்ராயேல் மக்களை மீட்பதற்காக என்னென்ன அற்புதங்களைச் செய்து காட்ட வேண்டுமென்று ஆண்டவர் பட்டியலிட்டார்; அவ்வப்போதும் வெளிப்படுத்தினார்.

இப்படியாக மோசேயும், ஆரோனும் எகிப்திற்கு வந்து தங்கள் இனத்தவரான இஸ்ராயேல் மக்களைச் சந்தித்தார்கள். ஆண்டவரின் விடுதலைத் திட்டத்தைக் கேட்டபோது அவர்கள் அனைவருமே அகமகிழ்ந்தார்கள்.



விரிந்தது; தெரிந்தது!

மோசேயும் ஆரோனும் பாரவோனின் முன்னிலைக்குச் சென்று "மலையில் எங்கள் முன்னவர்களின் கடவுளை வழிபடுவதற்கு ஏதுவாக எங்கள் இனத்தவரான இஸ்ராயேலரைப் போக விடு" என்றார்கள். இதுவே அந்த அடிமை மக்கள் அனைவரின் ஒட்டுமொத்தமான கோரிக்கையாக இருந்தது. இஸ்ராயேலர்களின் வியர்வை நதியில்தான் அன்றைய எகிப்து தேசத்தின் பயிர்பச்சைகள் பலனைத் தந்தன. உழைப்பதற்காகவே உயிர் வாழ்ந்து கொண்டிருந்த அந்த மக்களைப் பார்த்து பாரவோன் "இவர்கள் சோம்பேறிகள்; ஆகவேதான் ஆண்டவனை ஆராதிப்பதற்கு அவகாசம் கேட்கிறார்கள்; இவர்களுக்கு இன்னமும் கடினமான வேலைகளைக் கொடுங்கள்" என்று தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டான். ஆகவே மோசே, ஆண்டவர் அவருக்கு முன்னரே சொன்னபடி ஆரோனைத் தனது கோலைத் தரையில் எறியச் செய்தார். உடனே அந்தக் கோல் பாம்பாக மாறியது; பிறகு பயத்தோடு, ஆனாலும் ஆண்டவரின் வார்த்தைகளை நம்பி ஆரோன் அந்தப் பாம்பின் வாலைப் பிடித்தார். அது உடனே கோலாக மாறிற்று. கடகடவெனச் சிரித்த பாரவோன் மன்னன் தனது மந்திரவாதிகளை வரவழைத்தான். அவர்களும் தங்கள் கோல்களை எறிந்தார்கள். ஏராளமான பாம்புகள் ஏக காலத்தில் படமெடுத்தன; ஆனாலும் ஆரோனின் பாம்பு மற்ற பாம்புகளை விழுங்கி விட்டது. பாரவோனின் மனமோ பாறைபோல் ஆனது; இஸ்ராயேலர்கள் மீதான அவனது அடக்குமுறை அதிகரித்தது.

மறுநாள் பொழுது புலர்ந்தது. பாரவோன் மன்னன் நைல் நதிக்கரைக்கு வந்தான். அங்கே ஆண்டவர் சொன்ன இடத்தோடு மோசேயும் ஆரோனும் நின்று கொண்டிருந்தார்கள். மோசேயின் கையில் உள்ள மந்திரக் கோலைப் பார்த்ததும் பாரவோன் பதைபதைத்தான். மீண்டும் மோசே எங்கள் மக்களை வழிபாட்டிற்கு நீ அனுப்பாததால் நீ கடுமையான தண்டனைக்கு ஆளாவாய் என்று சொன்னார். இருவரும் தங்கள் கோல்களால் நைல் நதியை அடித்தார்கள். அது இரத்தமாக மாறிற்று. பிறகு ஆரோன் அந்த நாட்டின் நீர்நிலைகளின் மீது தமது கோலை நீட்டினார். அவையும் இரத்தமாக மாறின. மீன்கள் செத்து மிதந்தன. மக்களுக்குக் குடிதண்ணீர் இல்லாது போயிற்று. அவர்கள் ஊற்றுக்களைத் தேடி மணலைத் தோண்டினார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் எகிப்திய மந்திரவாதிகளும் இதே மாதிரி அற்புதங்களைச் செய்து காட்டினார்கள். ஆகவே பாரவோன் மன்னனின் மனம் இன்னமும் கடினப்பட்டது.

மோசே மீண்டும் பாரவோனின் முன்பாக வந்து அதே கோரிக்கையை அழுத்தமாக வைத்தார். அவனோ ஒரு அணு கூட இறங்கி வரவும் இல்லை; இரக்கப்படவும் இல்லை. ஆகவே கடவுளின் கட்டளைப்படி மோசே ஆரோனின் கைகளை அந்த நாட்டின் நீர்நிலைகளின் மீது நீட்டினார். அடைமழை காலத்தில் ராகராஜாங்கம் நடத்துகிற தவளைகளைவிட ஆயிரம் மடங்கான தவளைகள் ஏக காலத்தில் புறப்பட்டன. அவை பாரவோனின் அரண்மனைக்குள்ளும், படுக்கை அறைகளுக்குள்ளும்கூட வந்தன. எகிப்து நாட்டில் கால் வைத்த இடமெல்லாம் தவளைகள் தத்தித் திரிந்தன. பாரவோன் மோசேயை அழைத்துத் தவளைகள் நீர் நிலைகளுக்குத் திரும்புமாறு உனது கர்த்தரை வேண்டு; நான் உன் மக்களைப் போக விடுகிறேன்" என்றான். மோசேயின் வேண்டுதலை இறைவன் கேட்டருளினார். தவளைகளின் படையெடுப்பு நின்று போனதும் பாரவோன் பழைய பல்லவியையே பாடினான்.

மீண்டும் கடவுளின் கட்டளைப்படி மோசே ஆரோனிடம் "உனது கோலைக் கொண்டு தரையில் உள்ள புழுதியை அடி; அது கொசுக்களாக மாறும்" என்றார். அவ்வாறே கடல் அளவு கருஞ்சீரகம் கொட்டிக் குவிக்கப்பட்டதைப்போல அந்த நாடு முழுவதும் கொசுக்களின் கொலு மண்டபம் ஆனது. எகிப்திய மந்திரவாதிகளும் இவ்வாறு செய்ய முயன்றனர்; அவர்களால் முடியவில்லை. இறுதியில் அவர்களோ "இது கடவுளின் வல்லமையே" என்றனர். பாரவோனின் மனமோ இன்னமும் இறுகியது.

இதன் பிறகு எகிப்தியரின் வீடுகளும், நிலங்களும் மாத்திரம் ஈக்களால் நிறைந்தன. எங்கும் ஈ மயமாக ஆனபோது பாரவோன் மோசேயைப் பார்த்து "உங்கள் மக்களை வழிபாட்டிற்காகப் போக விடுகிறேன்; ஆனாலும் அதிக தூரம் சென்று விடாதீர்கள்" என்றான். ஆண்டவர் மோசேயின் வேண்டுதலுக்குச்



"நீங்க லஞ்சமே வாங்க மாட்டீங்கன்னு உங்க ஆபீஸ்ல எல்லாரும் சொன்னாங்களே...?"

"இந்த ஆபீஸ்ல யாருக்குமே வாய் சுத்தம் இல்லைனு இப்பவாவது தெரிஞ்சுக்கங்க!

— சீர்காழி வி. ரேவதி

செவி சாய்த்தார். ஈக்கூட்டம் எகிப்தியர்களைவிட்டு அகன்றது. ஆனாலும் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்தான் ஏறியது. இதன் பிறகு ஆண்டவர் எகிப்தியரின் கால்நடைகள் மீது கொடிய கொள்ளை நோயை வரச் செய்தார். பாரவோன் மனம் மாறாததைக் கண்ட இறைவன், எகிப்தின் மீது கல்மழை பெய்யச் செய்தார். அதிர்ச்சிக்கு ஆளான பாரவோன் "உங்கள் மக்களை அழைத்துப் போங்கள்" என்றான். மோசே கடவுளிடம் வேண்டினார். கல் மழை நின்றது. பாரவோன் அந்த மக்களைப் போக விடவில்லை.

வஞ்சகமாக ஒவ்வொரு முறையும் எபிரேய மக்களை ஏமாற்றி வந்த பாரவோன் மன்னனைப் பணிய வைப்பதற்காக கடவுள், "மோசே, எகிப்து நாட்டின் மீது உன் கோலை நீட்டு" என்றார். இரளான வெட்டுக்கிளிகள் படைபடையாய்ப் புறப்பட்டன. இம்மாதிரி சம்பவம் இதற்கு முன்போ பின்போ நடந்த தில்லை. கல் மழைக்குத் தப்பிய பயிர் பச்சையையெல்லாம் வெட்டுக்கிளிப் பட்டாளம் தின்று தீர்த்தது. பாரவோன் மீண்டும் ஒரு நாடகத்தை அரங்கேற்றினான். 'நான் பாவி; வெட்டுக்கிளிகளை அகற்றும்படியாக ஆண்டவரிடம் பிரார்த்தியுங்கள்' என்று பாரவோன் மோசேயைக் கேட்டான். அவரும் ஜெபித்தார். வெட்டுக்கிளிப் பட்டாளம் அனைத்தும் செங்கடலில் வீழ்ந்தது. பாரவோன் இறங்கி வருவதாக இல்லை.

இதன் பிறகு வல்லமையுள்ள ஆண்டவர் எகிப்தியரின் இல்லங்களிலும், அவர்கள் வாழும் பகுதிகளிலும் இருள் பரவச் செய்தார். இஸ்ராயேலர்களின் பகுதிகளில் வெளிச்சம் விளையாடியது. இப்போது பாரவோன் மோசேயை நோக்கி, "நீ இங்கிருந்து அகன்று விடு; இல்லாவிட்டால் என் கைகளில் நீ சாகவே சாவாய்" என்றான். இறுதியாக பராவோனின் தலைப்பிள்ளை தொடங்கி எகிப்தியர்களின் தலைப் பிறப்புகளையும், விலங்குகளில் ஆண்பால் தலைப் பேறுகளையும் நீதியின் தேவனாகிய கர்த்தர் சாகடித்தார். பாரவோன், மோசேயையும் ஆரோனையும் அழைத்து "நீங்களும் உங்கள் மக்களும் இப்பொழுதே புறப்பட்டுப் போங்கள்" என்று அவசரப்படுத்தினான்.

நானூற்று முப்பது ஆண்டுகள் எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ராயேலர்கள் ஏறத்தாழ ஆறு லட்சம் பேர்கள், தங்களது மந்தைகளோடும், கன்றுகாலிகளோடும் பாலைவனத்தை ஊடறுத்து நடந்தார்கள். செங்கடலுக்கு அருகில் அம்மக்கள் வந்தபோது,



"அந்த வீட்டில் பூட்டை உடைத்து திருடினியா?"

"ஆமாம் சாமி, நல்ல பூட்டு, உடைக்கும்போது எனக்கே மனசு கேட்கலை!"

— கீழை அ. கதிர்வேல்

"அடிமைகள் எல்லோரும் விடுதலை பெற்று விட்டால் இனி ஊழியம் செய்வதற்கு எவர் உண்டு?" என்று பாரவோன் தனது படைகளோடும், பரிவாரங்களோடும் இஸ்ராயேல் மக்களை விரட்டிப் பிடிக்கத் தொடங்கினான். அம்மக்களோ பயந்து நடுங்கி மோசேயிடம், "நாங்கள் எகிப்தியர்களின் அடிமைகளாகவே இருந்துவிட்டுப் போகிறோம்; உயிர் பிழைத்தால் போதும்" என்று அழுதார்கள்.

அப்போது ஆண்டவர், "மோசே! உன் கோலைக் கடலின் மேல் உயர்த்தி கையை நீட்டி கடலைப் பிரிக்கக் கடவாய்!" என்றார். மோசேயும் ஆண்டவர் கட்டளையிட்டபடியே செய்தார். அப்போது ஆச்சரியப்படத்தக்க விதமாக செங்கடல் இரண்டாகப் பிரிந்தது; நிலம் தெரிந்தது. இஸ்ராயேல் மக்கள் தப்பித்தோம்; பிழைத்தோம் என்று வேகமாக நடந்தார்கள். அவர்கள் செங்கடலைக் கடந்து கரைக்கு வந்த போது, பாரவோன் அரசனும் அவனது படை பட்டாளங்களும் செங்கடலில் உண்டான பாதையில் பாதி வழிக்குக் கொஞ்சம் அதிகமாகக் கடந்திருந்தார்கள். கடலைப் பிளந்து அடிமைகளை மீட்கிற ஆண்டவரின் அற்புதத்தைக் கண்டும் மனதிளகாத பாரவோனையும் அவனது கூட்டத்தாரையும் அழிக்க எண்ணி, கடவுள் மோசேயிடம் "உன் கையை நீட்டு" என்றார். மோசே அவ்வாறே செய்தார். ஆண்டவரின் கட்டளைப்படியே செங்கடல் மீண்டும் ஒன்று சேர்ந்தது. ஆழக் கடலின் அடியில் பாரவோனும் அவனது பட்டாளப் படை வரிசைகளும் கண்ணிமைக்கும் நேரத்தில் மூழ்கடிக்கப்பட்டார்கள். இவ்வாறு ஆண்டவருடைய வல்லமையால் மீட்கப்பட்ட இஸ்ராயேலர்கள் "ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்; ஏனெனில் அவர் மாட்சியுடன் வெற்றி பெற்றார்" என்று பாடி ஆடிப் பரவசப் பட்டார்கள்.

(தொடரும்)



பெங்களூரிலுள்ள மனநலம் குன்றிய ஒரு பெண்ணுடன் அனுபம் கெர்.

நெஞ்சைப் பிழியும் நிகழ்ச்சிகளுக்கு ஓர் அனுபம் கெர்!

“உன்னுடைய ஆசை என்ன?” பதினெட்டு வயதுடைய கோவாவைச் சேர்ந்த அந்தப் பெண்ணைக் கேட்கிறார் அனுபம் கெர்.

அவள் முகத்திலே தயக்கம்...

“என்னவானாலும் சொல்லு. உன்னுடைய அபிமான நட்சத்திரம் சிரஞ்சீவியை சந்திக்க வேண்டுமா? அவரை அழைத்து வர என்னால் முடியும்”

“நான்... நான்...” மறுபடி தயக்கம்

“தயங்காதே... சொல்லு...”

“நான்... வாழ விரும்புகிறேன். சாவின் பிடியிலிருந்து தப்பிக்க விரும்புகிறேன்”

அனுபம் கெரின் முகத்திலே அனுதாபம் நெகிழ்ச்சி. காரணம் அந்தப் பெண் வாழ்க்கையின் கடைசி கட்டத்தில் இருக்கும் ஒரு புற்று நோயாளி.

வாராவாரம் ஞாயிறு இரவு தூர்தர்ஷனில், தேசிய ஒளிபரப்பில் ஒளிபரப்பாகும் மிஸ்டர் கோல்டு நிகழ்ச்சியில் ஒரு வாரம் இடம் பெற்ற காட்சி இது. படம் பிடிக்கப்பட்ட இந்தக் காட்சி, தூர்தர்ஷனில் ஒளிபரப்பானபோது, அதை அந்தப் பெண்ணால் பார்க்க முடியவில்லை, காரணம், அவர் அப்போது உயிரோடு இல்லை.

இன்னொரு வாரம், அனுபம் கெர், பரோடாவில், அன்னை தெரசாவின் மிஷனரீஸ் ஆஃப் சாரிடி அமைப்பின் முதியோர் இல்லத்துக்குப் போகிறார். அங்கே அவர் சந்திக்கிற ஒரு பெண்மணி, தமது இருபத்தி இரண்டாம் வயதில் கணவனை இழந்தவர். வறுமையுடன் போராடி, தமது இரண்டு மகன்களையும் படிக்க வைத்தார். வளர்ந்த மகன்களுக்கு வேலை கிடைத்தது. திருமணமானது. பெற்று வளர்த்த அன்னை, அவர்களுக்குப் பாரமாகி விட்டார்.

ஒருமுறை அந்தப் பெண்மணி நோய் வாய்ப்பட்டபோது, மருத்துவமனையில் சேர்த்து விட்டு, மறுநாள் காலை வந்து பார்ப்பதாகக் கூறி, வீட்டுக்குப் போன மகன்கள், போனவர்கள்தான். அதுமட்டுமில்லை, முகவரியை யாருக்குமே தெரிவிக்காமல், ஊரை விட்டே போய் விட்டார்கள். வறுமையில் உழன்ற பின், அந்தத் தாய் கடந்த ஒன்பது ஆண்டுகளாக, முதியோர் இல்லவாசி!


வாராவாரம் ஒவ்வொரு ஊராய்ச் சென்று, எதிர்ப்படும் மக்களிடமெல்லாம், 'யார் தெச்ச சட்டை? தாத்தா தெச்ச சட்டை' போன்ற குழப்பமான வாக்கியங்களை திருப்பிச் சொல்லும்படி கேட்டும், பொது அறிவு வினாக்கள் கேட்டும், சரியான விடையளிப்பவர்களுக்குத் தங்க நாணயம் பரிசளிக்கிறார் அனுபம் கெர். கூடவே, அவ்வூரிலுள்ள முதியோர் இல்லம் மனநல மருத்துவமனை, சேவை மையங்கள் என்று பல்வேறு இடங்களுக்கும் சென்று, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை டொனேஷன் கொடுப்பதோடு நெஞ்சைப் பிழியும் உண்மைக் கதைகளையும் அளிக்கிறார்.

நிகழ்ச்சியின் தயாரிப்பாளரும் அவரேதான். வாரத்துக்கு நாலு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறதாம். “அது பற்றி நான் கவலைப்படவில்லை; இந்த நிகழ்ச்சியின் மூலம் பல்வேறு தரப்பட்ட மனிதர்களையும் நான் சந்திக்கிற வாய்ப்புக் கிடைக்கிறதே. அதற்காக எத்தனை செலவு வேண்டுமானாலும் செய்யலாம்!” என்கிறார் அனுபம் கெர்.

— எம். பாரதி.

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு).

அந்த நாள் வரைக்கும் அங்குமிங்கும் மனதை நீ அலையவிடாதே!



"நாளை உனக்கு கல்யாணம் நடக்கும்
நல்ல மேடை கட்டி, தோரணம் போட்டு,
மேளம் கொட்டி, தாலிகட்டி
ஊரெல்லாம் வாழ்த்த வருமே
கையில பாலை ஏந்தி நெஞ்சில ஆசை கொண்டு
உன்னைத் தேடிவருவா கண்ணம்மா
காளையே காத்திரு
அந்த நாள் வரைக்கும் அங்குமிங்கும்
மனதை நீ அலையவிடாதே!"

" சபலம் எய்ட்ஸில் தொடங்கி மரணத்தில் முடியும்."

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு,
417, பாந்தியன் ரோடு, எழும்பூர்,
சென்னை - 600 008.
போன் : 8255467 / 8255261 / 8254917
மேலும் எங்களை அணுக:
24 மணிநேர ஹாட்லைன் தொலைபேசி எண்: 8256882 / 8256864

TNSACS/1013/97/ET

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துக்களுக்கு

ரூபாய் ஐந்து லட்சம் மதிப்புள்ள உஜாலா பரிசுகள்



உங்களுடைய கருத்துக்களை எங்களுக்கு எழுதவும்

இப்போது உஜாலாவின் டாம்ப்பர் - ப்ரூஃப் மூடியும், ஃபில்ஃபர் - ப்ரூஃப் டிராப்பரும் ஜோதி ஆய்வுக்கூடத்தில் டிசைன் செய்யப்படுகின்றன. உங்களைப் பாதுகாக்க அவை எவ்வாறு வேலை செய்கின்றன ?

இன்று, தின் லேயர் க்ரோமெடோகிராஃபி (TLC) மற்றும் காஸ் க்ரோமெடோகிராஃபி மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (GCMS) பரிசோதனைகளில் முன்னேற்ற நாடான ஜெர்மனியில் தடை செய்யப்பட்டுள்ள அமின்ஸ் இல்லாத ஒயிட்னர் உஜாலா-வுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. சருமத்தில் எரிச்சல் மற்றும் வாயில் பட்டால் விஷத் தீங்கு இல்லை என்று பரிசோதனையில் தெரிகிறது. மேலும் விஷத்தன்மையற்றது. அதோடு, உஜாலா பல இதர தனித்தன்மை வாய்ந்த குணங்களைக் கொண்டுள்ளது. அவை என்ன ?

உஜாலாவை உபயோகிப்பதற்கு சரியான முறை என்ன ?

விஞ்ஞான ரீதியற்ற ஒயிட்னர்களை நீண்ட நாட்களுக்கு உபயோகிப்பது ஆரோக்கியத்திற்கும், உடைகளுக்கும் நல்லதல்ல. ஆகவே அதுபோன்ற தயாரிப்புகளை உபயோகிக்கத் துவங்கியவர்கள் மீண்டும் உஜாலாவையே உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

Write to : Jyothy Laboratories (UJALA), 2- A, Singarayar Mansion, Abhirami Avenue, Meenambal Salai, K. Kannadasan Nagar, Madras - 600 118.